
கல்கி
KALKI 25.1.2004
ரூ.6.00
கோபியுடன் காதலா?
மனம் திறக்கிறார்
'மெட்டி ஒலி' விஜி
ஸ்பெஷல் புல்அவுட்
கல்கி

படிக்க...
பயன்பெற...
பாதுகாக்க...
ஸ்பெஷல்
புல் அவுட் பகுதி

41-53

மினி **கல்கி**






"தமிழ்ப்பற்று இல்லையா?"

—சுந்தர ராமசாமியுடன் சந்திப்பு

84-87



"தோற்றுப் போனாலும்..."

—டாக்டர் ராமதாஸ் பரபரப்புப் பேட்டி **8,9**

பொங்கல் ரிலீஸ் படங்கள்...12,96

25.1.2004 **கல்கி**

நடக்குமென்பார்: நடக்கும்!

மேஷம்

- புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அதனால நன்மை உண்டு.
- சிறு சிறு பிரச்னைகள், குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.
- புதிய வேலை முயற்சிகளுக்குப் பலன் கிடைக்கும்.
- வர வேண்டிய பணம் வந்து சேரும்.
- குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த கருத்து வேறுபாடு மறையும்.

ரிஷபம்

- துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- சிக்கலான காரியங்களையும் சாமர்த்தியமா செய்து முடிப்பீங்க.
- பணவசதி தேவைக்கேற்ப கிடைக்கும்.
- வேலை விஷயமாக சிலர் வெளியூர், வெளிநாடு செல்ல வாய்ப்பிருக்கு.
- பழைய கடன் தொல்லைகள் மறையும்.
- கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மிதுனம்

- தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.
- இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும்.
- எதிலும் அவசரம் வேண்டாம். பேச்சில் நிதானம் தேவை.
- புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது.
- வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும்.
- சிலர் புதிய வீடு, மனை, வாங்க வாய்ப்பிருக்கு.

கடகம்

- எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு.
- மனசுல துணிவு தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- வேலை விஷயமாக சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு.
- வியாபாரத்தில் இருந்து வந்த பண நெருக்கடி விலகும்.
- கொடுக்கல் வாங்கல் உதவும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

சிம்மம்

- எதிர்ப்புகள் மறையும்.
- அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும்.
- எதிர்பார்த்த பதவி உயர்வு, நிதி உதவி கிடைக்கும்.
- குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.
- பெண்களுக்கு இது அதிர்ஷ்டமான வாரம்.
- சொத்து விவகாரங்கள்ல நன்மை உண்டு.

கன்னி

- எதிர்பாராத பயணம் உண்டு.
- சிறு சிறு பிரச்னைகள், குழப்பங்கள் வந்து டென்ஷன் தரும்.
- எல்லோரிடமும் சுமுகமாகப் பழகுவது நல்லது.
- கடன் தொல்லை குறையும்.
- கொடுக்கல் வாங்கல்ல எச்சரிக்கை தேவை.
- எதிர்பாராத பயணம் உண்டு.

துலாம்

- பணவசதி தாராளமா இருக்கும்.
- புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால நன்மை உண்டு.
- இதுவரை தாமதமாகி வந்த கோரிக்கை நிறைவேறும்.
- வேலை விஷயமா வெளியூர் செல்லும் வாய்ப்பு இருக்கு.
- எதிர்பார்த்திருந்த பண உதவி வந்து சேரும்.
- சிலர் புதிய வீடு வாங்க, கட்ட வாய்ப்பிருக்கு.

விருச்சிகம்

- துணிவு, தன்னம்பிக்கை அதிகரிக்கும்.
- பிரச்னைகள், குழப்பங்கள் ஏற்பட்டு விலகும்.
- எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவது நல்லது.
- புதிய முயற்சிகளில் நன்மையுண்டு.

அக்னிசர்மா பக்கம் | ஜனவரி 21 முதல் 27 வரை



பெயர் : அப்பாஸ்
ராசி : தனுசு
பலன் : பண நடமாட்டம் அதிகரிக்கும்.

- குடும்பத்தில் சுபமங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு.
- வெளிநாட்டிலிருந்து எதிர்பாராத நல்ல செய்தி வந்து சேரும்.

தனுசு

- பண நடமாட்டம் தாராளமா இருக்கும்.
- அலுவலகத்தில் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.
- சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பிருக்கு.
- கடன் தொல்லை குறையும்.
- ஏற்றுமதி இறக்குமதியில் லாபம் கொட்டும்.
- கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும்.

மகரம்

- எதிர்ப்புகள் மறையும்.
- முக்கியமானவங்களோட சந்திப்பு நிகழும்.
- புதிய வேலை முயற்சிகள் நன்மை தரும்.
- வர வேண்டிய பணம் வந்து சேரும்.
- வீடு வாங்க, கட்ட வாய்ப்பிருக்கு.
- பெண்களுக்கு உற்சாகமான மனநிலை ஏற்படும்.
- கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நன்மை உண்டு.

கும்பம்

- எடுத்த காரியத்தில் வெற்றி உண்டு.
- எதிலும் அனுகூலமான போக்கு தென்படும்.
- வெளிநாடு செல்லும் முயற்சி அனுகூலமாகும்.
- தொழிலில் இருந்து வந்த குறுக்கீடுகள், சிக்கல்கள் மறையும்.
- கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு ஏற்படும்.
- பெண்களுக்கு இது உற்சாக வாரம்.

மீனம்

- யாரிடமும் அதிகமாகப் பேச வேண்டாம்.
- கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பிருக்கு.
- புதிய முயற்சிகளை ஓரங் கட்டுங்க.
- வெளிநாட்டுலயிருந்து நல்ல தகவல் வந்து சேரும்.
- என்னதான் வரவு வந்தாலும் செலவு கட்டுக் கடங்காது.
- கலைஞர்கள், படைப்பாளிகளுக்கு பெயர், புகழ் கூடும்.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

தமிழகத்துத் தாய்மார்களுக்கு சோனியா காந்தியைத் தெரிகிறதா இல்லையோ, 'மெட்டி ஒலி' விஜியைத் தெரியும்.

கோபி என்கிற கண்ணியமான கணவன் கிடைத்தும், அவரோடு சகஜமான தாம்பத்ய வாழ்க்கையைத் தொடங்க முடியாமல், காதலன் இளங்கோவனின் தொலைபேசி மிரட்டல்களில், தினம் தினம் துவண்டுபோன விஜிக்காக, தமிழகமே கறுப்பு பாட்ஜ் கட்டி துக்கம் அனுசரித்து வந்தது.

இப்போது விஜி சிரிக்கத் தொடங்கியிருக்கிறார். மனைவியின் காதல் விவகாரத்தை கோபியே கண்டுபிடித்து, "கடந்த காலக் காதலை விபத்தாக நினைத்துக் கொள்" என்று மன்னித்துவிட்டார். காதலன் இளங்கோவும் போலீஸ் என்கவுண்டரில் இறந்துவிட, 'அழுமூஞ்சி' விஜி, இப்போது வாய் நிறையச் சிரிப்போடு, உற்சாக விஜியாக உலா தொடங்கிவிட்டார். தொடரில் மட்டுமல்ல, நிஜ வாழ்க்கையிலும் கோபியுடன் காதல் என்று செய்திகள் வெளியாக, வம்பு பாப்கார்ன் கொறிக்க எண்ணி, விஜியைத் தேடிப் புறப்பட்டோம்.



கோபியுடன் காதலா?

'காவ்யாஞ்சலி' தொடருக்காக பிரசாத் ஸ்டுடியோவில் போடப்பட்டிருந்த பிரமாண்ட செட் வீட்டில் விஜி நடித்துக் கொண்டிருந்தார்.

"என்ன விஜி, 'மெட்டி ஒலி'யை விட்டு 'காவ்யாஞ்சலி' தொடருக்கு வந்திட்டீங்க" என்றதுதான் தாமதம், "என்ன சார், நீங்களும் விஜின்னு கூப்பிடுறீங்க" என்று செல்லமாய் கோபித்துக் கொண்டார். "உமா மகேஸ்வரின்னு அம்மா, அப்பா அழகா பேரு வெச்சிருக்காங்க. 'காவ்யாஞ்சலி' காரங்ககூட, என்னை விஜின்னு கேரக்டர் பேர் சொல்லிக் கூப்பிடுறாங்க. இது எனக்கு சந்தோஷமாவும், சமயத்துலே சங்கடமாவும் இருக்கு. என்னோட பேர் எனக்கே மறந்து போயிடும் போல இருக்கு" என்று சொல்லும் உமா ப்ளஸ் டூ படித்துவிட்டு, இப்போது மதுரை காமராசர் பல்கலையில் தொலைதூரக் கல்வியாக எம்.காம் படித்து வருகிறார். "அப்பா தக்ஷிணாமூர்த்தி, ராமண்ணாகிட்டே இணை இயக்குனரா வேலை செஞ்சவர். பெப்சி பிரச்னை வந்தப்போ, அப்பாவுக்கு பட வாய்ப்பு வந்து பண்ண முடியாமல் போயிடுச்சி. இருந்தாலும் இன்னும் அவருக்குள்ளே இயக்குனர் கனவு எரிஞ்சுகிட்டுதான் இருக்கு. அப்பாதான் நாங்க சின்னத்திரைக்கு

வரக் காரணமா இருந்தவர்'' என்று தனது குடும்பத்துக்கும், கலையுலகுக்கும் உள்ள தொடர்பைச் சொல்லும் விஜி, அறிமுகமான சின்னத் திரைத் தொடர் 'காலேஜ் ரோடு'.

''இந்தத் தொடரில் அக்கா வனஜாவுக்குத் தான் ('மெட்டி ஒலி' லீலா) முதலில் வாய்ப்புக் கிடைத்தது. அக்காவுடன் கல்லூரி மாணவியாக நடித்துக் கொண்டிருந்த ஒரு பெண், சினிமா வாய்ப்பு வந்ததால் திடீரென்று போய்விட, அவரது இடத்தில் நான் நடிக்க வேண்டி வந்தது. அக்கா அருகில் இருக்கும்போது என்ன கவலை என்று தைரியமாக நடிக்க ஆரம்பித்தேன்'' என்று சொல்லும் விஜியின் முகம், தமிழ் நேயர்களுக்கு ஓரளவு அறிமுகமானது பாக்கியராஜ் இயக்கிய 'கதையின் கதை' மெகா தொடர்



–மனம் திறக்கிறார் 'மெட்டி ஒலி' விஜி

மூலமாகத்தானாம்.

''அதன்பிறகு 'வானவில்', 'வெற்றிக்கொடி கட்டு' போன்ற திரைப்படங்களில் தங்கை பாத்திரங்களில் நடித்திருந்தாலும், 'மெட்டி ஒலி'தான் என்னை பிரபலப்படுத்தியிருக்கிறது. 'நீ எங்க வீட்டுப் பொண்ணும்மா'' என்று பாராட்டுகிறார்கள். இன்னும் சில தாய்மார்கள், ''உனக்கு எவ்வளவு நல்ல புருஷன். உன்னோட காதலைப்பத்தியும், அந்த ராஸ்கல் இளங்கோ பத்தியும் முன்னாடியே சொல்லியிருக்க வேண்டியது தானே?'' என்று கேட்கிறார்கள். இன்னும் சில பேர், 'நீ அழற சீனே ரொம்ப நல்லா இருக்கு!'' என்று நான் அழுவதை ரசித்திருக்கிறார்கள்'' என்று விஜி பாத்திரத்தின் வெற்றியைப் பற்றிப் பேசுகிறார் உமா.

''மற்ற மெகா தொடர்களின் கதைகளில் சினிமாத்தனமும், நாடகத் தனமும் அதிகம். ஆனால் 'மெட்டி ஒலி'யிலே நம்ம வீட்டில், பக்கத்துவீட்டில் நடிக்கிற சம்பவங்களை திருமுருகன் சார் யதார்த்தமாகக் காட்டுகிறார். தொடரில் நடிக்கும்போதே நானும் அக்காவும் ஸ்பாட்டில் பலமுறை நிஜமாகவே அழுதிருக்கிறோம். மறுபடி சீரியல் டி.வி.யில் வரும்போதும் பார்த்து, வீட்டில் எல்லோரும் அழுவோம். அவ்ளோ நெகிழ்ச்சியா, யதார்த்தமாக தொடர் போகுது'' என்று சொல்லும் உமா, விஜி பாத்திரத்தைப்போல நிஜ அழுமூஞ்சி கேரக்டர்தானா?

''நான் ரொம்ப ஜாலியான பொண்ணு. ரொம்ப அடக்கமா இருப்பேன். அதிகம் பேசவும் மாட்டேன். ஆனா தோழிகள், நாலு பேர் ஒண்ணா சேர்ந்துட்டா முடிஞ்சுது, ஒரே அரட்டை சிரிப்புச் கச்சேரிதான்'' என்று சொல்லும் உமா, 'மெட்டி ஒலி'யில் நிஜ அக்காவே தொடரிலும் அக்காவாக நடிப்பதில் என்ன அனுகூலம் என்கிறார்?

'வீட்டில் என்னோட இருக்கும் அக்கா, தொடரிலும் கூடவே இருக்கிறது பெரிய சப்போர்ட். நாங்க இருவரும் சேர்ந்து நடிக்கிற காட்சிகளில், எங்களுக்கே பிரச்னை வந்துட்ட மாதிரி, ஒன்றி, பதறி நடிச்சிருக்கோம்.

இயக்குனரே இத்தனை சீரியஸாகப் போக வேண்டாம்ன்னு சொல்லியிருக்கிறார்'' என்று கொஞ்சம் முகத்தில் வெட்கம் படரவிட்ட உமாவிடம், நீங்களும் திருமுருகனும் (விஜி-கோபி) தொடரில் நெருக்கமாக நடிப்பதாக நேயர்களிடமிருந்து கருத்துக்கள் வந்திருப்பதை கவனித்தீர்களா என்று காதல் விவகாரத்தைக் கிளம்பினோம்.

''வெறும் அழுகையை மட்டுமே காட்டிக்கிட்டு இருந்த தொடர்களுக்கு மத்தியிலே, 'மெட்டி ஒலி'யிலே எங்க ஜோடி ரொமான்ஸா வர்றது, நம்ம நேயர்களுக்கு ரொம்பப் புதுசா இருக்கிறதுனாலதான் இப்படியொரு பேச்சு வந்துருக்கணும்ன்னு நினைக்கிறேன். தவிர, சீரியலோ நடிகர்களோட சொந்த வாழ்க்கையையும் சேர்த்துப் பார்க்குறதுனாலேதான் இப்படி கிசுகிசு கிளப்புறாங்க'' என்று ஒரே போடாகப் போட்டார்.

"எனக்கு முன்னாலே அக்கா இருக்கா, அவளே சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு. அதுக்குள்ளே எனக்கு எப்படிக் கல்யாணம்?'' என்று பின் வாங்குகிறார். அப்படியானால் திருமுருகனோடு இப்போதைக்கு காதல் மட்டும்தானா?

''பல பத்திரிகைகளில் என்னைக் கேட்காமலேயே காதல் என்று போட்டு விட்டார்கள். இப்போது நீங்கள் கேட்பதால் சொல்கிறேன். இந்த வாய்ப்பைக் கொடுத்த திருமுருகன் சாருக்கு நன்றி சொல்கிறேன். அவர் என்னுடைய இயக்குனர். ஒரு ஆர்ட்டிஸ்டாக அவர்மீது மரியாதையும், கொஞ்சம் தொழில் பயமும் உண்டு. அவ்வளவுதான்'' என்று திட்டவட்டமாக மறுக்கிறார் உமா.

சரி... மெட்டி போட்டால் ஒலிக்காமலா போயிடும்?

- ஜெய்

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

அபூர்வ அரசியல்வாதி!

''ஓர் அரசியல்வாதிக்கு வேறு பல துறைகளிலும் ஈடுபாடு இருக்க வேண்டும். கல்வி, கலை என்று நாட்டம் இருக்க வேண்டும். வெறுமே தொகுதியில் நின்று வெற்றி பெற்று, நாற்காலியில் உட்கார்ந்திருப்பவர்களை எப்படிக் கவிழ்க்கலாம் என்றிருக்கக்கூடாது. ஒரு முழு நேர அரசியல்வாதியால் சமூகத்துக்கு அபாயமும் கெடுதியும் தான்''. இப்படிச் சொல்லியிருப்பவர் சமீபத்தில் காலமான ராமகிருஷ்ண ஹெக்டே.



சுதந்திரப் போராட்ட வீரரான ஹெக்டே சிறை சென்றிருக்கிறார். கர்நாடகாவின் முதலமைச்சராக 1983 மற்றும் 1989ல் இருமுறை பணிபுரிந்திருக்கிறார். பல மொழிகளில் புலமை உண்டு. மரண மிருதங்கா, ப்ரஜாசக்தி என இரண்டு கன்னட திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

''வாழ்க்கையில் பல ஏற்றத் தாழ்வுகளைச் சந்தித்திருக்கிறேன். நல்லது நடந்தால் குதிப்பதும், சோகம் வந்தால் உற்சாகம் இழப்பதும் இல்லை. கீதையிலிருந்து கற்றுக் கொண்ட பாடமும் அதுவே. அரசியலுக்கு இஷ்டமில்லாமல்தான் வந்தேன். ஆனால், பிறகு முழுமூச்சாக இறங்கிவிட்டேன். காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயண், ஆஸாத், வினோபாவே போன்ற மிகப் பெரிய தலைவர்களை அருகிலிருந்து பார்த்து நிறையவே கற்றுக் கொண்டிருக்கிறேன். என் உடலில் கடைசி அவுன்ஸ் எனர்ஜி இருக்கும் வரை, மக்களுக்காக உழைப்பேன்.'' - சமீபத்தில் நடந்த பிறந்தநாள் விழாவில் ஹெக்டேயின் சிறப்புரையிலிருந்து...

- லதா சேகர்

—டாக்டர் ராமதாஸ்

தொகுதிகள் ஒதுக்கீடு பற்றிய பேச்சு வார்த்தை துவங்கியுள்ள நிலையில், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மாநிலமெங்கும் உள்ள கட்சிப் பிரமுகர்களுடன் தைலாபுரம் தோட்டத்தில் தினசரி ஆலோசனை நடத்தி வருகிறார். 'கூட்டணியின் சார்பாக பிரதம வேட்பாளர் யார்?" "சோனியா வெளிநாட்டவர்", தேர்தலுக்குப் பின்பு எடுக்கப் போகும் நிலை, ஆகியவற்றைப் பற்றி முதன் முறையாக நம்மிடம் பேசினார் :

பா.ம.க. எந்த அணியில் சேர வேண்டும் என்ற நீண்ட குழப்பத்துக்கு என்ன காரணம்? அ.இ.மு.க. அணியோடு சேரும் எண்ணம் இருந்ததா?

கடந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து முதலில் வெளி வந்த கட்சி நாங்கள் தான். எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆசைகாட்டி, கட்சியை உடைக்க முயற்சி எடுத்தார் ஜெயலலிதா. அவரது இந்த முயற்சிக்கு எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் இருவர் பலியாகி விட்டார்கள். மேலும் மக்கள் விரோத ஆட்சி நடத்தும் ஜெயலலிதாவோடு எப்படி கூட்டணி சேர முடியும்? அ.இ.மு.க. தவிர மற்ற அனைத்துக் கட்சிகளுமே எங்களுடன் தோழமையோடு உள்ளன. இது தொடரும் என்று கடந்த மாதமே சொல்லியிருக்கிறேனே! அதிக சீட்டு கேட்டு அ.தி.மு.க.வை அணுக வேண்டிய அவசியம் எங்களுக்கு எழவே இல்லை.

காங்கிரஸ் கட்சி மத்தியில் பா.ஜ.க. தலைமையிலுள்ள என்.டி.ஏ. அரசு நீக்கப்பட வேண்டும் என்று சொல்லி தேர்தலைச் சந்திக்கிறது. நீங்கள் மாநிலத்தில் ஆட்சி செய்யும் அ.தி.மு.க.வுக்கு எதிரான வாக்கெடுப்பு என்று சொல்கிறீர்கள். முரண்பாடாக இருக்கிறதே?

அண்மையில் கூட மாநிலங்களில் நடைபெற்ற நான்கு மாநில சட்டசபைத் தேர்தல்கள், மத்திய அரசின் மீதான கருத்துக் கணிப்பு என்று தானே பா.ஜ.க.வால் பிரசாரம் செய்யப் பட்டது? அது போலவே, தமிழகத்தைப் பொறுத்தவரை மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத, மாணவர் ஆசிரியர் மற்றும் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகச் செயல்படும் அ.தி.மு.க. அரசைப் பற்றிய வாக்கெடுப்பாகவே இந்தத் தேர்தலை நாங்கள் கருதுகிறோம்.

உங்கள் கூட்டணியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி, மேடைகளில் என்.டி.ஏ.வை கடுமையாக விமர்சிக்கும்போது, நான்கு வருட காலம் மத்திய அரசில் பங்கு வகித்த உங்களுக்குச் சங்கடமாக இருக்காதா?

சோனியா காந்தி அவர்கள் செக்யுலர் முன்னணி அமைக்க வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருக்கிறார். இதற்கென பல்வேறு மாநிலங்களில் கூட்டணி அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். காங்கிரஸ் முதன்மைப்படுத்துவது மதச்சார்பற்ற தன்மையும், மனிதர்களிடையே நல்லிணக்கமும்தான். மற்றப் பிரச்னைகளை அது இந்தத் தேர்தலில் தள்ளி வைத்துள்ளது. எனவே, அதற்கு ஊறு விளைவிக்கிற பா.ஜ.க.வை அப்புறப்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் நினைப்பதில் தவறில்லை. அந்த அடிப்படையில்தான் பிரசாரம் அமையும். தனிமனிதத் தாக்குதல் இல்லாத விமர்சனங்கள்தான் எங்கள் மேடையில் இடம்பெறும்.

கடந்த நான்கு வருட பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. ஆட்சியில், இந்துத்வா சக்தி

"தோற்றுப்

பரப்பப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறீர்களா?

முரளி மனோகர் ஜோஷி போன்றவர்கள் மறைமுகமாக, பாடப்புத்தகங்கள், பல்கலைக் கழகங்கள், மற்றும் வேறு பல அமைப்புகளில் இந்துத்வா சக்திகளையும், சங்கதிகளையும் திணித்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லாமல் இல்லை.

ஜெயலலிதா அரசு தொடருமானால் தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் பேராபத்து ஏற்படும் என்று கூறியுள்ளீர்கள். அப்படியென்ன ஆபத்து?

தமிழக சட்டமன்றத்தில் தமிழில் பட்ஜெட் படிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. தமிழ் வளர்ச்சித் துறை என்ற ஒன்று ஜெயலலிதா ஆட்சியில் செயல்படும் அடையாளமே இல்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். சென்ட்ரல் ரயில் நிலையத்தை 'மத்திய புகைவண்டி நிலையம்' என்று தமிழில் சொல்ல வேண்டுமென்று மத்திய அரசு தீர்மானித்து, மாநில அரசின் ஒப்புதல் பெற கடிதம் எழுதியது. பதிலில்லை. நான்கு முறை நினைவூட்டல் கடி



போனாலும்...”

தம் அனுப்பியும் பலன் இல்லை. இதிலிருந்தே அவர்கள் தமிழ்ப்பற்று புரிகிறதே! தமிழ் உணர்வு உள்ள தலைவர்களை பொடாவில் பிடித்துப் போடுவது எந்த விதத்தில் சரியாகும்? பள்ளிகள், கல்லூரிகளில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுகிறது. அதைப் பாதுகாக்க வேண்டிய அரசு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

பா.ஜ.க. மிகத் தெளிவாக வாஜ்பாய் பிரதமர் என்று சொல்லி வோட்டுக் கேட்க இருக்கிறது. நீங்கள் யாரைப் பிரதமர் என்று சொல்லி வோட்டுக் கேட்பீர்கள்?

தேர்தலுக்கு முன்பு யார் பிரதமர் என்று அறிவிக்க வேண்டிய கட்டாயம் இல்லை. 1989ல் வி.பி.சிங் பிரதமர் ஆனார். தேர்தலுக்கு முன்பு அவரை முன் நிறுத்தி பிரசாரம் செய்யவில்லையே? 1996ல் தேவகவுடா பிரதமர். அவர் பெயரை முதலிலேயே சொன்னார்களா என்ன? அது ஏன்? 1998ல் வாஜ்பாய் பிரதமர். அவரை பிரதமர் என்று சொல்லியா பா.ஜ.க. வோட்டுக் கேட்டது? தேர்தல் வெற்றிக்குப்பின் பெரும்பான்மை எம்.பிக்கள் பிரதமரைத் தேர்ந்தெடுக்கலாம்.

சோனியா வெளிநாட்டவர் என்ற பிரச்னையை பா.ஜ.க. தேர்தல் பிரசாரத்தில் பலமாக எழுப்பவுள்ளதே? அதற்கு என்ன பதில் வைத்திருக்கிறீர்கள்?

சோனியா வெளிநாட்டில் பிறந்தாலும் திருமணத்திற்குப் பிறகு இந்தியர். அவர் தலைமை வகிக்கிற கட்சி, இந்தியாவில் துவங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் கட்சி. நமது அரசியல் சட்டத்தில் இதற்கு எந்தத் தடையும் இல்லை. தேர்தலில் இரண்டு முறை போட்டியிட்டு எம்.பி. ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் சோனியா. பா.ஜ.க.வின் வாதம் எடுபடாது. இந்திய வம்சாவழியினர் மொரீஷியஸ், ஃபிஜி ஆகிய நாடுகளில் பிரதமர்களாக இருந்திருக்கிறார்கள். அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற மாகாணத் தேர்தலில், லூசியானா மாகாண கவர்னர் பதவிக்கு பாபுஜிண்டா என்ற இந்தியர், குடியரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டிருக்கிறார். இந்தியராக விளங்கும் சோனியாவை பெரும்பாலான எம்.பிக்கள் பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுத்தால், அவர் அந்தப் பொறுப்பை ஏற்பதால் எந்தத் தவறும் கிடையாது.

சென்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு உங்கள் கட்சி சார்பில் வந்தவாசியில் தேர்ந்தெடுக்கப்பட்ட துரை, இப்போது உங்களை விட்டு விலகி நிற்கிறாரே. அந்தத் தொகுதியில் உங்களுக்கு பலவீனம் தானே!

இப்போதெல்லாம் எல்லாக் கட்சிகளிலும் கொள்கைப் பிடிப்பு, லட்சியப்பிடிப்பு உள்ளவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சுயநலம் மேலோங்கி வருகிறது. இது போன்ற தனி நபர் விலகலால் தொகுதியில் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் உண்டாகாது.

தேர்தலுக்குப் பிறகு உங்கள் கூட்டணிக்கு மெஜாரிட்டி கிடைக்காமற் போனால், பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏவுக்கு மீண்டும் ஆதரவு கொடுப்பீர்களா?

1998, 1999, 2001 தேர்தல்களில் நாங்கள் இடம் பெற்ற கூட்டணியே வெற்றி பெற்றது. எனவே எங்கள் கூட்டணி தோற்க வாய்ப்பே இல்லை. இருந்தாலும் ஒன்று உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். தேர்தலுக்குப் பிறகும் இதே கூட்டணியில்தான் நீடிப்போம். வாஜ்பாய்க்கு ஆதரவு கொடுப்பது என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

- ப்ரியன்

படம் : **ராஜன்**

“யாரு, செம்பியனா?”

‘பேசறேன்.’

“ஒரு நியூஸ் பார்த்தியா? ஜெர்மனில ஒருத்தன் சாலையோரம் நின்ற போலீஸ் கார்ல இருந்தவங்க கிட்ட போய், ‘என்னைக் கைது பண்ணுங்க’ன்னு கேட்டிருக்கான். ‘எதுக்கு’ன்னப்ப, ‘நான் அடுத்தடுத்து நாலு பாங்குகள்ல கொள்ளையடிச்சிருக்கிறேன், என்னைப் போலீஸ்ல யாருமே கண்டுபிடிச்சு கைது பண்ணலை. எனக்கு போர் அடிச்சுப் போச்சு, அதனால நானாகவே வந்து மாட்



செய்திகள்

டிக்கிறேன்’னு சொல்லியிருக்கான்!”

“ஆச்சர்யமாயிருக்கே...”

“என்னோட கேள்வி என்னன்னா...”

“சொல்லுங்க...”

“நம்முடைய அரசியல்வாதிங்க திரும்பத் திரும்ப தேர்தல்ல நின்னு ஜெயிச்சாலும் தோத்தாலும் மக்களைக் கொள்ளையடிக்கிறாங்களே, இவங்களுக்கு போர் அடிக்கலையே, ஏன்?”

“ஸாரி, ராங்நெம்பர்” என்று ஃபோனை வைத்துவிட்டு பிரதமருடன் ஈமெயில் தொடர்பு கொண்டேன்.

★ ★ ★

“அடல்ஜி, வணக்கம். ஆனாலும் இப்படி ஸேம் ஸைட் கோல் அடிக்கலாமா நீங்க?”

“என்ன பிரச்னை கிளப்புறே?”

“ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணமானவர்களுடன் தொடர்பு உள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்ட திமுகவுடன், சோனியா கூட்டணி அமைப்பது சந்தர்ப்பவாதம்’னு சொல்லிட்டீங்களே, நேற்றுவரை அதே தி.மு.க.வுடன் தானே நீங்க கூட்டணி வைச்சிருந்தீங்க?”

“அதுவா... அது...”

“வாக்கியத்துக்கு வாக்கியம் இடைவெளிவிட்டு யோசிச்சு யோசிச்சுதானே பேசுவீங்க!”

“ரொம்ப அதிகமா யோசிச்சுட்டேன் போலிருக்கு... இவங்க... அதாவது திமுக. அங்க போய்ச் சேர்ந்தது சந்தர்ப்ப வாதம்னு சொல்லியிருக்கணுமோ?”

“அப்பவும் உதைக்குங்க!”

“இப்ப உதை கேட்கிறது உனக்குத்தான்!”

“ஆஸ்திரேலியா ஒரு நாடு பாக்கி இருந்துச்சு. தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் பாதகமில்லை; தாற்காலிக காபந்து பிரதமராகவே போயிட்டு வந்துடுங்க; அரசுச் செலவிலே போக மறுபடி சான்ஸ் கிடைக்குமோ என்னவோ?”

“ஒரு கவிதை சொல்லட்டா?” என்று பிரதமர் ஆரம்பிக்கவும், கம்ப்யூட்டரை விட்டு எழுந்து ஓடினேன்.

★ ★ ★

பாக்கெட்டில் செல்ஃபோன் குலுங்கியது. எடுத்து, எச். ராஜாவுக்கு கால் போட்டேன். “என்னங்க, தலைவரைப் போலவே மாநிலச் செயலரும் ஸேம் ஸைட் கோல் போடறீங்க?”

“தலைவரைத் தனியாவிடக் கூடாதேன்ற கவலையில் ஏதாவது சொல்லியிருப்பேன்... விளக்கமா கேளு...”

“தோல்வி பயத்தாலதான் திமுக. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலேருந்து வெளியேறியதுன்னு சொல்லிட்டீங்களே; அப்போ, உங்க கூட்டணியிலே இருந்தா தோல்வி நிச்சயம்னு நீங்களே ஒப்புக்கிற மாதிரியில்ல ஆகுது?”

“அட, அதுக்கு அப்படி ஒரு அர்த்தம் இருக்கா?”

‘ஜெ. கூட அப்படி அர்த்தம் பண்ணிக்கலாமே!’

“நாங்க தனிச்சு போட்டியிடவும் தயாராயிருக்கோம்!”

“300ல 39 போனா பாக்கி எவ்வளவுங்க?”

திரிப்பது செம்பியன்!

"கொஞ்சம் கஷ்டமான கணக்கு; யோசிக்க வைக்கிறேன். அப்புறமா வா!"

* * *

"ஹை! நரேந்திரா, ஹவ் ஆர் யூ? தோசைத் திருவிழா எப்படி போய்க்கிட்டிருக்கு?"

"ஸுப்ரீமா நடந்துக்கிட்டிருக்கு. மார்ச் முதல் தேதி வரை உண்டு. தனுஷ் தோசை, சச்சின் தோசை, விருமாண்டி தோசை, பொடி தோசை, பொடேடோ தோசை..."

"நில்லுங்க, குற்றாலம் தோசை தெரியுமா? மிருதுவா, மல்லிப்பூ மாதிரி, வெள்ளை வெளேர்னு, நெய், எண்ணெய் எதுவும் விடாம வார்த்து, வயிற்றைக் கெடுக்காத, புரோட்டீன் சத்து குறையாத..."

"அடுத்த தோசை ஃபெஸ்டிவல்ல அதையும் சேர்த்துடுவோம். கொஞ்சம் ரெஸிபி கொடு..."

"அது ரசிகமணி வீட்டுத் தோசைங்க. குற்றாலம் முனிவரோட வாரிசுங்க, தென்காசியில் இருக்காங்க, கேட்டுத் தெரிஞ்சுக்குங்க."

"ஓகே" என்றார் மதுரை, ஸுப்ரீம் நரேந்திரா.

* * *

"கிருஷ்ணமூர்த்தி ஸார்! குட்மார்னிங்!"

"சட்டுன்னு விஷயத்துக்கு வா, ஐ ஆம் பிஸி."

"தெரியுங்க, பிரசாத்தைப் போட்டா நீங்க ராஜினாமா செய்ய நேரும்னு செய்தி பரவச் செய்ததாக..."

"அதெல்லாம் உன் கற்பனை. ஆனா பிரசாத் தலைமை ஈ.ஸி.யா வந்திருந்தா, என் ஸீனியாரிட்டி பாதிக்கப்படும். அப்ப என்ன செய்திருப்பேன்னு இப்ப சொல்ல முடியாது."

"எப்படியோ, 'தேர்தல் கமிஷனை கைக்குள்ளே போட்டுக்கப் பார்க்கிறாங்கன்ற அவப் பெயரிலிருந்து பி.ஜே.பி. தலைவருங்க தப்பினாங்க... சேஷன், லிங்டோ அளவுக்கு இல்லேன்னாலும் நீங்களும் கண்டிஷனாவே இருங்க..."

"கண்டிப்புடன் நடுநிலையாகவும் இருப்பேன். அதை எழுதிக்க" என்றார் டி.எஸ்.கே.

* * *

"சோனியாஜி, டீ பார்ட்டி எப்படி?"

"குலாப் ஜாமூன், சமோசா, மசாலா டீ..."

"உடன்பாடு?"

"சுபஸ்ய சீக்கிரம் ஏற்படும். பவார்ஜிக்கு இன்னும் சிலபேரைச் சரிக்கட்ட வேண்டியிருக்கு. நாடாளுமன்றத் தேர்தல்னாலும் மாநிலத்தின் நலனையும் கவனிக்க வேண்டியிருக்கு."

"எங்க பக்கம் அடல்ஜி தலைவரு; உங்க பக்கம் அநாமதேயம் தலைவருன்னு பிரசாரம் ஆரம்பிச்சுட்டாங்க. சீக்கிரமே முற்போக்கு முன்னணி மாநாடு நடத்தி, அதிலே தலைவரை அறிவிக்கக் கூடாதா?"



"முதல்ல முற்போக்கு முன்னணி முடிவாகட்டும், அதுக்கே இன்னும் நிறைய வேலை பாக்கி இருக்கு" என்று அவசரமானார் சோனியா.

* * *

"தேர்தல் வருதேன்னு மனமிரங்கி பொங்கலுக்கு வேஷ்டி சேலை விநியோகம் ஆரம்பிச்சீங்க, அதுலயும் ஊழல் புகார் கிளம்பிடுச்சே." என்று போயஸ் தோட்டத்துக்கு ஈமெயில் அனுப்பினேன்.

"எல்லாம் கருணாநிதியின் சதி. திமுக. ஆளுங்களுக்கு சொல்லிக் கொடுத்து, புகார் சொல்ல வைச்சிருக்காங்க. கலாட்டா பண்ணறாங்க, ஜனங்க என்னவோ கிடைச்சதை சந்தோஷமா வாங்கிட்டுத்தான் போறாங்க..."

"அந்த 'ஜனங்க' எல்லாருமே அ.தி.மு.க. அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக இருப்பதுதான் இடிக்கிறது!" என்று ஈமெயில் அனுப்பி, ஸம்மன்ஸ் எதிர்பார்த்துக் காத்திருக்கும்,

உங்கள்,

செம்பியன்



மலையாளத்தில் சக்கைப்போடு போட்ட 'க்ரோனிக் பேச்சிலர்ஸி'ன் ரீமேக்!

'தன் வாழ்க்கையில் பெண் வாசமே கிடையாது' என்று பிடிவாதமாக இருக்கிற ஹீரோவுக்குப் பின்னால் ஒரு ஃப்ளாஷ்பேக்! கிராமம், காதல், சொத்து ஆசை, கொலை, கைது, சாவு! இறுதியில் வழக்கம் போல் ஜெயிக்கிறார் ஹீரோ.

ஹீரோ விஜயகாந்த் என்பதால், அவருக்காக நான்கு அடிதடிக் காட்சிகள் முளைத்திருக்கின்றன. காலை சுழற்றிச் சுழற்றிப் பின்னுகிறார்.

ஹீரோவின் வீட்டுக்கு வந்து 'சார் ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா?' என்று கேட்கும் நாயகிக்கு, அடுத்த சில நாட்களிலேயே அவர் மீது காரணமேயில்லாமல் காதல் வந்து தொலைப்பது தமிழ் சினிமாக்களின் தலையெழுத்து!

ஹீரோவின் இளவயதுக் காதலியாக வரும் இந்திரஜா பாத்திரம், படையப்பாவின் நீலாம்பரியை ஞாபகப் படுத்தினாலும் அசத்தல் வில்லி! ஹீரோவின் அப்பாவாகவும் அண்ணனாகவும் வரும் லால், கச்சிதம்!

படத்தின் பெரிய




எங்கள் அண்ணா

பலம் வைகைப் புயல் வடிவேலு! (இந்தப் படத்தில் சூறாவளி என்று டைட்டில் போடுகிறார்கள்) இந்தச் சூறாவளியோடு பாண்டியராஜன், பிரபுதேவா கூட்டணியும் சேர்ந்து கொள்ள, கலகலப்பில் வயிறு புண்ணாகிறது. இது போதாதென்று 'தண்ணி பார்ட்டி'யாக பாஸ்கர் வேறு! அமர்க்களப் படுத்தியிருக்கிறார்கள்.

கிளைமாக்ஸ் காட்சியில் ஆனந்தராஜை பத்து நிமிடம் அடித்து நொறுக்கிவிட்டு, 'இவனோட அப்பாவக் கொன்னது யாருடா? சொல்லு' என்று ஹீரோ கேட்க, அவர் உண்மையைச் சொல்ல, இந்திரஜா அதிர்ச்சியாகி, ஹீரோவிடம் மன்னிப்புக் கேட்க...!

'இதை படத்தின் முதல் ஃபைட்டிலேயே ஆனந்த ராஜைப் புரட்டியெடுத்துக் கேட்டிருக்கலாமே' என்று உங்களுக்குத் தோன்றலாம்தான். அப்பவே அவர் உண்மையைச் சொல்லியிருந்தால் படம் இல்லீங்களே...!

- மொக்கராசு



புல்டோஸர் பி.ஜே.பி!

"வருகிற ஏப்ரல் மாதம் புதிய அரசு ஆட்சியில் இருக்கும்" என்று ஹைதராபாத்தில் நடந்த தேசிய பா.ஜ.க செயற்குழு கூட்டத்தில் வாஜ்பாய் அறிவித்தார். அவரது கட்சியினரோ, தேர்தலைத் தொடர்ந்து வாஜ்பாய் தலைமையிலான அரசே பாரதத்தை வழி நடத்தும் என்று முழங்கினர்.

ஆட்சியிலிருக்கும் ஒரு பிரதான கட்சிக்கு இத்தகைய தன்னம்பிக்கை தேவைதான். ஆனால், அந்தத் தன்னம்பிக்கை இதுவரை தங்கள் அரசு நிகழ்த்திய சாதனைகளின் அடிப்படையில் எழ வேண்டும். ஆனால், பா.ஜ.க அரசு, மக்கள் கவனத்தைக் கவர்வதற்காகக் கையாண்டு வரும் 'விளம்பர' 'வினியோக' யுக்திகளைப் பார்க்கையில், அக்கட்சி குறுக்கு வழியில் சென்று மீண்டும் அதிகாரத்தைப் பிடிக்கத் தயாராகியிருப்பதையே உணர்த்துகிறது.

நடப்பு நாடாளுமன்றத்துக்கு செப்டம்பர் 2004 வரை ஆயுள் உண்டு. ஆனால், வடமாநிலத் தேர்தல்களில் வீசிய பா.ஜ.க ஆதரவு அலையைப் பயன்படுத்திக் கொண்டு தேர்தல்களை முந்தி நடத்த முடிவு செய்துவிட்டது பி.ஜே.பி. பிப்ரவரியில் ஓய்வுபெறும் தலைமை தேர்தல் கமிஷனர் லிங்டோவின் இடத்தில் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள துணை கமிஷனர் கிருஷ்ணமூர்த்தியை நியமிக்காமல், தங்களுக்கு அனுசரணையான நபரை நியமிக்க முடிவெடுத்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. பா.ஜ.க., தான் விரும்பும் சமயத்தில், தான் விரும்பும் வகையில் தேர்தலை நடத்திக்




கல்கி



2004 ஜனவரி 25
சுபானு தை 11
மலர் : 62
இதழ் : 26


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



கொள்வதற்கான ஏற்பாடு இது என்பது தெளிவு.

தேர்தல் ஆண்டு என்பதால், 'இமேஜ்' வளர்க்கும் விளம்பரங்களை அரசின் செலவில் வெளியிட ஆரம்பித்திருக்கிறது. மாநிலத் தேர்தல்களையொட்டி, இவ்விளம்பரங்கள் வெளியிடப்படக்கூடாது என தேர்தல் கமிஷன் தடை செய்ய, அத் தேர்தல்கள் நடந்து முடிந்ததுமே அந்த விளம்பரங்கள் மீண்டும் தொடர்கின்றன. வரலாறு காணாத வகையில், மக்களின் வரிப்பணம் ஓர் அரசை விளம்பரப்படுத்துவதற்காகச் செலவிடப்பட்டு வருகிறது. பொதுவான 'இமேஜ்' வளர்க்கும் விளம்பரங்கள் தவிர, பல்வேறு துறைகளின் முழுப்பக்க விளம்பரங்களும் நாளிதழ்களில் இடம் பெற ஆரம்பித்து விட்டன. இவற்றில் பிரதமர், பா.ஜ.க. தலைவர்களின் படங்கள் உண்டு. தேர்தலை முன்கூட்டி நடத்துவது என்று முடிவெடுத்துவிட்டு, அதிகாரபூர்வமாக அதனை அறிவிப்பதற்கு முன், அரசின் செலவில் - அதாவது மக்கள் வரிப்பணத்தில் - பா.ஜ.க விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறது. ஆனால், நாடாளுமன்றத் தேர்தல்கள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப் படாததால், தேர்தல் கமிஷனால் இப்போது ஆட்சேபிக்க முடியவில்லை!

பா.ஜ.க.வின் தந்திரப் போக்கு, இதர விதங்களிலும் வெளிப்பட்டிருக்கிறது. ரூபாய் 12,000 கோடி மதிப்புக்கு வரிச் சலுகைகளும், சுங்கத் தீர்வையில் சலுகைகளும் திடீரென்று அறிவிக்கப்பட்டுள்ளன. இறக்குமதி சுலபமாகியிருக்கிறது; அயல்நாடுகளில் முதலீடு செய்வது எளிதாகியிருக்கிறது. தனி நபர்கள், கம்பெனிகளின் வருமான வரி எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் வரவேற்கப்படவேண்டிய நடவடிக்கைகளாகத் தோன்றும். ஆனால், அரசு வருவாயில் இத்தனை பெரிய தொகை துண்டு விழப் போகிறது என்னும்போது, அதை ஈடுகட்ட என்ன விதிமுறைகள் கையாளப்படும்...? இந்தக் கேள்வியை எழுப்பக்கூட வழியின்றி, நாடாளுமன்றத்தைக் கூட்டாமலே மத்திய அரசு இவ்வறிவிப்பைச் செய்திருக்கிறது. நாடாளுமன்ற விவாதத்துக்கோ, கருத்துப் பதிவுக்கோ இடம் தராமல் இவ்வாறு தான் தோன்றித்தனமாகப் பெருஞ்சலுகைகள் அறிவிப்பது ஜனநாயக விரோதம். அதையும் தேர்தல் நெருங்குகிற நேரத்தில் செய்வது, சட்டத்துக்குட்பட்ட அதர்மம்! அந்நியச் செலாவணி கையிருப்பு கணிசமாக உயர்ந்திருப்பதால்தான், சலுகைகள் அறிவிக்கப்பட்டதாகவும், சலுகைகளின் விளைவான தொழிற்பெருக்கத்தால் அரசுக்கு



வருமானம் கூடி, இழப்பை ஈடு செய்துவிடும் என்றும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இந்த முறையில் வருமானம் பெருகி ஈடு செய்ய நீண்ட காலம் ஆகும்; ஆனால், உடனடியாக பெருகக்கூடியது, சலுகைகள் கிடைத்த மகிழ்ச்சியில் தொழிலதிபர்கள் பா.ஜ.கவுக்குத் தரும் தேர்தல் நிதிதான்!

இரண்டாவது, பசுமைப் புரட்சிக்கென 50,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதும் தேர்தல் நோக்கில் செய்யப்பட்டுள்ள காரியமே! பல்லாயிரம் கோடி பெறுமானமுள்ள விவசாயக் கடன் வழங்க கிராம வங்கிகளுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. தேர்தல் அறிவிக்கப்படும்போது, பெரும்பாலான விவசாயிகள் அரசுக் கடன் பெற்ற மகிழ்ச்சியில் இருப்பார்கள். நிலத்தில் முதலீடாகும் பணம் திரும்பக் கிடைக்குமா, கொடுத்த கடனை அரசு திரும்பப் பெறுமா என்ற கேள்விகளுக்கு இடமின்றி, இந்த முடிவும் நாடாளுமன்றத்துக்கு வெளியே எடுக்கப்பட்டிருக்கிறது.

தொழில் - விவசாயப் பிரிவினருக்கான சலுகைகள் மூலம் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பை ஈடுகட்ட, அடுத்து வரும் அரசுதான் வரிகள் விதிக்கும். அப்போது நம் மீது திணிக்கப்படும் சுமை, தாளமுடியாததாக இருக்கும்! இந்தியா ஒளிர்வதற்குப் பதில் விழி பிதுங்கித் திணறும்!

தேர்தல் கண் கொண்டு செயல்பட்டுள்ள மத்திய அரசு, ஜனநாயக மரபுகளை ஒரு புல்டோஸர் போல் இடித்துத் தள்ளியிருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதே, முக்கிய நிர்வாக முடிவுகளை அலசி ஒப்புதல் தருவதற்காக ஏற்பட்டதுதான். எதிர்க்கட்சிகள் சொல்வதை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. பெரும்பான்மை பலம் கொண்டு, எதிர்க்கட்சியினரின் சிறந்த அறிவுரைகளைக்கூட நிராகரிக்கலாம். குறைந்தபட்சம், விவாதங்களுக்கும் மாற்றுக் கருத்துகளைப் பதிவு செய்வதற்கும் இடமளிப்பது ஒரு ஜனநாயக அரசின் கடமை. வாக்காளப் பெருமக்கள் அக்கருத்துகளை அறியவும், எடை போடவும் உரிமை பெற்றவர்கள். அந்த அடிப்படை உரிமையைக்கூட அவர்களுக்கு மறுத்திருக்கிறார்கள் பிரதமரும் அவரது சகாக்களும். பா.ஜ.க வோட்டுக் கேட்க வருகிறபோது, வாக்காளர்கள் இதை ஞாபகம் வைத்துக் கொள்வது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது! ○

ஆஹா! ரூ.10,000 பரிசு!

ஆஹா! ரூ 10,000 குவிஸ் போட்டி (7) முடிவுகள்

அனுப்பிக் குவிச்சுட்டீங்க கூப்பன்களை. அசத்திட்டீங்க போங்க! உங்க ஆர்வமும், ஆதரவும் உற்சாகம் தருது.

இந்த வாரக் குலுக்கலில் பரிசை வென்றவர்:

> வி. வெங்கட்ராமய்யர்
> 2/104. லெட்சுமி கிருபா
> ஜோதிட நிலையம்,
> அல்லூர் - 620 101

பிடியுங்க பரிசை!



ஆறுதல் பரிசு ரூ.100 பெற்றவர்கள்

1. பி.ஜே. குணசுந்தரி, சர்க்கார்பதி.
2. ஆர். விஜயராகவன், தஞ்சை - 9.
3. பி. ஜெயபிரகாஷ், சேத்துமடை
4. எல். கண்ணன், ஆரல்வாய்மொழி
5. பி. துரைசாமி, மதுரை - 2.
6. பிஜே. விக்னேஸ்வரி, வேட்டைக்காரன்புதூர்.
7. ஆர். கிதா ராஜகுமாரி, கோவை - 4.
8. கே.எஸ். கோமதி, நெல்லை - 11.
9. நவோதயா செந்தில், ராயன்பாளையம்.
10. கே.பி.எம். அமானுல்லா, பொள்ளாச்சி
11. வி. ஸ்ரீவித்யா, சென்னை - 87
12. கே. அருண் பிரசாத், கோவை - 1.
13. ஜி. கலாவதி, சேத்துமடை.
14. ஜி. ராஜலக்ஷ்மி சுதர்ஸன், சென்னை - 33.
15. சா. கணேசன், கூனியூர்.
16. ஏ. சங்கரன், நெல்லை - 1.
17. என். இந்திராணி, கல்லிடைக்குறிச்சி.
18. எஸ். சரிதா, பூச்சக்காடு.
19. கே. வேலுச்சாமி, சிறுநாயக்கன்பட்டி.
20. சச்சின் சக்திவேல், மயிலாடுதுறை.

குவிஸ் போட்டி (7) விடைகள்

1. 3 நாடுகளை எல்லைகளாகக் கொண்ட வடகிழக்கு இந்திய மாநிலம் **அருணாசலப் பிரதேசம்/ சிக்கிம்.**

2. ஷாஜகானாபாத் என்ற பெயரில் உருவான வட இந்திய நகரத்தின் தற்போதைய பெயர் **பழைய டெல்லி.**

3. ஐ.ஓ (I.O) என்னும் துணைக் கோளுக்குரிய கிரகம் **வியாழன்.**

4. 1985-ல் அமெரிக்காவில் கண்டறியப்பட்டு 'ஏஷியன் டைகர்' என்று பெயர் சூட்டப்பட்ட உயிரினம் **கொசு.**

5. விருமாண்டி படத்தின் இசையமைப்பாளர் **இளையராஜா.**

6. குமரி முனையில் வள்ளுவர் சிலையின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள குறள்களின் எண்ணிக்கை 133

வாழ்த்துகள்

பின்புறம் வில்போல வளைந்து சாய்வாக நடந்து சென்றபோது, என்னால் கேலி செய்யப்பட்டவர்தான், நான் நடித்த படத்தின் டைரக்டர், தயாரிப்பாளரான வாகினி ஸ்டுடியோ அதிபர் சக்ரபாணி என்று அறிந்தபோது எனக்குப் பேரதிர்ச்சி.

"சார்! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி, நீங்க நடந்து வந்துகிட்டிருந்தபோது யாருன்னு தெரியாம, உங்களைக் கிண்டல் பண்ணிட்டேன். தயவு செஞ்சு என்னை மன்னிச்சிடுங்க" என்று காலில் விழாத குறையாக அவரைக் கெஞ்சினேன்.

"அதை நான் எப்பவோ மறந்தாச்சு! நீ ரொம்ப நல்லா நடிக்கிறியே!" என்றவர், அடுத்தபடியாய், "உனக்கு எவ்வளவு பணம் பேசியிருக்கு?" என்று கேட்டார்.

"ஐந்நூறு ரூபாய்!"

"தமிழ்ல நடிக்கத்தானே ஐந்நூறு பேசியிருக்கு? நீயே தெலுங்குலயும், இந்த சீனைப்பண்ணிடு. இரண்டுத்துக்குமா சேர்த்து ஆயிரம் ரூபாய் வாங்கிக்கோ" என்றார்.

எனக்கு நடப்பது எல்லாம் கனவா? நிஜமா என்ற சந்தேகமே வந்துவிட்டது.

தமிழ், தெலுங்கு இரண்டு படங்களின் காட்சிகளும் எடுக்கப்பட்டன.

புரொடக்ஷன் மேனேஜர் ஜகன்னாதனைக் கூப்பிட்டு, ஆயிரம் ரூபாய்க்கு செக் எழுதிக் கொண்டு வரச் சொன்னார்.

நான், "சார்! சார்! செக்கெல்லாம் வேணாம்" என்றேன்.

என்னைப் பார்த்துச் சிரித்தபடி, "வாகினி பெரிய கம்பெனி. செக்கெல்லாம் திரும்பி வராது. பயப்படாதே!" என்றார்.

"அதுக்கு இல்லை சார்! எனக்கு அவசரமா பணம் தேவைப்படுது. அதனால, கேஷா கொடுத்தீங்கன்னா ரொம்ப சௌகரியமா இருக்கும்" என்றேன்.


"அப்படியா! சரி!" என்று சொல்லிவிட்டு, ஜகன்னாதனிடம், "காரில் இவரை அழைச்சுக்கிட்டு நேரே பாங்குக்குப் போய், செக்கைப் பணமா மாத்தி, இவரிடம் கொடுத்துவிட்டு, இவரையும் அவரது இடத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு வந்து விடு!" என்றார்.

அந்த ஆயிரம் ரூபாயை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. அந்தப் பணத்தில்தான் ஒரு பட்டுப் புடைவை, ஒரு தாலி, பிரவுன் கலரில் ஒரு பாண்ட் மூன்றும் வாங்கிக் கொண்டு நான் காதலித்த ரெஜினாவை,

* படம் : யோகா



மறக்க முடியாத ஆயிரம் ரூபாய்!



• 'படிக்காத பண்ணையார்' படத்தில்...
நன்றி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

பதிவுத் திருமணம் செய்து கொண்டேன்.

ஒரு நாள் ஆழ்வார்பேட்டை பகுதியில் அப்போது சினிமாக்களில் சிறுசிறு வேஷங்களில் நடித்துக் கொண்டிருந்த வீரப்பன் என்கிற நண்பருடன் ஒரு குறிப்பிட்ட தெருவில், வேடிக்கை பார்த்தபடியே நடந்து வந்து கொண்டு இருந்தபோது, "இங்கேயெல்லாம் நிற்கக் கூடாது. வா போயிடலாம்" என்றார்.

"இங்கே யார் இருக்காங்க? எதுக்காக இப்படி நடுங்கறே?"

"இங்கதான் வேலு மணின்னு பெரிய புரொடியூசரோட, சரவணா பிலிம்ஸ்' ஆபீஸ் இருக்கு. இங்கே நின்னு வேடிக்கை பார்த்தா, கூர்க்கா விரட்டுவான்"

"அதையும் தான் பாத்துடலாமே! இப்போ வறியா! நாம இந்த ஆபீஸுக்கு உள்ள போகலாம்?"

"வாணாம்பா.. வம்பாயிடப் போகுது"

"ஏய்... பேசாம வருவியா?" நான் மடமடவென்று 'சரவணா ப்லிம்ஸ்' காம்பவுண்டு கேட்டை நோக்கி நடந்தேன். கூர்க்கா "யார்?" என்று கேட்கும் முன்னே, "மிஸ்டர் வேலுமணி இருக்காரா?" என்று நான் முந்திக் கொண்டேன்.

"ம்... இருக்காரு" என்றான் கூர்க்கா இந்தியில்.

'விடுவிடு' என்று உள்ளே நுழைந்தேன்.

உள்ளே உட்கார்ந்திருந்தவரிடம் "மிஸ்டர் வேலுமணியைப் பார்க்கணும்?" என்றேன்.

"ம்... அதோ இருக்கிறாரே. அவர்தான்' என்று அவர் சுட்டிக் காட்டின திசையில் வெள்ளை வேஷ்டி, வெள்ளைச் சட்டையில் மிகவும் கண்ணியமான தோற்றத்தில் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

நேரே அவரிடம் போனேன். "வேலு மணி சார், நான் நாகேஷ்! நடிகன்! என்னைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் அல்லது தெரியாமலும் இருக்கலாம்." சின்ன இடைவெளி கொடுத்து விட்டு, "நான் உட்காரலாமில்லையா?" என்றேன்.

"ஓ! தாராளமாக உட்காரலாம்" என்றார்.

நாற்காலியில் உட்கார்ந்தவுடன், தடாலடியாக அவரது மேஜை மேல் இருந்த விலை உயர்ந்த சிகரெட் பெட்டியிலிருந்து ஒரு சிகரெட்டை அவர் அனுமதியுடன் எடுத்து, பற்ற வைத்துக் கொண்டு, ரொம்ப நிதானமான குரலில் பேசினேன்.

"சார்! நான் ஒரு செகண்ட் ஹாண்ட் கார் வாங்கலாம்னு இருக்கேன். காரின் சொந்தக்காரர் ஆறாயிரம் ரூபாய் சொல்கிறார். ஆனால் என்னிடமோ, மூவாயிரம் ரூபாய்தான் இருக்கு. மீதி மூவாயிரம் ரூபாயை நீங்க கொடுத்து உதவி செஞ்சீங்கன்னா, ரொம்ப சௌகரியமா இருக்கும். என் போன்ற நடிகர்கள், காரில் போனா, உங்களைப் போன்ற புரொடியூசர்களுக்கும் கௌரவமாக இருக்கும்."

அவர் மனசுக்குள்ளே, நிச்சயமாக, 'யார் இவன்! நடிகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, நம்மிடம் கார் வாங்கக் கடன் கேட்கிறானே!' என்று நிச்சயம் நினைத்துக் கொண்டு இருப்பார். ஆனாலும் அதையெல்லாம் அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"நீங்க கொடுக்கிற மூவாயிரம் ரூபாயை, நான் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். அல்லது உங்கள் படங்களில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். நடித்தே கடனைக் கழித்து விடுகிறேன்."

சில விநாடிகள் சிந்தித்தார். சட்டென்று கேஷியரைக் கூப்பிட்டார். "நாச்சிமுத்து,

இவருக்கு மூவாயிரம் ரூபாய் வேணுமாம் கொடுங்க" என்றார். அடுத்த சில நிமிடங்களில், மூவாயிரம் ரூபாயை எண்ணி எண்ணி என்னிடம் கொடுத்தார் கேஷியர் நாச்சிமுத்து.

வீரப்பனுக்கோ, ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "எப்படி நாகேஷ்! நீ பாட்டுக்கு தடாலடியா உள்ளே புகுந்து, வேலுமணி சாரிடமிருந்தே மூவாயிரம் ரூபாயை வாங்கிக்கிட்டு வந்திட்டே!" என்று மூக்கில் விரல் வைத்தார்.

இன்றைக்கு அந்தச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கிறபோதுகூட, எனக்குத் தோன்றுவது இதுதான். முன்பின் தெரியாதவர்தான். ஆனால் அவரை ஏமாற்ற வேண்டும் என்கிற எண்ணம் எனக்குக் கொஞ்சம் கூடக் கிடையாது. நேர்மையாக, நேரிடையாக அவரைக் கேட்டுப் பார்க்கலாம். உதவி கிடைத்தால் ரொம்ப நல்லது. உதவி கிடைக்கவில்லையா? போனால் போகட்டும். நமக்கு அதனால் என்ன நஷ்டம்? வேறு எங்கேயாவது முயற்சி செய்து பார்க்கலாம் என்கிற நேர்மையான அணுகுமுறைக்குக் கிடைத்த பலன் என்றுதான் நினைக்கிறேன்.

இதற்கிடையில் 'என்னடா, சித்ராலயாவிலிருந்து கொஞ்ச நாளாக கூப்பிடக் காணோமே! வேணுமானால், ஒரு நடை சித்ராலயா ஆபீசுக்கு நேரில்போய் பார்த்துவிட்டு வரலாமா? இல்லை, குறைந்த பட்சம் கோபுவுக்கு போன் பண்ணி, 'என்ன, நாகேஷ் என்று ஒரு நடிகன் இருப்பது நினைவில் இருக்கா? என்று கேட்கலாமா?' என்று நினைத்துக் கொண்டு இருந்தேன்.

அந்தச் சமயத்தில், திடீரென்று சித்ராலயாவிலிருந்து டெலிபோன் வந்தது. பேசினவர் கோபுவேதான்.

"நாகேஷ்! உனக்கு ஜாக்பாட் அடிச்சிருக்கு"

"நான் சீட்டுக்கட்டு ஆடுவேன். ஆனால் ரேஸ் பக்கம் தலைவைச்சுக்கூடப் படுக்க மாட்டேனே!"

"இது ரேஸ் ஜாக்பாட் இல்லை! சான்ஸ் ஜாக்பாட்! சித்ராலயா பேனரில் ஸ்ரீதர் ஒரு முழு நீளக் காமெடிப் படம் கலரில் எடுக்கப் போறாரு! அதுல உனக்குப் பிரமாதமான கேரக்டர். அதுல நீ நடிக்கணும்னா ஒரு கண்டிஷன்...' என்று சஸ்பென்ஸோடு நிறுத்தினார்.

(சிரிப்பு தொடரும்)



''என்னய்யா நீ... இழுபறியா பாதியிலே நிக்கிற திரைக்கதையை முடிக்கிறதுக்கு நல்ல கதாசிரியரைக் கூப்பிட்டு வான்னா டாக்டரைக் கூப்பிட்டு வந்திருக்க...?''

''இவரைப்பத்தி உங்களுக்குத் தெரியாது ஸார்... இழுபறியா இருந்த எத்தனையோபேர் கதையை இவர் முடிச்சு வச்சுருக்கார்!''

- சீ. இருளப்பசாமி



''இன்னிக்கு உங்க ராசிபலன்படி நாள் பூரா தண்டச் செலவுதான் ஆகுமுங்க!''

''அப்படீன்னா... இதுக்கு நான் உமக்குத் தரப்போற காசும் தண்டமாய்யா?''

- கிரிஜா மணாளன்

''அவங்கெல்லாம் நம்ம கல்யாணத்துக்கு நாயனம் வாசிக்க வந்தவங்க. அவங்ககிட்டேயெல்லாம் மொய் கேட்கறது ரொம்பத் தப்பு. வாங்க இந்தப் பக்கம்..!''

- ஜெ. மாணிக்கவாசகம்



ரவுண்ட்ஸ் பாய்



• கலாபவன் மணி

கெட்டி படு சுட்டி!

"'படத்தின் தலைப்பை மாற்று' என்று ஆர்.எஸ்.எஸ், சிவசேனா ஆட்கள் நீதிமன்றத்துக்குப் போகட்டும்!' அதன் பிறகு தலைப்பை மாற்றிக் கொள்ளலாம் என்ற தைரியத்தில்தானே படத்துக்கு 'அயோத்தியா' என்று பெயர் வைத்திருக்கிறீர்கள்?" என்று இயக்குனர் ஜெயபிரகாஷைக் கேட்டால், "கதையே அந்த எரியும் பிரச்னையின் சாயலோடு இருக்கும். பின்னணியில் காதல்" என்று பீதியைக் கிளப்புகிறார். அயோத்தியாபுரி என்ற கிராமத்தில் நடக்கும் கதை. காதலர்கள் வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள். சர்ச்சைக்குரிய கட்டடத்தை இடிக்க வரும் ஆட்களைத் தடுத்து நிறுத்துகிறார்கள், அங்கே தினசரி சந்திக்கும் காதலர்கள்... என்று நகர்கிறதாம் கதை.

இன்னொரு இராமர் - சீதை கதையைப் பாருங்கள்

"இராமாயணத்தில் சீதையைச் சிறையெடுத்தவன் இராவணன். நம்ம படத்தில் சீதையைச் சிறையெடுப்பவன் இராமன்" என்கிறார் 'நகுலன்' படத்தின் இயக்குனர் இராஜா. ஏ.வி.எம்மின் 'அன்பே அன்பே', 'ஸ்ரீ' படங்களின் கதை, வசன கர்த்தா. அரைத்த மாவையே அரைத்தால், தியேட்டருக்கே வர மாட்டார்கள் என்று தெளிவாகப் பேசுகிறார்.

இந்தப் படத்தின் நாயகனைப் பார்த்து வில்லன் மாதிரி இருக்கிறாரே என்று அதிர்ந்து போய் விடாதீர்கள். தங்கர்பச்சானின் 'தென்றல்' படத்தில் முக்கியப் பாத்திரமொன்றில் நடித்திருக்கும் செந்தமிழ் என்பவர்தான் ஹீரோ. கதைக்கு ஏற்ற கதா நாயகனாக இவரைப் பொருத்தியிருக்கிறார்களாம். இவருக்கு ஜோடி உமா. 'சூரி', 'தென்றல்' படங்களின் வரிசையில், உமா சுறுசுறுப்பாக ரவுண்ட்



• நகுலனாக செந்தமிழ்



• 'அயோத்தியா'



• 'சிங்காரச் சென்னை' - அபிநய், ரதி

தொடங்கி விட்டார்.

மம்முட்டியிடம் பதினெட்டு வருடங்களாக பர்ஸனல் காஸ்ட்யூமராக இருந்தவர், கதை, திரைக்கதை வசனம் எழுதி தயாரிப்பாளராகவும் அவதாரம் எடுத்திருக்கிறார். படம்: சிங்காரச் சென்னை. கிராமத்தை விட்டு சென்னைக்கு ஓடி வரும், காதல் ஜோடி ஒன்று 'மொட்டைக் குமார்' என்கிற ஆட்டோ டிரைவரிடம் மாட்டிக் கொண்டு படுகிற அவஸ்தைகளும், பிரச்னைகளும்தான் கதை. மொட்டைக் குமாராக கலாபவன் மணி செம ஸ்கோர் பண்ணியிருக்கிறாராம். கலகலப்பாகக் கதை சொல்ற அந்த இயக்குனர் யாருப்பா? தங்கர்பச்சானின் இணை இயக்குனர் நகுலன்!

'இயற்கை' படத்தில் வெளுத்து வாங்கிய ராதிகா எங்கே போனார் என்று கோடம்பாக்கமே தேடிக் கொண்டிருக்க... ரகசியம் கசிந்து விடாமல் 'வர்ண ஜாலம்' படத்தில் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக நடித்துக் கொண்டிருக்கிறார்.

"'இயற்கை' வெளியான பிறகு நிறைய பட வாய்ப்புகள் வந்தன. அதில் டூயட் மட்டுமே பாடும் கதாநாயகி வேஷம். ஐந்து படங்களில் ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆட அழைப்பு. ஐந்து மட்டுமே என் நடிப்புத் திறனுக்குத் தீனி போடும் படங்கள். அவற்றை மட்டுமே ஒப்புக் கொண்டேன். அதில் ஒன்றுதான் வர்ணஜாலம்" என்கிறார் குட்டி ராதிகா. வர்ணஜாலத்தில் ஸ்ரீகாந்த் போலவே வில்லத்தனம் செய்கிற பாத்திரத்தில் கலக்கியிருக்கிறாராம்.

• 'வர்ணஜாலம்' - குட்டி ராதிகா



புக் டெஸ்க்

ஸ்ரீ ராமானுஜர் - வாழ்வும் தொண்டும் - ஜெகாதா

"என் தாகத்துக்கு மோர் கொடுத் திருக்கிறாள். இவளை மோட்சத்துக்கு அனுப்பி வை" - என்று திருவேங்கட வனுக்கே உத்தரவு போடவும், "ராம ப்ரியா வா" என்று அழைத்தவுடன் பஞ்சலோக விக்கிரக நாராயணனை எழுந்தோடி வந்து மடியில் அமரச் செய்யவும், கல்லாத பொல்லாத வேடுவ மூர்க் கனை, நல்லான் சக்கரவர்த்தி என்று வைண வாச்ரமத்தில் வல்லானாக ஆக்கவும், வேறு யாரால் முடியும்? ஸ்ரீ வில்லிபுத்தூரின் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி 'எம் அண் ணாவே' என்று அன்பொழுக அழைத் தாளே, அந்த ஸ்ரீ ராமானுஜரால்தான் முடியும். வைணவத்தின் பாதையையும், பார்வையையும் அடியோடு மாற்றிப் போட்ட உடையவரின் உன்னத வர லாறு.









ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 24. கிருஷ்ணா தெரு, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 35/-

மலைவாழ் மக்களும் மானுட நேயமும் - எஸ். குலசேகரன்

மலைபடு பொருள்களின் வரிசை யில் காடும், அருவியும், தேனும், தினையும், விலங்கும் பறவையும் போல, மலைவாழ் மக்களும் சேர்ந்து, மனித வெளிப்பாடு இன்றியே மரங்களாய், செடி கொடிகளாய்க் கிடப்பதை வெளிக் கொணர்ந்த கு.மா. கோதண்டத்தின், மனித நேயக் கதைகளைக் குறித்த திறனாய்வு.

அமிழ்தம் பதிப்பகம், 15. முத்துப்பிள்ளை தெரு, வேலூர் - 1, விலை ரூ. 45/-

இந்தியாவைப் பற்றிய அறிவியல் - வினா - விடைகள் - கே.எஸ். சுப்ரமணி

உலகத்தில் போராட உன்னை அறிந்திருக்க வேண்டும். உயரும் வழி காண ஊரையும் நாட்டையும் தெரிந்திருக்க வேண்டும். அறியவும், தெரியவும், புரியவும் ஆயிரம் விஷயங்கள் உண்டு நம் நாட்டில். ஓரளவேனும் தெரியவும், நாட்டின் உண்மைகள் கொஞ்சம் புரியவும், வாசிக்க வேண்டிய நூல்.

மணிமேகலை பிரசுரம், 7. தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17, விலை ரூ. 40/-

திருக்குறள் - புதுக்குறளுரை - ஏ.ஆர். மில்லர்

குறளுக்கு விளக்கம் கூற வந்தவர்கள் 'கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள்' என்றார்கள். விரிகடல் பொருளும் வரை உயர் பெருமையும் கொண்ட குறளுக்கு, இரு வரிகளில் பொருள் வடிக்க, இறை அருள் மட்டுமின்றி, தமிழ் அருளும் வேண்டும். அவை கிட்டியதால் ஏழு கடலிலிருந்தும் குவளை குவளையாக பொருள் எடுத்துத் தரும் அரிய முயற்சி. பாராட்டவும், பாதுகாக்கவும் வைக்கக்கூடிய பதிப்பு.

நோவா கிராபிக்ஸ், ராஜாக்கமங்கலம் ரோடு, ராமன்புதூர், நாகர்கோவில் - 2, விலை. ரூ.30/-

இராமாயணம், சுவாமி அபயானந்த ஜிதாஸ்

ஒரு காதிலிருந்து இன்னொரு காதுக்குப் போகும் போதே, விஷயங்களுக்கு அழகு என்ற நினைப்பில் அலங் காரங்களைப் பூட்டி விடுவது மனித இயல்பு. வால் மீகிக்குப் பின் சீதாராமனைச் சிந்தையில் இருத்தியவர் கள், கற்பனை வளர்த்துக் கவிதை பாடியதில், கால்ங்காலமாய் ரசனை வளர்ந்துதானிருக்கிறது. என்றாலும், அசல் எது என்று தெரிந்தால்தானே அலங்காரம் எது, என்பது தெரியும்? ராமாயணத்தை ராமாயணமாகவே, நழுவாமல், தழுவாமல், வழுவாமல் வடித்த தொகுப்பு.

இலக்குமி நிலையம், 115. கெளடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14, விலை. ரூ. 120/-

- விஷ்வக்

ஸ்ரீ விஷம் தீர்த்த விநாயகர் நற்பணி மன்றம்

SRI VISHAM THEERTHA VINAYAGAR NARPANI MANDRAM

Kannarakudi, Sickinaickenpet Post,
Tirupanandal Via, Tanjore Dt. - 612 504

அருள் மிகு அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ அகஸ்தீவரர், லக்ஷ்மி நாராயணப் பெருமாள் மற்றும் ஸ்ரீ விஷம் தீர்த்த விநாயகர் திருக்கோவில்கள் கன்னாரக்குடி, திருப்பனந்தாள் வழி, கும்பகோணம் அருகில் தஞ்சாவூர் மாவட்டம்.

திருப்பணிக் கைங்கர்யம்

அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

கன்னாரக்குடி கிராமத்தில் எழுந்தருளியுள்ள மேற்படி திருக்கோவில்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவை. இந்தத் திருக்கோவில்கள் மிகவும் சிதிலமடைந்து பாழடைந்து போய் பராமரிப்பு இல்லாமல் இருந்தபடியால் உள்ளூர் மக்களும் வெளியூர்களில் வசித்து வரும் இவ்வூரைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்டு இக்கோவில்களை முற்றிலுமாகப் பழுது பார்த்து திருப்பணி வேலைகளைச் செய்வதாகத் தீர்மானித்து, அதன்படி 14.3.2003 அன்று பாலாலயம் செய்வித்து திருப்பணி வேலைகள் தொடங்கி மிக திருப்திகரமாகவும் நல்ல முறையிலும் நடைபெற்று வருகின்றன. இது வரை சுமார் ரூ. 10 லட்சத்திற்கு மேல் வசூல் செய்து 80 சதவிகித வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் சிவன் சன்னதியில் கட்டுமானங்களை முடிப்பதற்கும், மஹா மண்டபம், பிராகார தரை சமனிட, சுற்றுச் சுவர் முடிப்பதற்கும், வர்ணம் பூசுதல் மற்றும் இதர சில்லரை வேலைகளையும் முடிப்பதற்கும் நிதி உதவி தேவைப்படுகிறது.

இதனிடையே இந்தத் திருக்கோவில்களுக்கு எல்லா வேலைகளையும் முடித்து, பெரியோர்கள் ஆசியுடனும், பகவான் கிருபையுடனும் நிகழும் சுபானு வருஷம் பங்குனி மாதம் 18ம் தேதி, (31.3.2004) புதன் கிழமை அன்று மஹா கும்பாபிஷேகங்கள் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள கட்டுமானப் பணிகளைச் செய்து முடிப்பதற்கும் இத்திருக்கோவில்களுக்கு உத்ஸவ விக்ரகங்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், கும்பாபிஷேகங்களை மிகச் சிறப்பான முறையில் நடத்தி முடிப்பதற்கும் இன்னும் சுமார் ரூ. 5 லட்சம் வரை நிதி உதவி தேவைப்படுகிறது. இதைக் கண்ணுரும் மெய்யன்பர்களும், பக்த கோடிகளும் தங்கள் குடும்ப க்ஷேம ஐஸ்வர்யங்களை உத்தேசித்து முடிந்த அளவு பணம் மற்றும் பொருள் உதவிகளை அளித்து இந்தப் பணிகள் யாவும் செவ்வனே முடிவுற்று யாவரும் சகல சௌபாக்யங்களுடனும், லக்ஷ்மி கடாக்ஷத்துடனும் வாழ வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு
கிராமவாசிகள் மற்றும்
திருப்பணிக்குழு உறுப்பினர்கள்

கன்னாரக்குடி,
10.1.2004


இத்திருப்பணிக்கு நன்கொடை மற்றும் பொருள் உதவி செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1. Sri V. Gopalan, 33, Fourth Main Road, Kasthurba Nagar, Adyar, Chennai - 600 020. Ph: 24413896
2. Sri S. Lakshmi Narayanan, 27, Baktha puri Street, Kumbakonam - 612 001. Ph: (0435) 2432239
3. Sri S. Rangarajan, V.A.O. Kannarakudi, Sickinaickenpet Post, Tirupanandal Via, Tanjore Dt. - 612 504. Ph: (0435) 2456550

DD / Cheque may be drawn in favour of "SRI VISHAM THEERTHA VINAYAGAR NARPANI MANDRAM" account at City Union Bank, Kumbakonam.

நேசமிகு சிறுகதை


தூங்காத இரவு!



ஒரு வழியாக ஹைதராபாத் இரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தேன். சென்னைக்குச் செல்லும் சார்மினார் இரயிலில் ஏறி, பெட்டிகளை இருக்கைக்கு அடியில் நல்ல இடமாகப் பார்த்து வைத்து, சங்கிலி-பூட்டு சகிதம் பாதுகாப்பை உறுதி செய்துவிட்டு, கம்பி பிடித்து மேலே ஏறி, மேல் பர்த்தில் போர்வை, புத்தகம் சகிதம் கால் நீட்டிப் படுத்தாகிவிட்டது. எப்பொழுதும் கீழே அமர்ந்து, நாலு பேரிடம் கதையடித்துவிட்டு, எல்லா இறக்கங்களிலும் இறங்கி ஏறி பயணம் செய்யும் நான் - இம்முறை ம்ஹூம்! ஒன்றுமில்லை. எல்லாம் வேலைக் களைப்பு. நல்ல வேளையாக வசதியாக மேல் பர்த்தாக அமைந்துவிட்டது.

ஆனால் கீழே இருந்த குடும்பத்தைப் பார்த்தால், இறங்கி கதையடிக்கலாம் போல இருந்தது. அழகான கணவன், மனைவி. அவர்கள் அழகின் அச்சாக இரு பெண் குழந்தைகள். உயரமும், பேச்சையும் வைத்துப் பார்த்தால், எட்டு வயதும் ஐந்து வயதுமாக இருக்கும். இரண்டும் ஓடும் இரயிலின் ஜன்னல் ஓரத்தில் கண்கள் விரிய வெளியே பார்த்த வண்ணமும், ஏதேதோ கேள்விகள் கேட்ட வண்ணமும் இருந்தன. அதற்கு, பெற்றோர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு அலுத்துக் கொள்ளாமல் பதிலளித்தது, மகிழ்ச்சியாக இருந்தது.

ஆயிற்று! இரயில் கிளம்பி ஒன்றிரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. வெளியே இருட்டிவிட்டிருந்தது. இனிமேல் அனைவரும் தூங்



கும் முனைப்பில் ஈடுபடுவதுதான் பாக்கி.

"அம்மா, எங்கேம்மா படுக்கப் போறோம்?"

"இங்க தாண்டா, அந்த சைடு இரண்டு பர்த்தும் நம்மது. அப்புறம், இங்க இந்த கீழ் பர்த்தும், நடு பர்த்தும்."

"அம்மா, நான் உன் கூடத்தான் படுத்துப்பேன்" - என்றது ஒரு குட்டி.

"நான்தான் அம்மா கூட படுத்துப்பேன்" - இது மற்றொரு குட்டி.

"சரி, அப்போ நான் அப்பா கூட"

"அப்படீன்னா நானும் அப்பா கூட" - இரண்டும் சண்டை போட்டன.

"யாரும் யார் கூடவும் தூங்கப் போறதில்லை. ஏன்னா, நீயே பாரு, இது எவ்வளவு சின்னதா இருக்கு" - என்றார் அப்பா, இருக்கையைச் சுட்டிக் காட்டி.

"அப்புறம் எல்லோரும் கீழே விழுந்து கீழேதான் படுத்துப்போம்" - என்று தொடர்ந்தார் சிரித்தபடி.

குழந்தைகள் இரண்டும் அப்பா, அம்மாவின் அன்புக்குச் சண்டை போடுவது சந்தோஷமாக இருந்தது.

"சரி, உங்களுக்கு சைடு பர்த்து. அப்பாவும் அம்மாவும் இங்க்



சிங்கப்பூரில் சீயான்!

'சீயான்' விக்ரமுக்கு, சிங்கப்பூரில் ஏக மவுசு! பூப்ஸி பாப்பாவிலிருந்து பொய்ப்பல் பாட்டி வரை, 'சாமி'க்கு ஓ போடும் ரசிகர்கள் எக்கச்சக்கமாம்!

விடலாமா? இந்த வாய்ப்பை விடலாமா?

விக்ரம் நடித்த படங்களின் சூப்பர் ஹிட் பாடல்களுக்கு, விக்ரமுடன் இணைந்து ஜோ, ரீமா, கிரண், சாயா சிங் என அழகுக் கிளிகள் ஆடும் மெகா ஸ்டார் நைட் நிகழ்ச்சி, சிங்கப்பூர் எக்ஸ்போ ஸ்டேடியத்தில் நடக்கிறது. அதை தடபுடலாக ஒளிப்பதிவு செய்து, ஒளிபரப்ப இருக்கிறது ஜெயா டி.வி.

அப்ப, குடியரசுதினத்தன்று தூளா பொழுது போயிடும்! - ஜெ

படுத்துப்போமாம். மீனுக்குட்டி சொன்னா கேளுடா... நீங்க அங்க சமத்தா படுத்துப்பீங்களாம். நான் கதை சொல்லுவேனாம்.''

- அம்மா சொன்னவுடனே "ஐய்யா... கதை" - என்றது மீனுக்குட்டி.

பெரிய பெண் கம்பியைப் பிடித்து மேலே ஏற அப்பா உதவி செய்தார். அம்மா கீழ் பெர்த்தில் அமர்ந்து கொள்ள, சின்னது அவர்கள் மடியில் படுத்துக் கொண்டது.

"அம்மா... எனக்கும் உன் மடியில படுத்துக்கணும்'' - பெரியவள் கோபப்பட்டாள்.

"இந்தா என்னோட கையைத் தொட்டுக்கோ!'' - அம்மா கீழே இருந்தபடியே மேலே கைநீட்டினாள்.

அப்பா வந்து பக்கத்தில் நின்று பெரியவளைத் தட்டிக் கொடுத்தார்.

"மீரா கண்ணுகிட்டே அப்பா நிற்கிறேன் இல்ல" - என்றார். அது திருப்தியடைந்தது.

"அம்மா, கதை!" என்றது சின்னது. அவர்களின் அம்மா அற்புதமாகக் கதை சொல்லத் தொடங்கினாள்.

அம்மாவும், அப்பாவும் குழந்தைகளின் மேல் அன்பைப் பொழிவதும், குழந்தைகள் அதற்கு இணையாக அன்பைப் பொழிவதும் - என்ன அருமையான விஷயம் இது!

கதை சொல்லி முடிப்பதற்குள் குழந்தைகள் தூங்கிப் போயிருந்தன. மடியில் படுத்திருந்த குழந்தையைத் தூக்கி கீழே படுக்க வைத்துவிட்டு எழுந்தாள் அம்மா. அப்பா அதற்குள் நடு பர்த்தைப் போட்டுவிட்டார். கையில் புத்தகத்துடன் கால் நீட்டிக் கொண்டார். அவரது மனைவி கீழேயிருந்து போர்வையை எடுத்துக் கொடுத்தாள்.

"என்னங்க..!"

"என்ன?'' - அவர் குரலில் திடீர் சிடுசிடுப்பு.

"இப்போ இந்தப் புத்தகத்தைப் படிக்கணுமா? நாளைக்குப் படிச்சுக்கறது"

''ஆரம்பிச்சுட்டியா உன் தொண தொணப்பை... படிக்கல... போ!" - கோபத்தில் புத்தகத்தை ஓரமாக வைத்தார்.

"சரி, உங்க இஷ்டம், படிக்கறதுன்னா படிங்க.. நான் என்ன சொன்னாலும் உங்களுக்குத் தொண தொணப்பு"

- என்று மனைவி சொல்ல, அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மனைவி கீழே படுத்துக் கொண்டாள். கணவன் சிறிது நேரம் புரண்டு படுத்த வண்ணம் இருந்தார். பின்பு யாரோ லைட்டை அணைத்தார்கள். பிறகு அவர் மேல் பர்த்தில் இருந்தபடி,

"ஏண்டி, நாளைக்குக் கல்யாணத்துல..." - என்று ஏதோ தொடங்கினார்.

"நாளைக்கு பாடு நாளைக்கு... இப்போ என்னைக் கொஞ்சம் தூங்க விடறீங்களா?'' - என்றாள் மனைவி வெடுக்கென்று.

உலகில் ஒவ்வொருவருக்கும் அன்பும் அரவணைப்பும் எவ்வளவு அத்தியாவசியமானவை என்று வியக்கத் தோன்றியது. சிறு வயதில் இருந்தே நமது இந்தத் தேடலும் அதற்குரிய போராட்டமும் தொடங்கி விடுகின்றன. குழந்தைகளின் மேல் இவ்வளவு அன்பும் பாசமும் பொழியும் இவர்கள், அவை குழந்தைகளுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவே தங்களுக்கும் முக்கியம் என்று உணராதது வேதனை தந்தது. அம்மா அப்பாவின் அன்பும், அரவணைப்பும் பெற்ற குழந்தைகள் ஆழ்ந்து தூங்கின. கணவனும் மனைவியும் இரவு முழுவதும் புரண்டு படுத்த வண்ணம் இருந்தார்கள். ○

தவித்த வாய்க்குஊஊ

தாகம் எடுத்தால் என்ன செய்கிறோம்? ஒரு தம்ளர் தண்ணீர் குடித்துவிட்டு, அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடுகிறோம். ஆனால் டாக்டர் கேரி ஈகான் தலைமையில் குழு ஒன்று ஆய்வு செய்தது! யூனிவர்ஸிடி ஆஃப் டெக்ஸாஸில் இவர்கள் தாகம் பற்றி ஆய்வு செய்து, புதிய தகவலொன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

"தாகத்தில் என்ன சார் ஆய்வு?" என்று பலருக்குக் கேள்வி இருக்கலாம். இந்தக் கட்டுரை பதில் தரும்.

தாகம் பற்றி இதுவரை நமக்குத் தெரிந்திருப்பது என்ன? அது உடலில் தண்ணீரின் அளவு குறையும்போது, ஏற்படுகிற வறட்சியின் காரணமாக தொண்டைக்குள் நாம் உணருகிற ஒரு சிறு நிலை. அவ்வளவுதான். இதற்குக் காரணமான தூண்டல் பொத்தாம் பொதுவாக மூளையின் 'ஹைபோதலாமஸ்' என்கிற பகுதியில்தான் இருக்கிறது என்றுதான் இதுவரை எல்லோருக்கும் தெரிந்தது. நம் உடலில் தண்ணீரின் சமநிலை குறையும்போது, உடல் செல்கள் நரம்புகளைத் தூண்டி 'பாத்துக்குங்க... தண்ணீர் அளவு குறையுது' என்றொரு செய்தியை மூளைக்குக் கடத்துகிறது. ஹைபோதலாமஸ் பகுதியில் இருக்கும் சிண்டும் சிடுக்குமான நியூரான்கள், இந்தச் செய்தி கிடைத்தவுடன் சட்டென்று விழிப்பாகி, கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தர, உடலின் இதுபோன்ற அடிப்படை விஷயங்களைக் கட்டுப்படுத்தும் மூளை, தண்ணீர் தேவை என்கிற செய்தியை உணர்த்துகிறது.

தாகம்! இதைத் தண்ணீருக்கான விழிப்பு நிலை என்றுகூட வர்ணிக்கலாம். இத்தனை சமாச்சாரங்கள் உள்ளே நடந்திருப்பதை அறியாமல், வண்டியை ஓரத்தில் நிறுத்தி வழியோரப் பெட்டிக்கடையில் பாக்கெட் தண்ணீர் வாங்கி, அழுத்திக் குடித்து அங்கிருந்து நகர்வோம்.

டாக்டர் ஈகான் இப்படித் தண்ணீர் பாக்கெட்டுகளைத் தேட வைக்கிற மூளையின் துல்லிய இடத்தை அறிய விரும்பினார். முடிவில் இந்தக் குழுவினர் அறிவியல் கிணற்றில் சில படிகள் கீழிறங்கி, மூளையின் தண்ணீர்ப் பிரதேசத்தைத் தொட்டிருக்கிறார்கள். ABC Science on line-ல் சமீபத்தில் டாக்டர் ஈகான் அந்த இடம் மூளையின் 'சிங்குலேட் கைரஸ்'



என்கிற பகுதிதான் என்று அறிவித்தபோது, ஆய்வு தாகம் இருந்த பலருக்குத் தண்ணீர் குடித்த மாதிரி இருந்தது. மூளையின் பல மர்ம முடிச்சுகளில் ஒன்று அவிழ்ந்தது.

டாக்டர் ஈகான் தலைமையிலான குழு பத்து நபர்களை ஆய்வுக்கு உட்படுத்தியது. இதற்கு முன்னால் இந்த தாக



ஆய்வைச் செய்தவர்கள் PET ஸ்கேன் என்கிற சாதனத்தைப் பயன்படுத்தி மூளையைப் படம் பிடித்தார்கள். ஆனால் டாக்டர் சகான் FMS என்றொரு முறையைப் பயன் படுத்தினார். Functional Magnetic Resonance Imaging! இதன் மூலம் மூளையை ஒவ்வொரு மூன்று நிமிடத்துக்கும், இருபத்தியொரு புகைப் படங்கள் எடுக்க முடியும்.

ஆய்வுக்கு வந்த பத்துப் பேருக்கும் பல நாட்களுக்குத் தண்ணீர் கொடுக்காமல் வைத்திருந்தார்கள். இவர்களின் தாக அளவு 0 விலிருந்து 10 வரை கணக்கிடப்பட்டது. 0 என்பது தாகம் எடுக்காத நிலை. 10 என்பது தாகத்தின் அதிக பட்சம், நாக்கு வறண்டு மேலண்ணத்தோடு ஒட்டிக் கொள்ளும். ஆய்வுக்கு வந்த ஒருவர் தாகம் அதிகமாகி, பேசிய தொகையைவிட அதிகம் தந்தால் தான் இருப்பேன் என்று அடம் பிடித்தார். அவருக்குத் தண்ணீருக்குப் பதில் பணம் தரப்பட்டது. ஒருவர் கடும் தாகத்தில் விழுந்து, தண்ணீர் என்ற வார்த்தையைக் கேட்டாலே போதும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆய்வாளர்கள் உற்சாகமாகி அவருக்கு ஸ்கோர் பதினொன்று கொடுத்தார்கள். ஆனால் தண்ணீர் தரவில்லை. ஆய்வு முடிந்ததும் ஏழு பேர் தாகத்தில் தண்ணீரைத் தவிர, வேறு எதைப் பற்றியும் ஞாபகமில்லை என்றார்கள். ஒருவர் இரண்டு நாட்களுக்கு எதைக் கேட்டாலும் "தண்ணீர்" என்றார். "தாங்க்ஸ்" என்று கை குலுக்கினால், "தண்ணீர்" என்றார். "அப்பா... ஆபீஸ் போகலையா?" என்று மகன் கேட்டால் "தண்ணீர்" என்றார். சித்தபிரமை பிடித்தவர் மாதிரி பேசிக் கொண்டிருந்தவரைத் தட்டி, அவருடைய மனைவி "அதான் நிறையப் பணம் கிடைச்சிருக்கே..." என்று தொட, கோபத்தில் "போடி தண்ணி..." என்றார். ஆய்வாளர்கள் தாகத்தின் விசுவரூபம் என்று இந்த நிலையை வருணித்தார்கள்.

டாக்டர் சகான், தாகத்தின் மூலம் தூண்டப்படுகிற மூளையின் நீர்ப் பிரதேச நியூரான்களைக் கட்டுப்படுத்துவது, 'சிங்குலேட் கைரஸ்' என்ற பகுதிதான் என்று துல்லியமான, மிகத் துல்லியமான படங்களை வைத்துக் கொண்டு அறிவித்தார். உடலின் உள்ளே இருக்கிற தண்ணீரின் அளவு குறையும்போது, உடலில் பொட்டாசியம் அளவு குறையும்போது, வேறு ஏதோ காரணங்களால் வாய் உலரும்போது, விபத்து போன்ற காரணங்களால் உடலின் இரத்த அளவு குறையும்போது போன்ற பல்வேறு சூழ்நிலைகளிலும் இந்த 'சிங்குலேட் கைரஸ்' தாகத்தை உண்டாக்கி, தண்ணீரைத் தேட வைக்கிறது என்று நிரூபிக்கப்பட்டது. டாக்டர் சகான் இந்த பகுதிக்கு Conscious of thirst என்று பெயர் சூட்டினார்.

முடிவில் ஆய்வுக் குழுவினருக்கும், ஆய்வில் பங்கு பெற்றவர்களுக்கும் விருந்து கொடுக்கப்பட்டது. ஸ்கோர் பதினொன்று எடுத்த நபர் மட்டும் விருந்தில் கலந்து கொள்ளவில்லையாம்.

என் யூகத்தின்படி அவர் வீட்டில் தண்ணி அடித்துக் கொண்டிருந்திருக்கலாம். அ.. நல்ல தண்ணிங்க!

(தொடரும்)

படம் : **சார்லஸ்**




வஸந்த் செந்தில்

கடுகு பொறுக்கிய பாகவதர்

இன்று ஸ்ரீ தியாகராஜரின் வரலாறு நமக்குத் தெரிகிறதென்றால் அதற்கு முழு முதற்காரணமாக இருந்தவர் வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதரே! இவரது கிருதிகளின் மூலமே தியாகராஜரின் பிறந்தநாள் ஜாதகம், வாழ்க்கைக் குறிப்பு மற்றும் தியாகராஜர் இயற்றிய இசை நாடகங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டையில், 1781ம் வருடம் பிப்ரவரி 18ல் பிறந்த வெங்கடரமண பாகவதர், தம் பெற்றோருக்கு ஐந்தாவது பிள்ளை. துணி வியாபாரத்தில் ஈடுபட்ட வெங்கடரமண பாகவதர், ஸ்ரீ தியாகராஜரிடம் இருபத்தாறு ஆண்டுக்காலம் இசை பயிலும் வாய்ப்பைப் பெற்றார். சமஸ்கிருதம், தெலுங்கு இரு மொழிகளிலும் புலமை பெற்றுத் திகழ்ந்தார்.

ஒரு முறை தியாகராஜரின் துணைவியார் வெங்கட ரமணரை கடுகு வாங்கி வரச் சொல்லி அனுப்பினார். கடுகு வாங்கி வந்த பாகவதர், வழியில் அதை கவனக் குறைவாகச் சிதறடித்துவிட்டார். மனம் வருந்திய அவர், ஒவ்வொரு



• ஸ்ரீ வெங்கடரமண பாகவதர்

• ஸ்ரீ தியாகையர்

கடுகாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தார். கடுகு வந்து சேராததை கணவரிடம் தெரிவித்து, கடைத்தெருவுக்கு அனுப்பி பார்த்து வரச் சொன்னார் தியாகராஜரின் துணைவியார்.

அங்கே, கடுகு பொறுக்கிக் கொண்டிருந்த பாகவதரைக் கண்டு அவரது குருபக்தியை வியந்தார். அதோடன்றி "நீ எப்படி ஒவ்வொரு கடுகாக எடுத்துக் கொண்டிருக்கிறாயோ, அப்படியே எனது கிருதிகளையும் நீதான் தொகுத்து வைத்து மக்களுக்குத் தர வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

நூற்றுக்கணக்கான கிருதிகளைத் தெலுங்கில் இயற்றியுள்ள பாகவதர், குருவைப் போற்றி 'ஸ்ரீ குரு ஸ்தோத்ராஷ்டகம்', 'ஸ்ரீ குருஸ்தோத்ர பஞ்ச ரத்னம்', 'ஸ்ரீ குரு மங்களாஷ்டகம்' ஆகியவற்றையும் பாடியுள்ளார்.

தியாகராஜரின் இல்லத்தில் நிகழும் பஜனைகளில் வெங்கடரமணரும் தவறாது கலந்து கொள்வார். பஜனையை முடித்து வைக்கும், 'மங்களம்' பாடும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்.



• ஸ்ரீ அன்னமய்யா

ஓர் ஏகாதசி பஜனை அன்று, வெங்கடரமணர் பஜனை ஆரம்பித்த பிறகும் வரவில்லை. மங்களம் பாடும் நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது. வெங்கடரமணர் இல்லாமல் மங்களம் பாடி, பஜனையை முடிக்க வேண்டி இருக்கிறதே என்று ஸ்ரீ தியாகராஜர் வருத்தப்பட்டிருந்த வேளையில், சிறுவன் ஒருவன் அங்கு வந்து, அவரது துணைவியாரிடம் "இதோ வெங்கட்ரமண பாகவதர் வந்து கொண்டிருக்கிறார்" என்று கூறி மறைந்துவிட்டான்.

சிறுவன் உருவில் வந்தது ஸ்ரீ ராமனே என்பதை உணர்ந்த தியாகராஜர், வெங்கடரமணா வந்தபோது "வாருங்கள் பாகவதரே" என வரவேற்றார். அதற்குப் பிறகுதான் வெங்கடரமணருக்குப் பின்னால் பாகவதர் பட்டம் சேர்த்து அழைக்கப்பட்டது.

வெங்கடரமணர் சிறந்த உடற்பயிற்சியாளராயும் இருந்தார். தமது சாரீரத்தைப் போலவே சரீரத்தையும் கட்டுக்கோப்புடன் வைத்திருந்தார். ஒருமுறை கடைத் தெருவில் அன்பளிப்பாய்க் கொடுத்த ஒன்பது பூசணிக் காய்களை ஒரே கயிற்றால் கட்டிச் சுமந்து, ஸ்ரீ தியாகராஜரின் வீட்டுக்கு எடுத்து வந்தார். இதைக் கண்ட தியாகராஜர் அதுமுதல் செல்லமாக 'கணபதி' என பாகவதரை அழைத்தார்.

தமது நாற்பத்து நான்கு வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருந்த பாகவதர், ஸ்ரீ தியாகராஜரின் வற்புறுத்தலினாலேயே திருமணம் செய்து கொண்டார். இவரது புதல்வர் கிருஷ்ண சுவாமியும் ஒரு பாகவதரே. இவரும், தந்தையைப் போல, ஸ்வரஜதிகள் பல இயற்றியுள்ளார்.

தொழிலின் நிமித்தமாக, வேலூர் மாவட்டம் வாலாஜாப்பேட்டைக்கு குடிபெயர்ந்த பாகவதர், இங்கும் மடம் ஒன்று அமைத்து சங்கீதத்தை வளர்த்து வந்தார். தியாகராஜர் தமது திருப்பதி யாத்திரையின்போது, இம்மடத்தில் தங்கிச் சென்றுள்ளார். பாகவதரிடமும் பலர் சங்கீதம் பயின்றனர். அவர்களில், கிருஷ்ணராஜ உடையார் அவையில் சமஸ்தான வித்வானாகத் திகழ்ந்த சதாசிவராவ், ஸ்ரீமத் கவி வெங்கடசூரி ஸ்வாமிகள், திருப்பதி நாராயண சாமி நாயுடு ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஸ்ரீ தியாகராஜரின் மகள் திருமணத்திற்கு பாகவதர் அன்பளிப்பாகத் தந்தது, ஸ்ரீராமர் படம் ஒன்று. பாகவதர் அதைத் தலையில் தூக்கி வருவதைப் பார்த்தபோது, ஸ்ரீ ராமனே நடந்து வருவதாகத் தோன்றியதாம், தியாகராஜருக்கு. அப்போது அவர் இயற்றியதுதான் 'நனு பாலிம்பா நடச்சி வச்சித லோரா... (என்னைக் காக்க நடந்து வந்தாயா?) நா பிராணநாதா!' என்ற மோகனராகப் பாடல்.


இவர் வாழ்ந்து மறைந்த (1874) வாலாஜாவில், இவர் பெயரில் ஒரு தெரு மட்டும் உள்ளது. மற்றபடி போதிய ஆதரவு இல்லாததால், இவரது மடம் குறித்த சங்கதிகள் வெளியே தெரியாமல் உள்ளன. ஆனால் பிறந்த ஊரான அய்யம்பேட்டையில், எழில் மிகு சங்கீத மஹால் அமைத்து, பாகவதரின் ஜென்ம நட்சத்திரத்தையொட்டி, வருடந்தோறும் சங்கீத விழா விமரிசையாக நடைபெறுகிறது.

• ந.ச. நடராசன்



மலைமலையா மாலைகள்!





ஸ்ரீரங்கம், வெளி ஆண்டாள் சன்னதி. சுமார் அறுபது - எழுபதுபேர் அமர்ந்து பூ மாலைகள் தொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அதுவும் இரண்டு நாட்களாக. சுமார் முந்நூறு மாலைகள். அதில் இரண்டு மட்டும் பிரத்யேகமாக மிகப் பெரிய மாலைகள். ஒன்று திருப்பதி வெங்கடேசப் பெருமானுக்கு. இன்னொன்று அலமேலு மங்கைத் தாயாருக்கு. தோரண மாலைகள், கரக்காட்டான், செவ்வந்தி, சம்பங்கிப் பூக்களுடன்.

திருப்பதி பெருமாளுக்கு உற்சவ காலங்களுக்கான பூ மாலைகள் அனைத்தும், கடந்த ஐந்தாண்டுகளாக ஸ்ரீரங்கத்திவிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. திருமலைப் பெருமாள் மூலவர், உற்சவர் மற்றும் உப சன்னதி ஸ்வாமி மாலைகள், அலமேலு மங்காபுரம் தாயார் மற்றும் உப சன்னதி ஸ்வாமி மாலைகள், அனைத்தும் ஸ்ரீரங்கம் பூச் சந்தை புஷ்ப வியாபாரிகளான ஏ. வெங்கிடுசாமி நாயுடு, அவர்தம் குமாரர் வெ. வரதராஜன் ஆகியோரின் மேற்பார்வையில், ஆண்டுதோறும் பக்தி சிரத்தையுடன் தயாரித்து அனுப்பப்படுகின்றன.

கரூரில் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களான அரவிந்த் டிரேடர்ஸ், ஏ.டி. டெக்ஸ்டைல்ஸ், ராம் டெக்ஸ்டைல்ஸ், கே.சி.பழனிச்சாமி மற்றும் பெருமாள் பக்தர்கள் சிலரும், கூட்டாகச் சேர்ந்து இந்தப் பூ மாலை உபய கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தகவல் : **திரு**

படங்கள் : **லோட்டஸ் சுரேஷ்**



பறக்குது வானில் பேருந்து!

சுப்ர. பாலன்

மும்பை போன்ற பெரு நகரங்களில் ஆண்டுதோறும் ரெயில் வண்டிகளில் அடிபட்டுச் சாகிறவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரம், என்று ஒரு கணக்குச் சொல்கிறார்கள். இப்படியொரு வாய்ப்பே இல்லாமல், 'சுத்த சைவ'மாக ஆகாசப் பேருந்தை (ஸ்கை பஸ்) வடிவமைத்திருக்கிறது கொங்கண் ரெயில்வே!

ஓட்டுகிறவர், நடத்துகிறவர் எல்லாம் கிடையாது. முண்டியடித்துக் கொண்டு இந்த வண்டிக்குள் ஏற வேண்டாம்; நான்கு மீட்டர் அகலமான நுழைவாயில்! சாதாரணமாகச் சாலையில் நடக்கிற மாதிரியே, வண்டிக்குள் போய் விடலாம். வெளியே வருவதும் சுலபம்.

நீளமான வண்டித் தொடர் இல்லை. இரண்டே பெட்டிகள்தாம். ஒவ்வொன்றிலும் ஒரே நேரத்தில் நூற்றைம்பது பேர் வசதியாகப் பயணம் செய்யலாம். முற்றிலும் ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட பயணம். நாற்பது விநாடிகள் முதல் ஒரு நிமிட இடைவெளியில், இந்த 'ஆகாசப் பேருந்து' போய்க் கொண்டே இருக்கும்.

நெரிசல் இல்லாத நேரமானால், ஆகாசப் பேருந்தில் பொருள்களையும் அனுப்பலாம். இதன் மூலம் பெறுகிற கூடுதல் வருவாயைக் கணக்கில் கொண்டால், இப்போது கிலோ மீட்டருக்கு ஐம்பது காசு என்று எதிர்பார்க்கப்படும் பயணக் கட்டணம் இன்னும் குறையும் என்கிறார்கள்.

பெரு நகரங்களில் எந்தவொரு சாலையிலும் மையத் தடுப்புப் பகுதியில் (MEDIAN) தூண்களை நிறுவி, அவற்றின் மீது தண்டவாளங்களை அமைத்து இந்த ஆகாசப் பேருந்தை ஓட விடலாம். தடம் புரள்வது என்கிற பேச்சுக்கே இடமில்லை. அப்படியே நேர்ந்தாலும் வண்டிகள் கீழே விழாமல், மேலேயே தொங்கிக் கொண்டுதான் இருக்கும்.

குறிப்பிட்ட இலக்கை ஒரே சீரான வேகத்தில் சென்றடையலாம். போக்குவரத்து நெரிசல் என்பது ஆகாசப் பேருந்து முறையில் அந்நியப்பட்டு விடும். அதிகபட்சம் மணிக்கு நூறு கிலோமீட்டர் வேகம் சாத்தியமானாலும், சராசரியாக நாற்பத்தைந்து, ஐம்பது கி.மீ வேகத்திலேயே இவை செல்லும்.

ஏற்கெனவே மேம்பாலங்கள் உள்ள பெரு நகரச் சாலைகளிலும் அவற்றுக்கு எவ்வித இடையூறுமின்றி, இந்த வசதியை ஏற்படுத்தி விடலாம் என்கிறார்கள்.

வெள்ளம், பெருமழை போன்றவற்றால் இந்த இருப்புப் பாதைகள் சேதமடைகிற வாய்ப்பில்லை. ஏற்கெனவே உள்ள கட்டுமானங்களையோ, பூங்காக்களையோ அழிக்க வேண்



''எங்கே போய்த் தொலைஞ்சே இவ்வளவு நேரம்?''

''கஜானா காலியானதற்குக் காரணம் 'அரசரின் நிர்வாகத் திறமையின்மையா? ஊதாரித்தனமான்னு' தேரடி வீதியில் நடந்த பட்டிமன்றத்துக்குத்தான்!'' - உ. ராஜாஜி

டிய அவசியமில்லை.

வயதில் மூத்தவர்கள் ரெயில் நிலையத்துக்குச் செல்லப் படியேற வேண்டாம். 'லிஃப்ட்' வசதி உண்டு. ஆகாச ரெயில் நிலையங்கள் அமைப்பதற்கு மட்டும் நான்காயிரம் சதுர மீட்டர் நிலப்பரப்பு தேவைப்படலாம். அதுவும் நகரின் மையப்பகுதியை விட்டு ஒதுங்கித்தான் இருக்கும்.

நூறு வாரங்களுக்கும் உள்ளாகவே இந்தத் திட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்தி விடலாம்.

பரீட்சார்த்தமான முறையில் கோவாவில் இந்த ஆகாசப் பேருந்தை ஓட்டுவதற்கு, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த ஆகாசப் பேருந்தை முதல் கட்டமாக, கோவா மாநிலத்தின் மபூசா முதல் பணாஜி வரையிலான பாதையில் இயக்கப் போகிறார்கள். மார்ச் 2004 இல் வெள்ளோட்டம் நிகழலாம்.

ஆகாசப் பேருந்தின் மாதிரி வண்டிப் பெட்டிகளை, கொங்கண் ரெயில்வேயின் மட்கான் ரெயில் நிலையத்தில் காட்சிப் படுத்தியிருக்கிறார்கள். ஆகாசப் பேருந்து இயங்கக் கூடிய ரெயில் நிலையத்தையும் வடிவமைத்து வைத்திருக்கிறார்கள். ரெயில் நிலையக் கூரைப் பகுதியில் சிற்றுண்டிச் சாலைகள், கூரைப் பூங்காக்கள் போன்ற வசதிகளையும் ஏற்படுத்தலாம்.

உலகிலேயே இதுதான் முதன்முறையான ஆகாசப் பேருந்து வடிவம் என்பதும், இதனை உருவாக்கியிருப்பவர்கள் கொங்கண் ரெயில்வே நிர்வாகத்தினர் என்பதும் நாம் பெருமைப்பட வேண்டிய ஒன்று. இதனை முற்றிலுமாக வடிவமைத்தவர் நிர்வாக இயக்குநர் பி. ராஜாராம். இதன் காப்புரிமை முழுவதையும் கொங்கண் ரெயில்வே கார்ப்பொரேஷன் நிறுவனத்துக்கு வழங்கியிருக்கிறார்கள்.

நகர்ப்புற பயண நெரிசலைத் தவிர்ப்பதற்கு இதைவிடச் சிக்கனமானதும் வசதியானதுமான ஏற்பாடு, வேறெதுவும் இருக்க முடியாது என்று தோன்றுகிறது. இத் திட்டத்துக்கு பெங்களூர், அகமதாபாத், சென்னை, கோயம்புத்தூர், மும்பை, டெல்லி, ஹைதராபாத், கொல்கத்தா, கொச்சி, லக்னோ போன்ற பெருநகரங்கள் எல்லாம் ஆர்வம் கொண்டுள்ளன. பதினைந்து நகரங்களுக்கு மேல் ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டு, உத்தேசச் செலவு பற்றியும் கணக்கிட்டு அறிவித்திருக்கிறார்கள்.

சென்னை நகரத்தில் 118 கி.மீ தொலைவுப் பயண வசதிக்கு, 5300 கோடி ரூபாயும், கோயம்புத்தூர் நகரில் 28 கி.மீ தொலைவுக்கு 1270 கோடி ரூபாயும் செலவு ஆகுமாம்.

"இந்தத் திட்டம் தொழில் நுட்ப முறையில் மிகச் சிறப்பானது" (Technically sound) என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார்.

ஆகாசப் பேருந்து நிலையங்களில் யாரும் காத்திருக்கும் அவசியம் நேரவே வாய்ப்பில்லை. இவை பயணிகள் வண்டியில் ஏறி இறங்க மட்டுமே பயன்படுமாம். ரெயில்வே நிலையங்கள் ஒன்றுக்கொன்று ஐந்நூறு மீட்டர் முதல் ஆயிரத்து இருநூறு மீட்டர் இடைவெளியில் அமையுமாம். வண்டியிலிருந்து பயணிகள் வெளியே வருவதற்குப் பதினைந்து வினாடிகளே போதும். தானே திறந்து மூடுகிற கதவு அமைப்புடையது என்பதால், பயண வழியில் கதவு திறந்து கொள்ளும் அபாயம் இல்லை. பெட்டிகளின் உட்புறம் கண்காணிப்புக் காமிராவும் பொருத்தப்பட்டிருக்கிறது.

இந்த உலகத்தரம் வாய்ந்த ஆகாசப் பேருந்துத் திட்டம் வெற்றி பெற்றால், உலக நாடுகளில் இந்தியாவுக்கு இன்னும் கூடுதலான பெருமை சேரும்.

இந்தத் திட்டத்துக்கு அரசின் மூலதனம் எதுவும் தேவையில்லை என்றும், முழுக்க முழுக்கப் பங்கு மூலதனம் மூலமே நிறைவேற்றலாம் என்றும் சொல்கிறார்கள். "ஸ்கூட்டர் பயணத்துக்கு ஆகிற செலவை விட, ஆகாசப் பேருந்துக் கட்டணம் குறைவானது'' என்றார் ராஜாராம்.

'நூறு ரூபாய் வீதம் நூற்றைம்பது பங்குகளை வாங்கினால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுட்காலம் முழுவதும் இலவசமாய் ஆகாயப் பேருந்தில் பயணம் செய்யலாம்' என்றுகூட ஒரு விளம்பரம் செய்திருக்கிறார்கள். இப்போதைய நிலையில் மனம் போனபடி பயணம் செய்ய, மாதம் இருநூற்றைம்பது ரூபாய் செலுத்தினால் போதுமாம்.

நம் ஊரில் பிதுங்கி வழியும் புறநகர் ரெயில்வே பேருந்துப் பயணக் கொடுமையைப் பார்க்கும்போது, ஆகாசப் பேருந்து வரப் பிரசாதம்தான்!

வேகத்தடைகள்!

நாம் வாசிக்கும் வேகத்தைத் தடுப்பவை எவையென்று தெரிந்து கொண்டால், அத் தடைகளை வேகமாகத் தாண்டி விடலாம். உதாரணத்துக்குச் சில:

தடை 1 : ஒவ்வொரு சொல்லாகக் கண்களை நகர்த்தி வாசித்தல்.

தடையை நீக்கும் வழி: இரண்டு மூன்று சொற்களைச் சேர்த்து வாசித்துப் பழகுங்கள்.

தடை 2: ஒரு சொல்லின் பொருளை அறிந்து கொள்வதற்காக வாசிப்பதை நிறுத்துதல்.

தடையை நீக்கும் வழி: வாசித்தலை ஒருபோதும் நிறுத்தாதீர்கள். எப்போதும் கையில் ஒரு பென்சிலை வைத்துக் கொண்டு வாசிக்க ஆரம்பியுங்கள். பொருள் தெரியாத சொல்லை பென்சிலால் அடிக்கோடிட்டுவிட்டு, தொடர்ந்து வாசியுங்கள். வாசிப்பதை எந்தக் காரணத்திற்காகவும் நிறுத்த வேண்டாம். வாசித்து முடித்த பின்பு, பொருள் தெரியாத வார்த்தைகள் அனைத்திற்கும் ஊகித்துப் பொருள் கண்டுபிடியுங்கள். **தேவையானால் மட்டுமே அகராதியைப் பயன்படுத்துங்கள்.**

தடை 3: படித்த சொற்களையே மீண்டும் மீண்டும் படித்தல்.

தடையை நீக்கும் வழி: சிலருக்கு இது ஒரு கட்டுமீறிய பழக்கமாக இருக்கும். சிலர் இதைத் தெரிந்தே செய்வார்கள். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று இவர்களிடம் கேட்டால், "புரிந்து கொள்ள இப்படிச் செய்கிறேன்" என்று சொல்வார்கள். ஆனால் இதற்கு உண்மையான காரணம் வாசிப்பவரின் தன்னம்பிக்கையின்மையே! இதை ஆய்வுகள் நிரூபித்திருக்கின்றன. இந்தப் பிரச்னைக்கு நீங்கள் இரண்டு வழிகளில் தீர்வு காணலாம்.

1. ஒருமுறை வாசித்த சொல்/ வரியை மீண்டும் வாசிப்பதில்லை என்று தீர்மானமாக முடிவு செய்து கொண்டு, வாசிக்க ஆரம்பிப்பது.

2. வாசிக்கும் வேகத்தை அதிகப் படுத்துவது.

தடை 4: முணுமுணுத்தல் மற்றும் உரக்கப் படித்தல்.

தடையை நீக்கும் வழி: பத்து வருடங்களுக்கு முன்பு வரை இரண்டும் கெட்ட பழக்கங்கள் என்று முத்திரை குத்தப்பட்டு, முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய பழக்கங்கள் இவை என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வந்தன. ஆனால் சமீப கால ஆய்வுகள், இவை முழுமையாகத் தவிர்க்க முடியாதவை என்று கூறுகின்றன. இந்தப் பழக்கங்கள்



* படம்: ஸ்ரீஹரி

"இப்படியெல்லாம் விபரீதமாச் செஞ்சா மட்டும் மண்டையிலே ஏறிடுமா என்ன?"

பேராசிரியர் ப. இராம்கோபால்

உங்களிடம் இருந்தால், அவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க முயற்சி செய்யாதீர்கள். அது முடியாத செயல். இவற்றை முடிந்தவரை குறைத்துக் கொள்ளுங்கள். முணுமுணுத்தல் பழக்கம் உங்களிடம் இருந்தால், அதை வேகமாகச் செய்ய பயிற்சி செய்யுங்கள். மேலும், உரக்கப் படித்தல் நினைவாற்றலை அதிகப்படுத்துகிறது என்று கண்டறியப்பட்டிருக்கிறது. எனவே, முக்கியமான பகுதிகளை வாய்விட்டுப் படியுங்கள்,



அடுத்தவர்களுக்குத் தொல்லை தராதவாறு!

தடை 5: வேகமாக வாசிக்க, இயல்பிலேயே, முடியாதிருத்தல்.

தடையை நீக்கும் வழி: கூர்மையான பென்சிலை எடுத்துக் கொண்டு, வரிகளின் அடிப்பகுதியில் சற்று உயரத்தில் அதை வேகமாக நகர்த்துங்கள். நகர்த்தும்போதே பென்சிலின் பின்னாலேயே தொடர்ந்து கண்களையும் ஓட விடுங்கள். சிறிது சிறிதாக பென்சில் நகரும் வேகத்தை அதிகப் படுத்துங்கள். பென்சிலின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, கண்களின் நகரும் வேகமும் அதிகரிக்கும்.

வாசிக்கும் வேகத்தைக் கண்டறிய நீங்கள் செய்த சோதனை ஞாபகம் இருக்கிறதா? இதையே ஒரு பயிற்சியாக இனி தினமும் நீங்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். இதுதான் உங்கள் வாசிக்கும் வேகத்தை அதிகரிக்கும் பயிற்சி. இதைத் தினமும் செய்யும்போதே, உங்கள் வாசிக்கும் வேகத்தையும் ஒரு தாளில் குறித்து வாருங்கள். ஒரு மாதம் தொடர்ந்து செய்து வந்தால், உங்கள் வாசிக்கும் வேகம் கணிசமாக உயர்ந்திருப்பதை உணர்வீர்கள். வாசிக்கும் வேகம் பற்றி மூன்று முக்கியமான விஷயங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவை:

1) முதலாவது, மேலே குறிப்பிட்ட பயிற்சி உங்கள் வாசிக்கும் வேகத்தை அதிகப்படுத்தும் ஒரு பொதுவான பயிற்சி மட்டுமே. 2) இதைச் செய்யும்போது நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டியது, புத்தகத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயத்தின் தன்மைக்கேற்றவாறு வாசிக்கும் வேகம் மாறுபடும். எல்லாப் புத்தகங்களையும் ஒரே மாதிரி சீரான வேகத்துடன் படிக்க முடியாது. உதாரணமாக, நீங்கள் காரில் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என வைத்துக் கொள்வோம். இந்தக் கார் அதிகபட்சமாக 100 கி.மீ வேகத்தில் போகும். ஆனால் காரின் திறன் மட்டுமின்றி, சாலையின் தரம், வளைவுகள், போக்குவரத்து நெரிசல் என, பல விஷயங்கள் காரின் வேகத்தை நிர்ணயிக்கின்றன. வாய்ப்புக் கிடைத்தால் கார் அதிகபட்ச வேகத்தில் போகும். இதேபோல்தான் உங்கள் வாசிக்கும் வேகமும், வாசிக்கும் விஷயத்தின் தன்மையைப் பொறுத்து மாறுபடும். வாசிக்கும் வேகத்தை அதிகபட்ச நிலைக்குக் (optimum level) கொண்டு செல்வதே இந்தப் பயிற்சியின் நோக்கம்.

வேகமாகப் படித்தால் படிக்கும் விஷயம் மனத்தில் பதியாது என்று நீங்கள் நினைக்கலாம். இது



உச்சு உச்சு கொட்ட வைச்சாரே!

"பாவம்யா அந்த தனுஷ். கை ஒடிஞ்சு முழுமையாக குணமாகாத நிலையிலும், அப்பா விரட்டின வேகத்துக்கு ஓடிக்கிட்டு இருந்தார். இப்ப 'ராகவா' படத்தை முடித்துக் கொடுக்காம, வேறே படம் நடிக்கக் கூடாதுனு நீதிமன்றம் உத்தரவு ஆனபிறகுதான் பையன் கொஞ்சமாவது ரெஸ்ட் எடுக்கறார்" என்று கோலிவுட்டே உச்சு கொட்டுகிறது.

"பழுத்த மரத்துக்குக் கல்லடி மட்டுமல்ல; கண் அடியும் அதிகம்" என்று புலம்பிக் கொண்டிருக்கிறாராம் கஸ்தூரி ராஜா!

'ட்ரீம்ஸ்' - படத்தில் தனுஷ், தியா

- ஸ்ரீ

தவறான கருத்து என்று படிப்பாற்றல் இயலின் மிகச் சிறந்த நிபுணர்களுள் ஒருவரான டோனி பூஷான் சொல்கிறார்.

டோனி பூஷான் சொல்வது சரிதானா என்று தெரிந்து கொள்ள, மீண்டும் கார் உதாரணத்திற்கே வருவோம். ஒரு திறமை யான கார் டிரைவர், கார் ஓட்டும்போது மிகக் கவனமாகக் கார் ஓட்டுவார். அவர் கவனம் முழுவதும் சாலையிலேயே இருக் கும். காரின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க, சாலையின் மீது அவருடைய கவனம் அதிகமாகும். இது 'ஃபாஸ்ட் டிரைவிங்'. ஒரு திறமையற்ற டிரைவர் மிக மெதுவாகக் கார் ஓட்டும்போதும் சாலையிலிருந்து கவனத்தைச் சிதறவிட்டு, வண்டியை விபத் துக்குள்ளாக்குவார். இவர் செய்வது 'ராஷ் டிரைவிங்'. 'பாஸ்ட் டிரைவிங்' வேறு; 'ராஷ் டிரைவிங்' வேறல்லவா? புத்தகங்களை வாசிக்கும்போது, உங்களை ஒரு 'ஃபாஸ்ட் ரீடர்' ஆக மாற்றுவதே இப் பயிற்சியின் நோக்கம்.

மேலே குறிப்பிட்ட பயிற்சிகள் உங்கள் வேகத்தை அதிகரிக்கத்தானே ஒழிய, உங்களது புரிந்து கொள்ளும் ஆற்றலையோ, நினைவாற்றலையோ வளர்த்துக் கொள்வதற்காக அல்ல; எனவே, இந்தப் பயிற்சியைச் செய்யும்போது, புரிந்து கொள்ளுதலைப் பற்றிக் கவலைப்படாமல், வேகமாகப் படிக்கக் கண்களை வேகமாக நகர்த்தப் பழகுங்கள். "புரிந்து கொள்ளாமல், நினைவில் நிறுத்தமுடியாமல் படித்து என்ன பயன்?" என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. இதற்கான பயிற்சிகளையும் சொல்கிறேன். கொஞ்சம் பொறுங்கள்,

(தொடரும்)


விடுமுறை பயிற்சி.
PEACEFUL
Pondicherry
அமைதியான பாண்டிச்சேரியை அனுபவியுங்கள். துயரமில்லாமல் சுலபமாக ஓய்வெடுப்பது எப்படி என்று புரிந்து கொள்ளுங்கள்.
Give time a break.
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: பாண்டிச்சேரி சுற்றுலா: தொலைபேசி: 91-413-2334575/2333590/2330532. பேக்ஸ்: 91-413-2330532. இ-மெயில்: e_pmdc@sify.com இணைய தளம்: www.tourisminpondicherry.com
McCANN/PT/11-03

ஜனவரி. 25 - 2004

மினி கல்கி



கௌரவ ஆலோசகர்கள்...

டாக்டர் எஸ்.அஷோக் டாக்டர் எல்.மகாதேவன்

சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே.சுமதி ஓவியர் மருது

டாக்டர் இரா.அன்புமணி பேராசிரியர் கு.ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அழகுக் கலைஞர் வசுந்தரா

'ரகசியமாய், ரகசியமாய் புன்னகைத்தால் பொருள் என்னவோ?'

எதிரில் நிலைக்கண்ணாடி இருக்கிறதா?

அப்படியானால், உங்களுடைய இளமையான தோற்றம் குறித்து ரொம்ப சந்தோஷமாக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

சும்மா வந்து விடுமா இளமையான தோற்றம்? அழகு, அக்கறை, உடற்பயிற்சி, மனம், குணம், பணம், திருமண வாழ்க்கை என ஏகப்பட்ட புள்ளிகள் வைத்து, அழகாக இணைத்தால்தான் 'என்றும் இளமை' என்ற கோலமே கிடைக்கிறது. இதோ சில பயனுள்ள டிப்ஸ்!

இளமை உங்களுக்கே

- சத்துணவு நிபுணர் தாரிணி கிருஷ்ணன்



உடலும் மனசும் ஒண்ணுக்குள்ளே ஒண்ணு. மனசு பஞ்சு மாதிரி இருந்தா, உடம்பும் ஓ.கே.வா இருக்கும். உடம்பு ஆரோக்கியமா இருந்தா, மனசு கனகுஷியா இருக்கும். எனவே... உடம்பு பத்திரம். மனசு, டபுள் பத்திரம்.

கண்டதையும், மிஞ்சியதையும் புதைக்கிற சமாதி இல்லீங்க, வாயும் வயிறும்! உடம்புக்குள்ளே என்ன போடப்படுகிறதோ, அதுதான் உங்க இளமையை நிர்ணயிக்குது.

புரதம், இரும்புச் சத்து, ஸிங்க், விட்டமின் ஸி, விட்டமின் ஈ போன்றவை சரியான அளவில் அமைந்த சமச்சீரான உணவு சாப்பிட்டாலே, ஆரோக்கியம் உங்கள் வசமாகிவிடும். சருமமும், தலைமுடியும் பளபளக்க, ஊளைச் சதை இல்லாமல் இருந்தால் இளமைத் தோற்றமும் கியாண்டி!


கிராமப் புறங்களில் பெருசுகள் எண்ணிக்கைதான் அதிகமிருக்கும். அறுபதைத் தொட்டிருந்தாலும், தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளிக் கம்பிகள் தென்படும். கரும்பைக் கடித்துச் சாப்பிடும் அளவுக்கு பல் வரிசை ஸ்ட்ராங்! சருமத்தில் சுருக்கமாவது ஒண்ணாவது! இதற்குக் காரணம், நகர்ப்புறத்தை விட, கிராமங்களில் டென்ஷன் இல்லை, பொல்யூஷன் இல்லை, வாகனப் புகை இல்லை.

நகரங்களில் இதெல்லாம் மிக மிக அதிகம் என்பதால், நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் நீர், சாப்பிடும் உணவு எல்லாமே மாசு பட்டு விடுகிறது. இதனால் O_2 என்பது O_3 ஆக மாறி, உடம்பில் ஃப்ரீ ராடிகல்ஸ்ஸை அதிகரிக்கும். இந்த ஃப்ரீ ராடிகல்ஸ் இருக்கிறதே, அது பிங்பாங் பந்து மாதிரி ஓயாமல் எழும்பி அடிச்சுக்கிட்டேயிருக்கும். அப்போ, நம்ம உடம்புலே இருக்கிற உயிர் அணுக்கள் சிதைய ஆரம்பிக்கும். அதன்

காரணமா, நீரிழிவு, இருதய நோய், கேன்ஸர்னு ஏகப்பட்ட வியாதிகள் கிளம்பும். வியாதி வந்தபின்பு, அது காவு கொடுக்கும் முதல் விஷயம் இளமையான தோற்றம்தான்.

எனவே, முடிஞ்ச அளவுக்கு பொல்யூஷன் ஃப்ரீ லைஃப் வாழுங்க! கீரை, பீன்ஸ், காராமணி போன்ற பச்சைக் காய் கறிகள், பேரிச்சை, வைட்டமின் சி சத்து நிறைந்த எலுமிச்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு போன்ற பழங்கள், கம்பு, ராகி போன்ற நார்ச்சத்து உணவு வகைகள், தேன், நெல்லிக்காய் போன்ற காயகல்ப பொருள்கள் சேர்த்த உணவாக அமையட்டும்.

❒❒❒



சிரிங்க... சிரிச்சுக்கிட்டே இருங்க!

சிடுசிடு முகம்; முட்டை முட்டையாக கவலை சுமந்த பேச்சு; களைத்துப் போன மனசு; இலேசில் சிரிக்காத நரசிம்மராவ் சுபாவம்; உலகத்தையே தாங்கும் 'அட்லஸை' விட பாரம் சுமப்பதான நினைப்பு. இதுக்கு மேல் விவரித்தால் அந்த நெகடிவ் அலை நம்மையும் தொற்றிக் கொள்ளும் அபாயமிருப்பதால், இத்துடன் வர்ணனை நிறுத்தப்படுகிறது)

இப்படிப்பட்ட ஆட்களுக்கு ஆயுசும் மைனஸ்! எழில் தோற்றமும் மைனஸ்!

எஃப்.எம். ரேடியோ பாணியில், சிரிங்க, சிரிங்க... சிரிச்சுக் கிட்டே இருங்க!

சிரிக்கிறோம்! உடனே மனசு ரிலாக்ஸாகிறது. அந்த

உற்சாக அலை அறையில் பரவி, மற்ற டென்ஷன் ஆட்களுக்கும் சந்தோஷ சுருதி ஏறுகிறது.

சிரிக்கும்போது, மூளை, ஹார்மோன்களையும் நியூரோ டிரான்ஸ்மிட்டர்களையும் வெளியிடுகிறது. இது நரம்பு மண்டலத்துக்கு எனர்ஜி டேப்லட்டுகள் தந்து, மன அழுத்தத்தைக் குறைக்கிறது. கையோடு நரம்புத் தளர்ச்சியையும் சரி செய்கிறது.

சிரிப்பதால் முக தசைகள் விரிவடைந்து முகமே அழகாகிறது. மனம் விட்டுச் சிரிக்கும்போது (கவனிக்க... அரசியல்வாதிகள் கைதாகி ஜீப்பில் ஏறும்போது சிரிக்கும் காரியச் சிரிப்பல்ல!) 'நேச்சுரல் கில்லர் செல்கள்' என்ற புற்றுநோய் மற்றும் வைரஸ் நுண்கிருமிகளை இயற்கையாக அழிக்கும் 'டி' செல்களின் உற்பத்தி அதிகரிக்கிறது. இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

'சிரிப்புத் தெரபி' என்பது இன்று நகர்ப்புறங்களில் ஃபேஷனாகிவிட்டது. ஆனால் 'ஹாஸ்ய யோகா' என்பது யோகாசனத்தின் அடிப்படையான விஷயம்.

எனவே, செண்டிமீட்டர் புன்னகை விரிப்பதுதான் டீஸன்ஸி என்று நினைக்காமல், ஹா... ஹா... ஹோ... ஹோ... என்று தொடர்ந்து சிரியுங்க.

முகம் முழுக்க சிரிப்பும், நுரையீரல் முழுக்க ஆக்ஸிஜனும் நிரப்ப, இதைவிட சந்தோஷமான யோசனை உண்டா?



"நீங்க செஞ்சா ஹாஸ்ய யோகா... அதையே நான் செஞ்சா லூஸ் லைலாவா?"

நியூலுக் டிப்ஸ்

- அழகுக் கலைஞர் வசுந்த்ரா

"அட! உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா? நம்பவே முடியலையே! காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி இருக்கீங்களே!"னு ஒரு சிலரைப் பார்த்து வாயைப் பிளக்கிறோம். உணவு விஷயத்தில் கட்டுப்பாடா இருந்து, சில காஸ்ட்யூம் டெக்னிக்குகளைப் பயன்படுத்தினா, நீங்ககூட இளமையா தோற்றளிக்கலாம். ஜஸ்ட் ட்ரொசீட்!



எடையைக் கவனியுங்க!

நம் நாட்டுப் பெண்கள் சராசரியாக ஐந்தடி இரண்டங்குலமும், ஆண்கள் ஐந்தரையடி உயரமும் உள்ளனர். எனவே, சராசரியாக பெண்களின் எடை 50-60 கிலோ இருக்கலாம். ஆண்கள் 60-70 கிலோ வரை இருக்கலாம். எக்கச்சக்கமா சதை போட்டு, இடுப்பும் தொடையும் பெருத்துப் போனா, வயதானத் தோற்றம் ஏற்படும்.

தினமும் இருபது நிமிஷம் கட்டாய உடற்பயிற்சி செஞ்சா, 'சிக்' என்ற இளமை கிடைக்கும்.

தியானம் செய்யுங்க!

'தியானம்'னு சொன்னதும் 'யப்பா.. ஆளை விடு சாமி'னு அடுத்த பாராவுக்குத் தாவிட்டீங்களே... இது நியாயமா? அமைதியான சூழ்நிலையிலே, உங்க வீட்டிலேயே வசதியான 'போஸ்'லே உட்கார்ந்துக்கிட்டு, மனசைக் கட்டுப்படுத்துங்க. பிரேக் பிடிக்காத மாநகரப் பேருந்து மாதிரி, மனசு தறி கெட்டு எங்கோ ஓடி ட்ரபிள் கொடுக்கும்தான். ஆனால் நாளடைவில், எண்ணங்கள் உங்கள் வசப்படும். மன அழுத்தம், டென்ஷன் போன்றவை குறையும், மனசு ஆரோக்கியமா இருந்தா, அது உடம்பிலும் பிரதிபலிக்கும்.

ஹேர் கலரிங் செய்யுங்க!

''உனக்கு வயசாயிடுச்சு..'னு இயற்கை தேவதை, காதோரம் வந்து ரகசியமாய்ச் சிரிப்பாளாம். அதுதான் நரை முதலில் காதோரம் ஆரம்பிக்கிறது. இளமையா தெரியணும்னு முடிவு கட்டிய பிறகு, நரையை மறைக்கிறது தப்பில்லீங்க. புரோட்டீன் கொண்ட அமோனியா கலவாத, ஹேர் கேர் ஃபார்முலா கொண்ட, உயர்தர ஹேர் கலரிங் செஞ்சா அநியாயத்துக்கு வயசும் குறைஞ்சு போகும்.

பிளான்ட், பிரவுன், செஸ்நேட், ரெட் என ஏகப்பட்ட ஷேடுகளில் சாயம்பூசி அழகான இளமைத் தோற்றம் பெறலாம்.

முன் நெற்றி முக்கியம்



அகலமான, மேலேறிய நெற்றி இருந்தால், அது நிச்சயம் வயசான தோற்றம் தந்து விடும். 'ஃப்ரெண்ட் வேரியேஷன்ஸ்' மூலம் உங்க முகத்தை, இளமையா காட்ட முடியும். கம்ப்யூட்டர் மூலம் ஹேர் ஸ்டைல்களைத் தீர்மானிக்க, தகுந்த பியூட்டிஷியன்களை அணுகவும். ஃப்ரெண்ட் செட்டிங் செய்து உங்கள் பிரச்னைக்குத் தீர்வு காண்பார்கள்.

பிளஸ் எது? மைனஸ் எது?

உலகத்திலேயே யாருமே நூறு சதவிகிதம் கச்சிதமா பிறக்கறதில்லே. எல்லார்கிட்டேயும் குறையும் இருக்கும், நிறையும் இருக்கும். ரஜினிகாந்துக்கு கறுப்பு நிறம் மாதிரி, தனுஷுக்கு நார்க்குச்சி உடம்பு மாதிரி. ப்ளஸ்ஸை மேலும் அதிகமாக்கி, மைனஸ்ஸைக் குறைக்கத் தெரியணும். உதாரணத்துக்கு, உங்க கண்கள் அழகா இருந்தா, அதை மேலும் கவர்ச்சியாக்கணும். உதடோ, மூக்கோ அழகாக இல்லாத ஆண்கள், நறுக் என்ற மீசை வளர்த்து குறையை மறைக்கலாம், ரகசியம், அம்புடுதேங்!

ட்ரபிள் தரும் டபுள் சின்


நீங்க என்னதான் ஃபேஷனா டிரஸ் செய்தாலும், கழுத்தில் ஊளைச் சதை இருந்தால், அழகே போச்சு! தேங்காய் எண்ணெயில் அரைமூடி எலுமிச்சையை பிழிந்து, கழுத்தில் பூசவும். கழுத்தின் அடி பாகத்திலிருந்து, மோவாயை நோக்கி, சருமத்தைத் தூக்கி நிறுத்துவது போல, இதமாக மசாஜ் செய்யவும். அதைத் தொடர்ந்து ஹாட் டவல் ஒத்தடம் தரவும். அப்புறமா, கடலைமாவு, தயிர், அரை மூடி எலுமிச்சைச் சாறு சேர்த்து, குழைத்துப் பூசி கழுவி விடவும். நாளடைவில், கழுத்தில் எக்ஸ்ட்ரா சதை இருக்காது. தலையணை எதுவும் பயன்படுத்தாமல் தூங்கப் பழகினால், 'டபுள் சின்' பிரச்னையே கிடையாது.

வாட்டமான வகிடு

உங்களுடைய முக அமைப்புக்கும், கூந்தலின் தன்மைக்கும் ஏற்ற வகிடு எடுத்தா, நிஜ வயசை கச்சிதமா மறைச்சுடலாம். இந்த டெக்னிக் புரியாததால், ஒரு சிலர் தப்புத் தப்பா வகிடு எடுத்து சீவறாங்க. அனுபவம் வாய்ந்த ஹேர் ஸ்டைலிஸ்டு களிடம் ஐடியா கேளுங்க. அவங்க உங்க வகிட்டையும், லுக்கையும் மாத்திடுவாங்க. ஜஸ்ட் ட்ரை ஒன்ஸ்!

உடையை மறக்காதீங்க!

'ஆள் பாதி ஆடை பாதி'னு சும்மாவா சொன்னாங்க. ஜீரோ பர்சனாலிட்டி ஆட்களையும் ஹீரோ வாக்குவது டிரஸ்தானே! நல்ல ஃபிட்டிங், எடுப்பான கட்டிங், ஸ்லீக் நெக்லைன் உள்ள லேட்டஸ்ட் ஃபேஷன் ஆடைகளை அணிந் தால், வயசு 'மடமட' என்று குறைந்து விடும்.



நடையிலும் தெரியட்டும்...

எல்லாமே இருந் துக்கிட்டு, கூன் போட்டு நடந்தால், நல்லாவா இருக்கும்? நீங்க நடக்கிற ஸ்டைல், உட்காரும் விதம், பேசும் தோரணை இதில் எல்லாம் கூட இளமை வெளிப்படும்படி செய்யலாம். தன்னம்பிக்கை மிளிர, ஃப்ரெஷ்ஷாகச் சிரிங்க! கலகலப்பா பேசுங்க! சுறுசுறுப்பா நடங்க... ஜிம்முக்குப் போகாமலேயே ஜின்செங் தோற்றத்துடன் ஜம்முன்னு இருப்பீங்க...

□□□

இளமையாய் இருக்க நட்புவட்டத்தை அதிகரியுங்கள்

உறவினர்கள் நம்மைப் புரிந்து கொள்ளலாம். புரிந்து கொள்ளாமலும் போகலாம். ஆனால் நண்பர்கள் அப்படி இல்லை. மனம் ஒத்துப் போனால்தானே அது நட்பு? நட்புவட்டத்தை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். இளமை தொடரும்.


நண்பர்களிடையே கலகலப்பான வெடிச்சிரிப்புகளுக்குப்

பஞ்சமில்லாமல் இருக்கலாம். அல்லது அமைதியான சூழலில் மனம்விட்டு பிரச்னைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். அல்லது ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு, அமைதியான சூழலில் மனம் உருகி நிம்மதி காணலாம். எப்படியிருந்தாலும் நட்புக்கு மனச்சுமைகளை இறக்கிவைக்கும் சக்தி உண்டு.

சமவயதுத் தோழர்கள் ஒருபுறம் இருக்க, நம்மைவிட வயது குறைந்தவர்களோடும் நட்பு பாராட்டுவது நல்லது. இதில் இரண்டு வித வசதிகள். தற்காலத்துக்குத் தகுந்தாற்போல் நம் ரசனையை ஓரளவாவது இதனால் மாற்றிக் கொள்ள முடியும். தவிர, நாமே சுமார் எழுபது அல்லது எண்பது வயதுவரை வாழ்ந்தாலும், அதற்குள் எல்லா நண்பர்களையும் இழந்திருக்க மாட்டோம்.

அதெப்படி நம்மைவிட வயது குறைந்தவர்களிடம் நட்புடன் பழக முடியும்? தலைமுறை இடைவெளி என்பது நடுவே மூக்கை நீட்டுமே என்கிறீர்களா? அதைத் தீர்த்துக் கொள்வதில் ஒன்றும் பெரிய சிக்கல் இல்லை.

'கல்யாணந்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா?' அல்லது 'மன்மதராசா' பாடல்களை ரசித்து அவர்கள் தாளம் போட்டுக் கொண்டிருந்தால், ''உன் ரசனையைத் தூக்கி உடைப்பில் போடு. இந்தக் கால பாடல்களே படுகேவலம்'' என்பதுபோல் விமர்சனம் செய்ய வேண்டாம். 'நீங்கள் அந்தக்காலம்' என்பது அழுத்தமாக அந்த இளைஞன் மனத்தில் ஒட்டிக் கொள்ளும். அதற்குப் பிறகு நட்பு எப்படி?



''அதற்காக நாங்களும் சேர்ந்துகொண்டு நாங்கள் வெறுக்கும் அந்தப் பாடலுக்கு ஆட வேண்டுமா?'' என்று கேட்க வேண்டாம்.

இந்தப் பாடல்களைப் பொறுத்தவரை அவற்றின் எந்த அம்சம் பிடிக்கவில்லை என்பதை பிரித்துச் சொல்லுங்கள்.

''ஆகா, அது இல்ல பாட்டு!'' என்று ஒரு பட்டியலைப் புளகாங்கிதத்துடன் கூறும்போது, அதில் பாதிக்குப் பாதியாவது இந்த காலப் பாடல்களாக இருக்கட்டும்.

இப்போதைய இளைஞர்களின் மனதுக்குப்பிடித்த நாவலாசிரியரின் ஒரு படைப்பையாவது படித்து வைத்துக் கொள்ளுங்கள்.

அதைப் பற்றிய நியாயமான விமர்சனங்களைக்கூடச் செய்யலாம், தப்பில்லை.

உங்களது அந்தக்கால நினைவுகளை அவர்களிடம் பகிர்ந்து கொள்வதில் தப்பில்லை. ஆனால் அது உங்களைப் பற்றியே பெரிதும் பெருமைப் பட்டுக் கொள்ளக் கூடிய விஷயமாக இருக்கக் கூடாது. அதேபோல, 'என்ன இருந்தாலும் எங்களது காலம்தான் பிரமாதம்' என்னும்படியான தொனியும் வேண்டாம். முடிந்தால் கொஞ்சம் நகைச் சுவையை பேச்சில் தூவிப் பாருங்கள்.



தொடக்கத்தில்தான் மேற்கண்ட உத்திகள் தேவை. அதற்குப் பிறகு பாச உணர்வில் நட்பு பலப்பட்டுவிட வேண்டும். அதற்குப் பிறகு பிரிவும் கிடையாது, மனதளவில் முதுமையும் கிடையாது.

இளைஞர்களின் ரசனைக்குரிய விஷயங்கள் உங்களுக்கு விளங்கவில்லையென்றால், கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உபதேசங்களைக் கொட்டாமல், அவற்றை ஆலோசனைகள் என்கிற வடிவத்தில் அளித்தால், இந்தக்கால இளைஞர்கள் நிச்சயம் அதை ஏற்றுக் கொள்வார்கள். காரணம், அவர்கள் பாசாங்கற்றவர்கள்.

□□□

தெம்பு தரும் துட்டு!

அறுபதைக் கடந்த சிலர் தெம்பாக இருப்பதைப் பார்த்து வியந்திருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் நிதித்துறையை சரியான விதத்தில் நிர்வகிக்கத் தெரிந்தவர்களாக இருப்பார்கள். அதாவது, இவர்கள் பெரிய பணக்காரர்களாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆனால் எதிர்காலம் பற்றிய பல அச்சங்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருப்பார்கள்.



"நாளைக்கே நான் திடீர்னு போயிட்டா என் குடும்பம் நடுத்தெருவிலே நிற்குமே" என்று கவலைப்படுபவர்கள், போதிய ஆயுட்காப்பீட்டை செய்து கொண்டிருந்தால், அந்த அச்சம் பெரிதும் குறைந்துவிடும்.

"சினிமாவிலும் கதையிலும் படிக்கிறமாதிரி, நம் குழந்தைகளும் வளர்ந்து பெரியவர்களானவுடன் நம்மை ஆதரவாக கவனித்துக் கொள்ளவில்லையென்றால்?" இப்படி யோசிப்பவர்கள் முகம் கவலையில் வாடியிருக்கும். மாறாக, சேமிப்பில் குழந்தைகளின் வருங்காலத்துக்கு ஒரு பகுதி என்பதோடு, தங்கள் வருங்காலத்துக்கும் ஒரு பகுதியை எடுத்து வைத்துவிடுபவர்களின் முகத்தில் கவலைக் கோடுகள் இருக்காது.





வாரம் இரண்டு முறை ஓட்டலில் குடும்பத்தோடு உணவு, மாதம் ஒரு முறை நண்பர்களோடு நட்சத்திர ஓட்டலில் டிஸ்கோதெ, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குடும்பத்தில் அனைவருமாக வெளியூர் சென்று வருவது என்பதெல்லாம், மேல், நடுத்தர குடும்பங்களுக்குகூட அதிகப்படியான விஷயங்கள்தான். அனாவசியங்களைக் குறைத்துக் கொண்டு, வீட்டிலேயே மொட்டை மாடி உட்பட விதவிதமான இடங்களில், வீட்டு உணவு, வருடத்துக்கு ஒருமுறை வெளியூர் என்பது போல் வைத்துக் கொண்டால், சேமிப்பும் அதிகமாகும், உடல் நலமும் மேம்பட்டதாக இருக்கும். பிறகென்ன இளமை மறையாதே!


"எவ்வளவு சேர்த்து வைத்தாலும் நாளைக்கே ஏதாவது இதய நோய் மாதிரி வந்து தொலைச்சு, ஆஸ்பத்திரியில சேரும்படியாச்சுன்னா, மொத்த சேமிப்பும் கரைஞ்சிடுமே" என்று எண்ணி முகத்தில் மேலும் சில கோடுகளை ஏற்றிக் கொள்வதைவிட, உடல் நலத்திற்கான மெடிக்ளெயிம் போன்ற உடல்

நலக் காப்பீடு திட்டங்களில் சேர்வதனால் மனம் இலேசாகும்.

ஒரு குழந்தை பிறந்தவுடனேயே அதன் வருங்காலத்திற்கென, மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிவிட்டு, அந்தத் தொகையில் எக்காரணம் கொண்டும் கைவைக்காமல் இருந்தால், வயதானாலும் முதுமை கூடாது.

□□□

ரொமான்ஸ் என்பது கெட்டவார்த்தை அல்ல!



குழந்தைகள் வளர்ந்தபிறகு, பெற்றோர் அப்பாவாகவும் அம்மாவாகவும் மட்டுமே இருப்பது, நம் நாட்டில் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. அதாவது தம்பதிகளாக இருப்பதில்லை. யாராவது ஒருவராவது 'வேண்டாமே' என்று ஒதுங்கிவிடுகிறார்கள். மற்றவர்கள் மனத்தில் பாரம் சுமக்கிறார்கள். வயதும் ஏறி, பாரமும் ஏறினால் முதுமை தானே?

தம்பதிகளுக்குள் ரொமான்ஸ் கடைசிவரை இருக்க வேண்டியது அவசியம். அப்படியிருப்பவர்கள் முகத்தில் ஒரு தனிக் குறுகுறுப்பு இருந்து கொண்டே இருக்கும்.

அன்பை மனத்தில் வைத்துக்கொண்டால் போதாதா? இப்படி நினைத்துக் கொண்டு இருந்து விடாதீர்கள். வார்த்தைகளினாலும் சின்னச் சின்ன செயல்களினாலும் வெளிக்காட்டுங்கள். நடுத்தர வயதைத் தாண்டிய பிறகும் கூட, குறும்புகளும் சீண்டல்களும் தம்பதியருக்குள்ளே இருக்கலாம்.

இல்லற வாழ்க்கை என்பது 'அந்த' விஷயம் மட்டுமல்ல. கணவன் மனைவி இருவரால் மட்டுமே நினைத்து உற்சாகப்படக் கூடிய சந்தர்ப்பங்களை, அவ்வப்போது ரகசிய வார்த்தைகளின் மூலம் பரிமாறிக் கொள்ளலாமே.

மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் கேரி கூப்பர் என்ற மனநல மருத்துவர் "ஒரு குறிக்கோளோடு வாழ்பவர்கள் மனநிறைவோடு வாழ்கிறார்கள். மனநிறைவு கொண்டவர்கள் தாம்பத்திய உறவிலும் ஆர்வம் கொள்கிறார்கள்" என்கிறார்.

கலியாணம் ஏன்?

அமரர் கல்கி



நான் சிறு பையனாயிருந்தபோது எங்கள் ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாணத்தில் வழக்கமாயுள்ளதுபோல் மேளம் தடபுடல் பட்டது. எங்கள் உபாத்தியாயர் "அதோ மேளச் சத்தம் கேட்கிறதே. அது என்ன சொல்கிறது, யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார். பிறகு அவரே சொன்னார் : - "நன்றாய்க் கேளுங்கள் **'அகப்பட்டுக் கொண்டான், அகப்பட்டுக் கொண்டான்'** என்று அது அலறுவது தெரியவில்லையா?" என்று.

அதாவது "ஐயோ! பாவம்! ஒரு மனுஷன் அநியாயமாய்க் கலியாண வலையில் அகப்பட்டுக் கொண்டானே!" என்று அந்த மேளம் அலறுகிறதாம். இது ரொம்ப உண்மைதான். கலியாணத்தில் ஒருவன் தன் விடுதலையை இழந்து விடுகிறான். பெரும் பொறுப்பு அவன் தலையில் அமர்கிறது. இதெல்லாம் கண் முன்னால் பிரத்யக்ஷமாகத் தெரிந்துங்கூட, மனிதர்கள் கலியாண வலையில் தாங்களே போய் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஏன்? கலியாணம் என்னும் ஏற்பாடு எதற்காகத்தான் ஏற்பட்டது?

புருஷர்களையும் சரி, ஸ்திரீகளையும் சரி, ஒரு பிராயத்திற்குப் பிறகு 'தனிமை' என்னும் துன்பம் பீடிக்கிறது. வாழ்க்கையில் வேறு எல்லாவித சுக சௌகரியங்களும் இருந்தாலும், ஏதோ குறை உணர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. ஒரு ஜீவன் இன்னொரு ஜீவனுடைய கூட்டுறவை நாடுகிறது. புருஷனுக்கு ஸ்திரீயினுடைய சிநேகத்தினாலும், ஸ்திரீக்குப் புருஷனுடைய சிநேகத்தினாலும்தான் இந்தக் குறை தீரும். இது இயற்கை நியதி; கடவுளின் சித்தம். ஒருவனுக்கு இத்தகைய குறை தோன்றாவிட்டால், அவன் இயற்கைக்கு மாறுபட்டவன் என்றே தீர்மானிக்கலாம்.

தலைவலி, முதுகுவலி, மன இறுக்கம் ஆகியவற்றிற்கு ரொமான்ஸ், மனக்கிளர்ச்சி போன்றவை தீர்வாக இருக்கும் என்கிறார்கள் மருத்துவர்கள். டாக்டர் ரீட் மாஸ்கோவிட்ஸ் என்பவர் கூறுவது இதைத்தான். கோபம், கவலை, குற்ற உணர்வு போன்ற எதிர்மறை உணர்வுகள், நம் உடலில் அட்ரீனலின் சுரப்பி தொடர்பான இறுக்கத்தை உண்டாக்குகின்றன. இதனால் உடலின் மொத்த எதிர்ப்புச் சக்திகளுமே பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக தலைவலி, மன இறுக்கம் போன்றவை ஏற்படலாம். எதிர்மறையான உணர்வுகளுக்கு, நேர் எதிரான உணர்வுகளை - அதாவது ஆர்வத் துடிப்பு, உற்சாகம், இன்பம் ஆகியவற்றை அளிக்கும் உணர்வுகளை ஏற்படுத்திக் கொண்டால், மேற்படி பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

யோஹியோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவப் பேராசிரியரான டாக்டர் டேட்லி சாக்மேன் என்பவர், 'இல்

ஜீவன்களுடைய தனிமைத் துன்பத்தைப் போக்கிக் கூட்டுறவின் மகிழ்ச்சியை அவர்களுக்கு அளிப்பதற்காகத் தான் கலியாணம் என்பது ஏற்பட்டது. கலியாணத்தின் இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், சில நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். அவைகளில் முக்கியமானது காதல்.

காதல் என்றால் என்ன? காலஞ் சென்ற ஸ்ரீமான் வ.வெ.சு. அய்யர் காதலுக்கு மிகச் சிறந்த விளக்கம் ஒன்றை அளித் திருக்கிறார் : -

''கண் எல்லோரையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தை களையெல்லாம் கேட்கிறது; வாய் காரியம் இருக்கிறதோ இல்லையோ, பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்ற யாரைப் பார்க்கும்போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை இராவிட்டாலும், அவருடைய வார்த்தையைக் காது தேவாமிரு தத்தைப் பருகுவது போலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும் போது வாய் குளறுகிறது; நாக்கு கெஞ்சுகிறது; இதெல்லாம் காதலின் அடையாளம். ஆனால் இக் காதல் எப்படிப் பிறக்கிறது என்றாலோ, அது தேவ ரகஸியம் - மனிதரால் சொல்ல முடியாது.''

இப்படிப்பட்ட காதலில் தேக தத்துவம், மனோ தத்துவம் இரண்டும் அடங்கியிருக்கின்றன. காதலி அல்லது காதல னுடைய ஸ்பர்சத்தினால் எவ்வளவு இன்பம் உண்டாகிறதோ, அவ்வளவு இன்பம் அவள் அல்லது அவனைப் பற்றி நினைப்பதிலேயே உண்டாகிறது.

இத்தகைய காதலைக் காரணமாகக் கொண்டு ஏற்படும் கலியாணம்தான் சிரேஷ்டமானதாகும். முன்னமே நான் சொன்னது போல், நம் சமூகத்தில் தற்சமயம் இத்தகைய கலியாணங்கள் நேர்வதற்குரிய நிலைமை இல்லை. ஆகவே, கலியாணத்திற்குப் பிறகேனும் சதிபதிகளுக்குள் அத்தகைய காதல் ஏற்பட்டால், அவர்கள் பாக்கியசாலிகள்தான்.

- 'கலியாணம்' என்ற கட்டுரையிலிருந்து

வற வாழ்வில் திருப்தி காண்பவர்களின் உடலில் டி செல்கள் அதிக அளவில் உள்ளன' என்று கண்டறிந்திருக்கிறார். (இந்த செல்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது தெரிந்திருக்கலாம்).

ஆக, நடுவயதில் நுழைந்தவுடனே அந்தரங்கங்கள் அனைத் துக்கும் தடைபோட அவசியம் இல்லை. ரொமான்ஸ் மன உற்சாகத்தைத் தருகிறது என்றால், அது நிச்சயம் மனத்தின் இளமையை மேலும் சில ஆண்டுகளுக்குத் தொடர வைக்கும். ஆக இளமைக்கு இப்படி ஓர் எளிதான வழி இருக்கும்போது, அதை நிறுத்திக் கொள்வானேன்? தொடரட்டும் சீண்டல் களும் குறும்புகளும், இன்ன பிறவும்.

- அனு, குல்லூர


கார்டூன் படங்கள் : செல்வம்

படம் : யோகா

ஏற்பாடு பண்ணுங்கப்பு!

அப்பே... எங்க ஊரு விட்டு உங்க ஊருக்கு (சென்னைக்குதான்) வந்தோமப்பே... நாங்க வந்த நேரம் நடுவழியில ரயில நிறுத்தி (கூடுவாஞ்சேரியில), ஒரு மணி நேரத்துக்கு மேலாகும் ரயில் புறப்பட, தாம்பரத்துல இரட்டை இருப்புப் பாதை வேலை ஜரூரா நடக்குதுன்னாங்க.

மெயின் ரோட்டுக்கு வந்து சென்னைக்கு போக டாடா சுமோ கிடைக்குமான்னு விசாரிச்சோம். உடனே அவரு நமக்கு எந்த ஊருன்னாரு. மதுரையின்னு சொல்லி முடிக்கு முன்ன, நமக்கு அருப்புக் கோட்டைன்னார். சரி எடுங்க வண்டியன்னா, வண்டிய எடுத்து வேற பாதைல போனாரு. என்னன்னு கேட்டா, ஒரு செகண்டு ஒரு செகண்டுன்னுட்டு பத்து நிமிஷமா ஒரு கிராமத்துக்குள்ள போயி டிரைவரைப் பிடிச்சாரு. பாகன் வந்தா யானை கட்டுப்படுற மாதிரி அப்புறந்தான் வண்டி காத்தோடு மோதிக்கிட்டு போச்சு.



வெளில பார்த்தா இரண்டு பஸ்ஸ ஒரு பஸ்ஸா ரப்பரால இணைச்சு ரயில் வண்டி மாதிரியும், மாடி பஸ்ஸும், எங்கு காணினும் ஹெல்மெட் தலைகளும். உள்ள கேட்டா ஒரு பொண்ணு மூச்சு விடாமப் பேசுது, சுஹா சினியை ரகசியம் சொல்லச் சொல்லுது, அவங்க சூடு மச்சி சூடுங்கறாங்க. அண்ணாமலைல பார்த்த ராதிகா வந்து, ஏதோ இங்கிலீஷ்ல பேசுறாங்க. இடையில இடையில டப்பாங்குத்துபாட்டு வேற. உள்ள உக்கார முடியலப்பு, ஆட்டம் போடச் சொல்லுது. அப்பு, நாங்கெல்லாம் சினிமா டாப்டென் தான் பார்த்துருக்கோம்.

நீங்க கொடுத்துவச்சவங்க வெஜிடேபிள் டாப் டென்னுன்னு வீட்டுல, ரோட்டுல, வண்டில இருந்தாப்லயே, கோயம்பேடு நிலவரம் தெரிஞ்சுக்கிடறீங்க. எங்கெங்க போக்குவரத்து நெரிசல்னு கூடத் தெரிஞ்சுக்க முடியுது. சின்ன வீடு வேணுமா பாட்ட கேட்டுக்கிட்டு வெளியில பார்த்தா, வலது பக்கம் பல்லவன், வீரபத்திரன் வண்டி மேல ஏறி நிக்கிறாரு. கொஞ்ச தூரம் போய் இடது பக்கம் பார்த்தா, வேற பல்லவன் டி.வி.எஸ்.50 மேல ஏறிட்டு திரும்பி பார்க்கிறாரு.

வேகமா வந்த நாங்க, அண்ணாசாலை வந்தவுடன் வாகனக் கடல்ல நீந்த ஆரம்பிச்சுட்டோம். ஆனா எப்.எம். ரேடியோ துணைக்கு இருந்த துனால, கூடுவாஞ்சேரி டூ நுங்கம்பாக்கம் பயணம் படு ஜோர், பிரியவே மனசில்லை.

எங்க ஊரு பேருக்குதான் பெரிய நகரம். நெல்லை, கோவையையெல்லாம் மையங் கொண்ட எப்.எம். புயல், மதுரைய மனசுல வச்சிருக்கிற மாதிரியே தெரியல. அப்பு, நீங்களாவது சொல்லி, மதுரைக்கு தனியார் எப்.எம். ரேடியோ ஒலிபரப்பு ஏற்பாடு பண்ணுங்கப்பு.

- விராட்டிபத்து ராதா, மதுரை

இட்லி சுட்டதடா!



அவள் புதிது. அவள் தொழில் புதிது. அவள் சுடும் இட்லியும் புதிது. ஓர் இட்லிக்காரிக்கான லாகவம் அவளிடம் இல்லை. இட்லிச் சட்டியைப் பார்ப்பதும் எதிர்த்திசையைப் பார்ப்பதுமாக இருந்தாள். அருகில் மூன்று வயதுக்குழந்தை 'தேமே' என நின்று கொண்டிருந்தது.

இட்லி வியாபாரம் செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலையில் அவள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ சிந்தனை கொண்டவளாகத்தான் காணப்பட்டாள்.

பிரதான சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கிளைச்சாலையில் இருந்தது அந்தத் தாசில்தார் அலுவலகம். ஏற்கெனவே பல டீக்கடைகளும், டிபன் கடைகளும் நிறைந்திருந்த அப் பகுதியில், புதிதாய் முளைத்திருந்தது மரகதத்தின் இட்லிக் கடை.

பிரச்னை இல்லாத நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள்தான் மரகதம். திருமணப் பேச்சு வந்தபொழுது, தொழில் செய்பவர்கள், வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள், நிலபுலன் கொண்ட விவசாயிகள் என, பல வரன்கள் வந்தன. ஆனால் பியூன் வேலையாக இருந்தாலும் பரவாயில்லை என்று காத்திருந்து, கடைசியில் தாசில்தார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் கணேசனுக்குக் கட்டிக் கொடுத்தனர்.

கணேஷ் நல்லவன்தான். பொறுப்பாக குடும்பத்தை நடத்தினான். சந்தோஷமாக வைத்திருந்தான். அவர்கள் அந்நியோன்ய வாழ்க்கைக்கு அடையாளமாக, ஆண் வாரிசையும் பெற்றிருந்தனர்.

கணேஷின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. சில மாதங்களாக வீட்டைச் சரியாக கவனிப்பதில்லை. வருமானம் குடி, ரேஸ் என சீரழிந்தது.

தட்டிக் கேட்டால், அடி தடி சண்டை....

"என்னடி பெரிசா டிராமா போடறே... நான் இப்படித்தான் இருப்பேன். நீ என்ன வேணாலும்



பண்ணிக்க."

கோபத்தின் உச்சிக்கே போனான் மரகதம்.

"உன் ஆபீஸ் வாசல்ல இட்லிக்கடை போட்டு, உன் மானத்தை வாங்கறேனா இல்லையா பார்" என கொதித்தான். அதை காதில் வாங்கும் நிலையில் அவன் இல்லை. ஏதோ உளறிக் கொண்டு படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

அந்தச் சபதத்தின் பிரதிபலிப்புதான் அவள் போட்டிருக்கும் இட்லிக்கடை.

மதிய வேளை. வியாபாரம் ஆகி ஏதோ சில்லறை சேர்ந்திருந்தது. அதைப் பற்றியெல்லாம் அவள் எண்ணியதாகத் தெரியவில்லை. அவள் கவனமெல்லாம் அந்தத் தாசில்தார் அலுவலக வாசலை நோக்கியே இருந்தது. மதிய உணவுக்கு வெளியே வந்த ஊழியர்கள், ஆளுக்கொரு கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

வாட்டசாட்டமான, மிடுக்காக உடை அணிந்த ஒருவர், அவள் கடையை நோக்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவள் உள்ளத்தில் உணர்ச்சி வெள்ளம் பிரவாகம் எடுத்தது.

'அந்த மனுசனுக்குச் சரியான பாடம் கற்பிக்கப் போகிறோம். அவருக்கு மட்டுமல்ல. வீட்டைக் கவனிக்காத ஒவ்வொரு ஆண் மகனுக்கும் சாட்டையடியாக இருக்க வேண்டும்' எனக் கறுவிக் கொண்டாள்.

வந்தவர் அவர் கடை வாசலில் நின்று இட்லி கேட்டார். தட்டில் நான்கு இட்லியை வைத்து, எழுந்து நின்று பவ்யமாகக் கொடுத்தான். தட்டை வாங்கியவர், இரண்டு துண்டுதான் வாயில் போட்டிருப்பார். மரகதம் மென்மையான குரலில்,

"இந்த ஆபீஸ்ல வேலை பார்க்கிற கணேசை உங்களுக்குத் தெரியுமா?" என்று ஆரம்பித்தாள்.

" தெரியுமே! அவர் எனக்குக் கீழே வேலை பார்க்கிற கிளார்க். நான் அவருக்கு ஆபீஸர். ஏன் என்ன விஷயம்?" என்று கேட்டார் அந்த வாட்டசாட்டம்.

"அவரு பொஞ்சாதிதான் நான்" ஒரு பெரும் பாரத்தை இறக்கி வைக்கப் போகிற நிம்மதி அவளுக்கு.

"இட்லியைவிட வடை, போண்டா, பஜ்ஜியிலதான் நல்ல ஆதாயம். என் பெண்டாட்டிகூட அடுத்த தெருவிலதான் வடைக்கடை போட்டிருக்கா" என்றார் நிதானமாக. ○

இராம. சுந்தரபாண்டியன்

ஏழை இந்தியனுக்கு என்ன லாபம்?



“நம் நாட்டிலிருந்து விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக் கோள்களில் ஏராளமான நுட்பமான பாகங்கள் உண்டு என்றாலும், மிக முக்கியமான பாகங்களில் ஒன்று, அவற்றில் பொருத்தப்படுகிற கேமரா. இந்த பிரத்யேக கேமராக்களின் தொழில் நுட்பம் தெரிந்த நாடுகள், உலகிலேயே மிகச் சில மட்டும்தான். அவர்களிடமிருந்து, கேமராக்களை இறக்குமதி செய்து, நாம் அனுப்பும் செயற்கைக் கோள்களில் பொருத்தி, விண்ணில் செலுத்துகிறோம். ஒவ்வொரு கேமராவும் பல கோடி ரூபாய் விலை உள்ளது. ஒரு செயற்கைக் கோளில், அதன் பணி, செயல் திறன், பயன்பாட்டுக்கால அளவு போன்றவற்றின் அடிப்படையில், ஒன்றுக்கு மேற்பட்ட கேமராக்களைப் பொருத்த வேண்டியது அவசியமாகிறது. அண்மையில் விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள் ஒன்றில் மூன்று பெரிய கேமராக்களும், பதினைந்து சிறிய கேமராக்களும் பொருத்தப்பட்டன. அண்மையில், செயற்கைக் கோள்களில் பொருத்துவதற்குரிய கேமராக்களை, முழுக்க முழுக்க இந்தியாவிலேயே தயாரித்து, செயற்கைக் கோளில் பொருத்தி, ஏவி இருக்கிறோம். இந்திய விண்வெளி சரித்திரத்தில், இது ஒரு மைல் கல் சாதனை''

இப்படிச் சொல்கிறவர் டாக்டர் டி.ஜி.கே. மூர்த்தி.

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் மூத்த விஞ்ஞானிகளுள் ஒருவர். பெங்களூரில் பணிபுரிகிறார். அண்மையில் ராமகிருஷ்ண மடம் மாணவ, மாணவிகளுக்கு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காகச் சென்னைக்கு வந்திருந்த அவரைச் சந்தித்துப் பேசினோம்.

செயற்கைக் கோளில் பொருத்தும் கேமராவை இறக்குமதி செய்யாமல், இந்தியாவிலேயே தயாரிப்பதால் என்ன நன்மை?

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? செயற்கைக் கோளில் பொருத்தும் கேமராக்களை இறக்குமதி செய்கிறபோது, ஒரு கேமராவின் விலை ஆயிரம் கோடி ரூபாய். இந்திய விஞ்ஞானிகளின் கூட்டு முயற்சியால், நம் நாட்டிலேயே அது வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டுள்ளது. ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்து வாங்கிய கேமராவை, நாமே தயாரித்திருப்பது மட்டுமில்லை, நாம் அதில் நான்கில் ஒரு பங்கு செலவில் தயாரிக்க முடிகிறது என்பதுகூட முக்கியமான சாதனைதான்.''

இந்த முயற்சியில் நீங்கள் சந்தித்த சவால்கள் என்னென்ன?

''கேமரா செய்கிற தொழில் நுட்பத்தை அறிந்த நாடுகள், நம்முடன் அதைப் பகிர்ந்து கொள்ள முன்வரவில்லை. எனவே, நம் விஞ்ஞானிகளே அடிப்படையான விஷயங்களில் தொடங்கி, படிப்படியாக முன்னேறி, வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறோம். கேமரா தயாரிப்பில் மிக முக்கியமான கட்டம், அதில் பயன்படுத்தப்படும் கண்ணாடியின் (லென்ஸ்) வடிவமைப்புதான். அது எவ்வளவு சிரமமான சவால் என்பதை விளக்குகிறேன். ஐம்பது



மீட்டருக்கு ஒரு ரோடு போட வேண்டும். அதன் மேற்பரப்பில் எங்காவது ஓரிரு இடங்களில், அதிக பட்சமாக ஒரு மில்லிமீட்டர் அளவுக்கு மேடு அல்லது பள்ளம் இருக்கலாம். அப்படியென்றால் அந்த ரோடு எவ்வளவு வழுவழுப்பானதாக இருக்கும். கேமராவின் லென்ஸும் அப்படித்தான் இருக்க வேண்டும். அதுதான் மாபெரும் சவால், என்றாலும் நம் விஞ்ஞானிகளின் கடுமையான உழைப்பும், புத்திசாலித்தனமும் வீண்போகவில்லை.

2006ம் ஆண்டில் ஏவப்படவிருக்கும் செயற்கைக் கோளில் பொருத்தப்படவிருக்கும் கேமராக்கள், இன்னும் மேம்பட்டவை. அவை இரு பரிமாணத்தில், மிகத் துல்லியமான படங்களை எடுத்து அனுப்பும் சக்தி படைத்தவை.

இவ்வளவு செலவழித்து, செயற்கைக் கோள்களை அனுப்புகிறீர்களே, இதனால் ஒரு சாதாரண இந்தியக் குடிமகனுக்கு என்ன பயன்?

"ஒவ்வொரு குடிமகனுக்கும் என்று இல்லாமல், ஒட்டுமொத்தமாக இந்த நாட்டுக்கு என்ன பலன் என்றுதான் பார்க்க வேண்டும். பூமிக்கு அடியில் உள்ள கனிமங்களைக் கண்டறிய முடியும். நிலத்தடி நீர் பற்றிய விவரங்களை, முன்கூட்டியே பெற முடியும். இதன் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து, பெரும் அழிவுகளைத் தடுத்து நிறுத்த முடியும். தட்பவெட்ப நிலை, பருவமழை குறித்த விவரங்களைக் கணிக்க முடியும். வறட்சி மற்றும் வெள்ளச் சேதங்களை விஞ்ஞானரீதியில் சரியாய் அளவிட முடியும். பயிர் விளைச்சலைக் கணக்கிட்டு அறிய முடியும். கடலில் மீன் வளத்தைக் கண்டறிய முடியும்.

இந்திய விண்வெளிப் பயண வரலாற்றில் அடுத்த இலக்கு என்ன?

"இந்தியா அனுப்பும் (ஆளில்லா) செயற்கைக் கோள் சந்திரனில் இறங்கும்."

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

புத்தம் புதிய தொடர்கதை

வைகை வாய்விட்டுச் சிரித்தாள். கையில் அன்றைய நாளிதழ்.

பக்கத்தில் உட்கார்ந்து அக்கௌண்ட் ஸ்டேட்மெண்ட் ஒன்றை கம்ப்யூட்டருக்குப் புகட்டிக் கொண்டிருந்த அர்ச்சனா வைகை யைத் திரும்பிப் பார்த்தாள், வியப்பாய்.

"என்ன வைகை..! இன்னிக்கு உன்னோட சிரிப்பில் எழுபது எம்.எம் தெரியுது... பேப் பர்ல ஏதாவது ஜோக்கா?"

"ஜோக் இல்லை... ஒரு ஹைக்கூ கவிதை.."

"ஒரு கவிதையைப் படிச்சா இவ்வளவு பெரிய சிரிப்பு வருமா..? என்ன கவிதை...! படி பார்க்கலாம்..."

வைகை படித்தாள்;

"லஞ்சம் வாங்கினேன்.
பிடிபட்டேன்.
லஞ்சம் கொடுத்தேன்.
விடுபட்டேன்."

அர்ச்சனாவும் அண்ணாந்து சிரித்து விட்டுச் சொன்னாள். "சூப்பர்! இந்தியா வோட தேசியப் பறவை மயில், தேசிய விலங்கு புலி. இப்ப நீ படிச்சது ஒரு தேசியக் கவிதை. எழுதினது யாரு...?"

"ஒரு கல்லூரி மாணவி."

"அந்த மாணவிக்கு ஏதாவது விருது கொடுக்கலாம்" அர்ச்சனா சொல்லிக் கொண்டிருக்கும்போதே - பக்கத்தில் இருந்த கிரஹாம்பெல் கண்டுபிடிப்பு கூப்பிட்டது. வைகை ரிஸீவரை எடுத்தாள். காதுகளில் பொருத்தி குரல் கொடுத்தாள்,

"ஹலோ..."

மறுமுனையில் ஒரு பெண் குரல் கேட் டது.

"ஹன்ஸா ஹாஸ்பிடல்...?"

"எஸ்.."

"மிஸ். வைகை ப்ளீஸ்."

"ஹோல்டிங்."

"ஓ...! லைன்ல நீங்கதானா...? ரொம்ப சந் தோஷம்."

"நீங்க...?"

"நான் மங்கையர்க்கரசி. 'மெட்டியோசை' பெண்கள் மாத இதழின் ஆசிரியை. மெட்டி யோசை படிப்பீங்களா...?"

"எப்பவாவது..."

மங்கையர்க்கரசி சிரித்தாள். "ஹன்ஸா ஹாஸ்பிடல் மிகப் பெரிய ஹாஸ்பிடல். அங்கே அக்கௌண்ட் செக்ஷனில் வேலை பார்க்கிற உங்களுக்கு, பத்திரிகைகள் படிக்க நேரம் கிடைக்காதுதான். அது தவிர சாயுந் தர நேரங்கள்ல 'மனசுக்குள் மழையா?' சர்வீஸ் வேற..."

வைகை ரிஸீவரில் மௌனம் காக்க, மங் கையர்க்கரசி தொடர்ந்தாள். "நீங்க சத்தம் இல்லாமே பண்ணிட்டு வர்ற அந்த சமூதா யப் பணியைப் பத்தி, வெளியே

கோடி கோடி



யாருக்கும் தெரியலை. அதை வெளிச்சம் போட்டுக் காட்ட எங்க பத்திரிகை மெட்டியோசை விரும்பு கிறது. உங்க எக்ஸ்க்ளூஸிவ் பேட்டி ஒண்ணு வேணுமே...?"

"பேட்டியா... அது... வந்து..."

"ப்ளீஸ், மாட்டேன்னு சொல்லிடாதீங்க... உங்க பேட்டி வெளியே வந்தால்தான் நீங்க பண்ணிட்டிருக்கிற 'மனசுக் குள் மழையா...?' சர்வீஸ் பற்றி எல்லாருக்கும் தெரியும். இந்தியாவில் எந்த நேரத்திலும் தற்கொலை பண்ணிக் கொள்



1

மின்னல்கள்

ளக்கூடிய மனோபாவத்தில் முப்பது சதவிகித இளைஞர்கள் இருப்பதாக, 'ஹ்யூமன் ரீசோர்ஸ்' சர்வே ஒன்னு சொல்லுது. தமிழ்நாட்டில் இந்த சதவிகிதம் அதிகம். இந்த சதவிகித எண்ணிக்கையைக் குறைக்கணும்னா, உங்க முகமும் நீங்க பண்ணிட்டிருக்கிற சர்வீஸூம் வெளியே தெரியணும்...''

''ஸாரி...! ஒரு பத்திரிகைக்கு எக்ஸ்க்ளுஸிவ் பேட்டி தர்ற அளவுக்கு பெரிசா ஏதும் நான் பண்ணிடலை. 'SOCIETY FOR CARING AND SHARING' என்கிற ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தோடு சேர்ந்துகிட்டு கடந்த மூணு வருஷ காலமா இந்த 'மனசுக்குள் மழையா' சர்வீஸை நடத்திட்டு வர்றேன். தற்கொலை முயற்சியில் ஈடுபடறவங்களுக்கு சரியானபடி கவுன்ஸிலிங் கொடுத்து, அவங்க மனசுக்குள்ளே இருக்கிற விரக்தியையும், கோழைத்தனத்தையும் விரட்டியடித்து, ஒவ்வொருத்தரையும் புது மனுஷனா மாத்தறது தான் என்னோட பணி. இந்தப் பணிக்கு எந்தவிதமான விளம்பரப் பூச்சும் வேண்டாம்.''

''மிஸ் வைகை...! நான் என்ன சொல்ல வர்றேன்னா...?''

''ஸாரி...ஸாரி...''வைகை ரிஸீவரை வைத்துவிட்டு அர்ச்சனா பக்கம் திரும்ப, அவன் இமைக்காமல் வைகையையே பார்த்தான்.

''என்ன பார்க்கிறே...?''

''மெட்டியோசை பத்திரிகை ஆறு லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிற ஒரு பத்திரிகை. அவங்களே



ராஜேஷ்குமார்

விரும்பி வந்து உன்கிட்டே பேட்டி கேட்கும்போது, நீ மறுக்கிறது சரியில்லை."

"இதோ பார்... அர்ச்சனா... 'சோஷியல் ஒர்க்'ங்கறது காமிராவுக்குப் பின்னாடி செய்யப்பட வேண்டிய ஒண்ணு... எனக்கு நானே வெளிச்சம் போட்டுக்க தயாரா யில்லை..."

"ஆயிரத்தில் ஒருத்தியம்மா நீ... உலகம் அறிந்திடாத பிறவியம்மா நீ..." என்று அர்ச்சனா கிண்டலாக பாடிக் கொண்டு இருக்கும்போதே, அருகில் இருந்த இன்டர்காம் கிணுகிணுத்தது.

வைகை ரிஸீவரை எடுக்க சீஃப் டாக்டர் சர்வேஸ்வரனின் குரல் மிருதுவாய்க் கேட்டது.

"வைகையா...?"

"எஸ்...டாக்டர்..."

"பிஸியா இல்லேன்னா என்னோட ரூமுக்கு வந்துட்டுப் போம்மா..."

"இப்ப வர்றேன் டாக்டர்..." வைகை ரிஸீவரை வைத்துவிட்டு, அர்ச்சனாவை ஏறிட்டாள்.

"சீஃப் கூப்பிடறார்... போயிட்டு வந்துடறேன்..."

"ஒரு நிமிஷம் வைகை..."

"என்ன...?"

"சீஃப் கையெழுத்துப் போட வேண்டிய ஃபைல் ஒண்ணு பெண்டிங்கில் இருக்கு. எடுத்துட்டுப் போய் கையெழுத்து வாங்கிட்டு வந்துடறியா?"

"கொண்டா..."

அர்ச்சனா ரேக்கில் இருந்து ஃபைலை எடுத்துக் கொடுக்க, வைகை வாங்கிக் கொண்டு கண்ணாடிக் கதவை தள்ளியபடி வெளியே வந்தாள். ஏ.ஸி காற்றில் நனைந்திருந்த உடம்பு, வெளிக் காற்றின் வெப்பத்துக்கு உட்பட்டது.

நீளமான கிரானைட் வராந்தாவில் நடை போட்டாள் வைகை. கொஞ்சம் தொலைவில் ஹாஸ்பிடலின் பிரம்மாண்ட கட்டடங்கள் மாலை வெய்யிலில் பளபளப்பாய்த் தெரிந்தன. வேலைக்குச் சேர்ந்த புதிதில் ஹாஸ்பிடலின் பிரம்மாண்டத்தைப் பார்த்து மிரண்டுபோன வைகைக்கு, அந்த மிரட்சியிலிருந்து மீளவே ஒரு மாத காலம் பிடித்தது. 'டாக்டர்களில் இத்தனை வகையா... நோய்களில் இப்படியெல்லாம் உண்டா' என்று மலைத்துப் போய் அதிலிருந்து மீள இன்னொரு மாதம் தேவைப்பட்டது.

''உன் அப்பா டைரக்டராக இருக்கலாம். அதுக்காக நாம தேனிலவு போகும் போது, வெள்ளை டிரஸ் போட்ட ஒரு டஜன் பெண்களை கூடவே அனுப்பி வைக்கணுமா?

– எஸ். மோகன்

வராந்தாவைக் கடந்து மெயின் பில்டிங்குக்கு வந்து, ஐந்தாவது மாடியில் இருக்கும் சீஃப் டாக்டரின் அறைக்குப் போவதற்காக லிஃப்ட்டை எதிர்பார்த்து காத்திருந்த போது, பின்பக்கம் குரல் கேட்டது.

"ஹலோ வைகை...!"

திரும்பிப் பார்த்தாள். டாக்டர் பர்வதவர்த்தினி (ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட்) வெள்ளைக் கோட்டோடும், கழுத்தில் தொங்கும் ஸ்டெத்தோடும் தெரிந்தாள். புன்னகை செய்தாள் வைகை.

"ஹலோ டாக்டர்... குட் ஈவினிங்."

"குட் ஈவினிங்! எங்கே இந்தப் பக்கம்...?"

"சீஃப் கூப்பிட்டார்..."

"நானும் சீஃப்பைப் பார்த்துட்டுத்தான் வர்றேன். இன்னிக்கு சீஃப்போட அறையில் அவர் மட்டும் இல்லை. அவரோட சன் ஆதித்யாவும் இருக்கார். ஆதித்யாவை நீ பார்த்திருக்கியோ...?"

"இல்ல டாக்டர்.. அவர் கலிபோர்னியாவில் மருத்துவ மேல்படிப்பு படிச்சுக்கிட்டிருக்கிறதா கேள்விப்பட்டிருக்கேன்..."

"இன்னிக்கு காலையில் வந்துட்டார். ஆதித்யா வெரி ஸ்ட்ரெய்ட் ஃபார்வர்ட். அப்பா மாதிரி கிடையாது. அதே சமயம் ஜோவியல். உன்னை ஏதாவது கேள்வி கேட்டா, யோசனை பண்ணி பதில் சொல்லு.... ஏடாகூடமா பதில் சொல்லி மாட்டிக்காதே... பீ... கேர்ஃபுல்..." பர்வதவர்த்தினி தன் ஆட்காட்டி விரலைக்காட்டி எச்சரித்துவிட்டு நகர்ந்துவிட, வைகை காலியாய் வந்து நின்ற லிஃப்டில் ஏறி, ஐந்தாவது மாடிக்கு உயர்ந்தாள்.

சீஃப் டாக்டர் சர்வேஸ்வரன் அறைக்குள் வைகை நுழைந்தபோது, டாக்டரும் அவருடைய மகன் ஆதித்யாவும் கையில் ஒரு ஃபைலை வைத்துக் கொண்டு ஏதோ டிஸ்கஷனில் ஈடுபட்டிருந்தனர்.

"குட் ஈவினிங் டாக்டர்."

"வாம்மா வைகை...! உட்கார்" எதிரிலிருந்த நாற்காலியைக் காட்டிவிட்டு, பார்த்துக்



கொண்டிருந்த ஃபைலை மூடினார் சர்வேஸ்வரன். வைகை, ஆதித்யாவை அவசரப் பார்வை பார்த்துவிட்டு உட்கார்ந்தாள்.

ஆதித்யாவுக்கு முப்பது வயது இருக்கலாம். நிச்சயம் ஆறடி உயரம். கலிஃபோர்னியாவில் மூன்று வருஷம் இருந்ததன் விளைவு உடம்பில் மினுமினுப்பு கூடி, சருமம் இலேசாய் பீட்ரூட் நிறம் வாங்கியிருந்தது. அடர்த்தியான கருண்ட கேசமும், மேல் உதட்டின் மேல் கெட்டியாய் அப்பியிருந்த மீசையும், எந்தப் பெண்ணின் பார்வையையும் சில விநாடிகள் நிறுத்த வைக்கக்கூடிய அங்கீகாரத்தைப் பெற்றிருந்தன.

"வைகை! ஹி ஈஸ் மை சன் ஆதித்யா. கலிஃபோர்னியா எம்.ஆர்.பி.எஸ்ப். மூணு வருஷத்துக்குப் பிறகு சென்னை மண்ணை மிதிச்சது இன்னிக்குக் காலையில்தான். ஹாஸ்பிடல் ஸ்டாஃபைப் பத்தி சொல்லிட்டிருக்கும்போது உன்னைப் பத்தியும் சொன்னேன். ஆதித் உன்னைப் பார்க்கப் பிரியப்பட்டதால வரச் சொன்னேன்..."

வைகை ஆதித்யாவை ஏறிட்டு 'வணக்கம்' சொல்ல, அவனும் புன்னகையோடு கைகளைக் குவித்தான்.

"எஸ் வைகை! உங்களைப் பத்தி அப்பா சொன்னார். நிறைய சோஷியல் ஒர்க் பண்றீங்களாமே?"

வைகை முணுமுணுத்தாள். "நிறைய இல்லை; ஏதோ கொஞ்சம்... என்னால முடிந்தது..."

"'மனசுக்குள் மழையா' சர்வீஸ் மூலம் இதுவரைக்கும் எத்தனை பேரை தற்கொலை முயற்சியிலிருந்து மீட்டிருப்பீங்க?"

"ஆயிரத்தை நெருங்கிட்டிருக்கேன்..."

"ரியலி...?" ஆதித்யா வியந்து கொண்டிருக்கும்போதே, சர்வேஸ்வரன் குறுக்கிட்டார்.

"வைகை...! என்னோட சன் ஆதித்யாவுக்கும் சோஷியல் சர்வீஸ் ஆக்டிவிடீஸ் பிடிக்கும். அதுல இன்ட்ரஸ்ட் அதிகம். நம்ம ஹாஸ்பிடல் மூலமா ஏதாவது புதுமையா பண்ணணும்ங்கிறது ஆதித்யாவோட விருப்பம். ரத்த தானம், கண் தானம், சிறுநீரக தானம், இது தவிர, வேற ஏதாவது பண்ணணும். என்ன பண்ணணும். நீயே சொல்லு....

"நான் எது சொன்னாலும் அதை நீங்க அப்படியே ஏத்துக்குவீங்களா டாக்டர்...?"

ஆதித்யா இரண்டு கைகளையும் விரித்தான்.

"ஷ்யூர்..."

வைகை மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தாள். "டாக்டர்...! நம்ம ஹன்ஸா ஹாஸ்பிடலுக்கு ஃபைவ் ஸ்டார் ஹாஸ்பிடல் என்கிற ஒரு பேர் இருக்கு. அதாவது வசதி படைத்தவர்கள் மட்டுமே இங்கே ட்ரீட்மெண்ட் எடுக்க முடியும். நடுத்தர வர்க்கம் இந்த ஹாஸ்பிடல் பக்கமாகக் கூட வரமுடியாது. ஏழை வர்க்கம் இந்த ஹாஸ்பிடலை நினைச்சுக்கூடப் பார்க்க முடியாது. கல்லூரி படிப்புகளில் கோட்டா இருக்கிற மாதிரி, நம்ம ஹாஸ் பிடலிலும் நடுத்தர வர்க்கத்துக்கும், ஏழை வர்க்கத்துக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்துக்குக் கோட்டா ஒதுக்கி, குறைந்த கட்டணத்தில் ராயல் ட்ரீட்மெண்ட் கொடுத்தா என்ன...?"

"ஃபென்டாஸ்டிக்" என்றான் ஆதித்யா. சர்வேஸ்வரன் மட்டும் தாடையைத் தேய்த்தார்.

"ஹாஸ்பிடல் போர்டு டைரக்டர்ஸ் இதுக்கு ஒத்துக்க மாட்டாங்களே..."

"அப்பா...! வைகையோட திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்தா, நம்ம ஹாஸ்பிடலுக்கு நிச்சயமா பப்ளிக் மத்தியில் நல்ல பேர் கிடைக்கும். அடுத்த வாரம் நடக்கப் போகிற டைரக்டர்ஸ் மீட்டிங்கில இதைப் பத்தி நான் பேசப் போறேன்." ஆதித்யா சொல்ல, வைகை குறுக்கிட்டாள்.

"இன்னொரு விஷயம் டாக்டர்... இந்த திட்டத்தால ஹாஸ்பிடல் நிர்வாகத்துக்கு பொருளாதார ரீதியாய் எந்த நஷ்டமும் கிடையாது. நான் இந்த ஹாஸ்பிடலின் அக்கவுண்ட் செக்ஷனில் இருக்கிறதுனால, அது சம்பந்தமாய் க்ளியர் ஸ்டேட்மெண்டை என்னால தர முடியும். அந்த ஸ்டேட்மெண்ட்டை ஆதாரம் காட்டி, நீங்க போர்டு டைரக்டர்ஸ் மீட்டிங்கில் பேச முடியும்..."

"அந்த ஸ்டேட்மெண்ட் எனக்கு வேணுமே?"

"நாளைக்குக் காலையில் தர்றேன் டாக்டர்..."

"ப்ளீஸ்..."

ரவுண்ட்ஸுக்கு நேரமாவதை உணர்ந்து வைகை எழுந்தாள். சர்வேஸ்வரன் கேட்

டார்.

"அப்பா எப்படியிருக்காரும்மா?"

"நல்லாயிருக்கார் டாக்டர்."

"அதே மளிகைக்கடைதானே?"

"ஆமா டாக்டர்..."

"உன்னோட சிஸ்டர்ஸ் யமுனாவும் துங்கபத்ராவும் காலேஜுக்குப் போயிட்டிருக்காங்களா...?"

"யமுனா படிப்பை முடிச்சுட்டு வீட்ல இருக்கா. துங்கபத்ரா மட்டும் செகண்ட் இயர் பி.எஸ்ஸி பண்ணிட்டிருக்கா."

"அம்மா...?"

"அதே ஆஸ்துமாவோடும் மூட்டு வலியோடும் ஆரோக்கியமாக இருக்கா..."

வைகை ஹாஸ்பிடலை விட்டு ஆறு மணிக்கெல்லாம் கிளம்பி, 'சொசைட்டி ஃபார் கேரிங் அண்ட் ஷேரிங்' கட்டடத்துக்கு வந்தபோது நேரம் ஆறு முப்பது. கௌண்டரில் இருந்த பெண்ணிடம் கேட்டாள்.

"தற்கொலைக் கேஸ் ஏதாவது கவுன்ஸிலிங்குக்கு வந்திருக்கா?"

"ஒரு கேஸ் வந்திருக்கு... மேடம்."

"ஆணா... பெண்ணா...?"

"ஆண்..." சொல்லிக் கொண்டே பர்ட்டிகுலர் ஃபைலைக் காட்டினாள். வைகை படித்துப் பார்த்தாள்.

பெயர்: இளஞ்செழியன்

வயது: முப்பது

தற்கொலை முயற்சி : மூன்று முறை

காரணம்: காதல் தோல்வி

வைகை ஃபைலை மூடி வைத்துவிட்டு கவுன்ஸிலிங் அறையை நோக்கிப் போனாள். சாத்தியிருந்த கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள்.

சோபாவில் அந்த இளைஞன் சாய்ந்து உட்கார்ந்திருந்தான். கலைந்த தலை, சவரம் செய்யாத முகம், வெறித்த பார்வை.

வைகை அவனுக்கு முன்னால் போய் உட்கார்ந்ததும் நிமிர்ந்து பார்த்தான். வைகை சின்னதாய் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

"என்ன இளஞ்செழியன்... நாலாவது முறையா என்னைக்குத் தற்கொலை முயற்சியில் ஈடுபடப் போறீங்க... இன்னிக்கு ராத்திரியேவா... இல்லை... நாளைக்கு ராத்திரியா...?"

அவன் தலை குனிந்து மௌனமாய் இருக்க, வைகை தொடர்ந்தாள். "காதல் தோல்வின்னா எப்படி.... அந்தப் பெண் உங்களை மறுத்துட்டு வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிட்டாளா?"

"இல்லை..." என்று முனகி தலையை ஆட்டினான் இளஞ்செழியன்.

"பின்னே எப்படி காதல் தோல்வி....?"

"நான் அவளைக் காதலிக்கிற அளவுக்கு என்னை அவள் காதலிக்கலை."

"ஏன்... எதனால...?"

"தெரியலை..."

"யார் அந்தப் பொண்ணு... பேர் என்ன...?"

"போட்டோ இருக்கு... தரட்டுமா?"

"கொடுங்க..."

இளஞ்செழியன் தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்த அந்த பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை எடுத்து நீட்ட, வைகை வாங்கிப் பார்த்தாள்.

வைகையின் ரத்த நாளங்களில் அதிர்ச்சி அலை அடித்தது.

ஃபோட்டோவில் சிரித்துக் கொண்டு, வைகை!

(தொடரும்)

நள்ளிரவு நேரம். விடிந்தால் தீபாவளி. பிளாட்பார குடும்பவாசிகளிடையே அந்த கண நேரத்தில் சந்தோஷம் தொற்றிக் கொள்கிறது. திருச்சி ரோட்டரி கிளப் உறுப்பினர்கள் கார்களில் வந்து இறங்கி, புத்தம் புதுத் துணிகளை அன்போடு கொடுக்கிறார்கள். கூடவே இனிப்புப் பொட்டலம். இரவின் இருளை ஒரு வினாடியில் தட்டிப் பறிக்கிற மின்னல் போல, சாலையோரம் வாழ் மனிதர்களின் முகங்களில் வெட்டுகின்றது. ஆனந்த மின்னல். திருச்சிராப்பள்ளி ரோட்டரி கிளப், கடந்த பதினான்கு வருடமாகத் தொடர்ந்து ஆற்றி வரும் தீபாவளித் தொண்டு.

ஒரு பேருந்தின் உட்புறம் முழுவதுமாக வேலை வாய்ப்பு பற்றிய தகவல் பிரசுரங்கள் ஒட்டப்படுகின்றன. அடுத்து என்ன படிக்கலாம் என்பதற்கான வழிகாட்டும் குறிப்புகள். மேனிலைப் பள்ளிகளின் மைதானத்தில் வந்து நிற்கின்றது. இந்தக் கண்காட்சிப் பேருந்து. மாணவர்கள் ஆர்வத்துடன் குறிப்புகள் எடுத்துக் கொள்கிறார்கள்.

நீளும் நேசக் கரங்கள்



* வாகனத்தில் வாய்ப்புக்கள்



* அன்புடன்...


* யூத் பார்லிமெண்ட்



வளரும் இளைய சமுதாயத்தினரிடையே, ஜனநாயக அ சியலைப் பக்குவமா வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக் கொண்ணுட விதமாக, அமைக்கப்படுகிறது யூத் பார்லிமெண்ட். தேசப்பற்று, மக்கள் நலன், அரசியல் விழிப்புணர்வு, நாகரிக அணுகுமுறை, வரம்பு மீறாதிருத்தல், தீர்ப்புகளில் நடுநிலைமை, நேரத்தை வீணாக்காதிருத்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மதிப்பெண்கள் தரப்படுகின்றன. இந்த ஆண்டு, திருச்சி காவேரி மகளிர் கல்லூரியில் நடை பெற்ற யூத் பார்லிமெண்ட் போட்டியில் வெற்றி பெற்றது திருச்சி சட்டக் கல்லூரி அணி.

இது மட்டுமா? திருச்சி ரோட்டரி சங்கம் சார்பாக ஆண்டு தோறும் புத்தகக் கண்காட்சியும், சிறுகதைப் போட்டியும் நடக்கின்றன. ஆண்டு தோறும் எட்டு சிறுகதைகளை 'நல் முத்துக்கள்' எனும் தலைப்பில் சிறுகதைத் தொகுதியாக வெளியிட்டு வருகிறார்கள். இந்த ஆண்டு சிறுகதைப் போட்டியில் பங்கு கொண்டு பரிசு பெற்றவர்களில் ஒருவர், எழுத்தாளர் கிருஷ்ணா.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



ஆஹா! ரூ.10,000 பரிசு!

தமிழர் திருவிழா முடிஞ்சுட்டுதுங்க. நம்ம போட்டித் திருவிழா தொடருதுங்க. சந்தோஷமா வந்து கலந்துக்கங்க.

11வது போட்டி, பரிசு உங்களுக்குத்தான். கேள்விகளைப் படிச்சு, புரிஞ்சுக்கிட்டுப் பதில்களை நிரப்புங்க. கரும்பு கடிக்கிற மாதிரி சுலபமான G.K. கேள்விகள்தான்.

கலக்குங்க!

- எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில் எழுதிய கல்கி வாசகர் ஒருவருக்கு, ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.
- நிறையப்பேர் சரியாக எழுதியிருந்தால், குலுக்கல் முறைதான்.
- ஆறுதல் பரிசாக 20 பேருக்குத் தலா ரூ. 100 ரொக்கப் பரிசு.
- கல்கி வாசகர்கள் எங்கிருந்தாலும் இதில் பங்கேற்கலாம்.

வாசகர்கள் அனைவருக்கும்

கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

- இப்பரிசுத் தொகை வருமானவரி விதி முறைகளுக்கு உட்பட்டது.
- உறையின் மீது 'ஆஹா! ரூ.10,000 (11)' என்று குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- விடைகள் 31.1. 2004க்கு முன்னதாக கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும்.



குவிஸ் போட்டி கூப்பன் - 11

1. நடந்து முடிந்த சார்க் மாநாடு 2004க்குத் தலைமை தாங்கியவர் ....
2. கன்னியாகுமரியிலிருந்து புறப்படும் .... எக்ஸ்பிரஸ்தான் இந்தியாவில் அதிக தூரமும், நேரமும் பயணம் செய்யும் ரயில்.
3. பறக்க முடியாத பறவை ....
4. பெண்கள் காலில் (2வது விரலில் மெட்டிபோல) 3வது விரலில் அணியும் ஆபரணம் ....
5. இந்தியாவின் முதல் ஏர்லைன்ஸ் ....
6. நடிகர் சூர்யாவின் நிஜப் பெயர் ....

பெயர் : ....


முகவரி : ....

....

கையொப்பம் : ....

பூமி நிலை அறிக்கை

சைதன்யா



ஜனங்கள் தண்ணீர் லாரிக்குக் காத்திருக்கிறபோதும், பல சரக்குக் கடைகள், சலூன், டீக்கடை என்று சந்திக்கிறபோதும் மழையைப் பற்றிப் பேச ஆரம்பித்திருந்தார்கள். கோடை விலகிப் போகிறதாய் இருந்தது, அவர்கள் மனத்தில் இருந்து.

வயித்துப் பிள்ளைக்காரி நிறைசூலி ராசாத்தி. பொய்வலி கண்டாச்சு, நேரா நிக்க முடியாமல் சற்று முன் சாய்ந்து நிற்கிறாள். புருசங்காரன் வேத்தூர். வார இறுதி நாட்களில் ஓடோடி வருவான். வந்தால் சைக்கிளில் ரெண்டு பக்கமும் குடமெடுத்துக் கட்டிக் கொண்டு, எங்கிருந்தாவது தண்ணீர் கொண்டு வருவான். மத்தபடி அவளே தான் வீட்டுப் பாடுகள் பார்த்துக் கொள்ள வேண்டி வந்தது.

“மழை வந்தா நல்லதுதான...? யாரு வேண்டான்னாங்க... மழைப்பேறும் மகப்பேறும் எப்பன்னு யாரு கண்டாங்க?” என்றாள் ராசாத்தி வலியும் களைப்புமான புன்னகையுடன்.

தண்ணீர் லாரி வரவில்லை. நேற்றே வந்திருக்க வேணும். ஜனங்கள் நேற்றிலிருந்தே காத்திருந்தார்கள். வழியில் திரும்பி எங்காவது அதிகத் துட்டுக்குத் தண்ணியை அவன் விற்றிருக்கக் கூடும் எனவும், அவர்களில் பேச்சின் நடுவே பரிமாறிக் கொண்டார்கள்.

ஜனங்களுக்கு முன்பெல்லாம் செய்திகளில் வாசிக்கும் பெண்ணின் புடைவையுடுத்தலும், அலங்காரயெடுப்பும் பேச்சாய்க் கிடந்தது. பின்லேடன், தாவூத் பற்றி கேள்விப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு இன்டர் நேஷனல் லெவலில் ஒரு வீரப்பன்.

ஆனாலும் செய்தியறிக்கை முழுசும் பார்த்தார்கள். செய்தி முடியும் தருணத்தில் சரிதார் போட்ட சின்னப் பெண் வாத்திச்சி போல நீளக் குச்சியை மேப்பில் காட்டி, நாளை மழை பெய்யும் என்று ஜோசியம் சொன்னால், ஜனங்களுக்கு அதில் ஒரு சந்தோசம்... 'மவராசி வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்.'

தமிழ்நாடு மனுச முகமாட்டம் இருந்தது மேப்பில். அதன் மேல் மேகம்... கர்ச்சிப்பால் துடைத்துக் கொள்வது போல... தொலைக்காட்சியில்

காட்டினால் மழை வரும்.

காற்று முகம் மாறி சிறுகுளிர் வந்தாலே, ஜனங்கள் ஆர்வக் கொந்தளிப்பாகி வாசலுக்கு வந்து வானம் பார்த்தார்கள்.

ஆனாலும் கோடை வெயில் வருஷா வருஷம் எகிறிக் கொண்டே போகிறது. நிலத்தடியில் நீர் வேறு இல்லை. குழிக் குழியாய்க் கிடந்தன, வீட்டுக் கிணறுகள். சிலர் தினசரி கும்பிடும் சாமிக்கு பதில் மாத்துசாமி - ஸ்பெசலிஸ்ட் டாக்டர் மாதிரி - தேடி விமோசனத்துக்கு அலைந் தார்கள்.



இரும்பு வாடையாய்க் கலங்கலாய் வந்தது. வாய் கொப்பளிக்கக் கூட முடியாத தண்ணீர். ரிசல்ட் பார்த்துக் கொண்டு பக்கத்து வீட்டுக் காரனும் குழாய்க் கிணறெடுக்க நினைத்து...

"நல்லவேளை. நம்ம துட்டு மிச்சம்" என்றான் வீட்டுப் பொம்பளையிடம்.

"கிணத்தில் தண்ணியில்லை. என்னத்த நல்லவேளைன்றீங்க, லூசுப் பிறவி" என அவள் சலித்துக் கொண்டாள். கணவனை அடிக்கடி லூசு எனச் சொல்வதில் அலாதிப் பிரியக்காரி. எப்படியாவது அவனும் அவளுக்கு வாய்ப்புத் தந்து கொண்டேயிருக்கிறான் விடாமல்.

திருஷ்டிப் பொட்டெடுத்த பெண் பிள்ளையும், முகப்பவுடர்



"தலைவருக்கு எல்லா லஞ்சப் பணத்திலேயும் கரெக்டா பங்கு வைக்கும் உன்னை ஒரு சின்ன விஷயத்துக்கு உதவியாளர் வேலையிலிருந்து நீக்கிட்டாரா? என்ன அது?"

"பொதுமக்கள் கொடுக்கற மனு பேப்பரையெல்லாம் 'எடை'க்குப் போடுகிற காசுல பங்கு வைக்க மறந்துட்டேன்!"

- கிரிஜா மணாளன்

பூச்சும் நல்ல புடைவைக் கட்டலுமாய் பானு நடந்து போகிறாள். பக்கத்துத் தெரு. அம்மா வீட்டுக்கா தெரியவில்லை. உற்சாகத் துள்ளல் நடை.

"தண்ணி பிடிச்சிட்டியாக்கும். ஜாலியாக் கிளம்பிட்டே?" என்கிறாள் கோமதி.

மூர்த்தி நேற்றே குளிக்காமல் அலுவலகம் கிளம்ப வேண்டியதாயிற்று. இன்னிக்கும் குளிக்காவிட்டால் எப்படி? துவைக்காத உடைகள் வேறு. அந்த உடைகளை மாட்டிக் கொள்ள அவனுக்கே தாளவில்லை. சாதாரணமாகவே மகா வியர்வைக்காரன். துஷ்டனைக் கண்டால் தூர விலகு... என்பதைப் போல ஜனங்கள் அவனைக் கண்டு விலகி ஒதுங்கினார்கள்...

ஜனங்களில் சிலர் அலுவலகத்தில் சீக்கிரம் வந்து குளிக்க ஆரம்பித்தார்கள். குடிதண்ணீர் டிரம்களில் இருந்து பாட்டில்களில் பிடித்து, சிலர் வீட்டுக்கு எடுத்துப் போனார்கள்.

வார்டு லபக்தாஸ் என்று பட்டப் பேர் கொண்ட சிகாமணி, திருட்டில் டிகிரி வாங்கியவன். பூட்டாத சைக்கிள் என்றால் ஏனோ அது அவனுக்கு அவன் சைக்கிள் மாதிரியே தோணி விடுகிறது. சில சமயம் பூட்டிய சைக்கிள் கூட. பார்ட்டி உஷாரனாக் கூட, அவன் வழி தனி. சைக்கிளை உரிமையாய் இரவல் கேட்டு - 'ஒரு எமர்ஜென்சி சார்... சைக்கிள் குடுங்க' வாங்கிக் கொண்டுபோய் அடகு வைத்து சாராயம் குடித்து விடுவான்.

தண்ணீர்க் குட வரிசை லாரிக்கு தனித்துக் காத்துக் கிடந்தால், ஒவ்வொன்றும் அவன் வீட்டுக் குடமாகவே அடையாளம் தோணுகிறது. வார்டு லபக்தாசின் மனைவி சிதம்மா இத்தனைக் கொடுமைக்காரி அல்ல. தண்ணீர் பிடித்து வைத்துவிட்டு கைவேலை உள்வேலையாய் வீட்டில் எவளாவது இருந்தால், சிதம்மா அரவமில்லாமல் குடத்தை எடுத்துப் போய் தன் வீட்டில் தண்ணீரைக் கொட்டிக் கொண்டு, குடத்தை பத்திரமாய்க் கொண்டு வந்து வைத்து விடுகிறாள்.

கைவாகு கண்டு உள்ளொடுங்கிய குடங்கள், நடுப் பெருத்த இடுப்புப் பகுதியில் உதடு போலும் நெளிசல் கண்டிருந்தன சில. அவற்றை எடுத்துப் போக சிறு பிள்ளைகள் மட்டுமே அமைந்திருக்க... கனந்தாங்கவொண்ணாமல் அவற்றை அவை கீழே போட்டிருக்கலாம்.

கல்யாண மொய்யாக வந்த குடங்களில் சில உபயதாரர் பேர் கண்டிருந்தன.

எத்தனை கத்தியும் வரிசை போட்டும், தண்ணீர் ஊற்ற ஆரம்பித்ததும் அந்த வரிசை காணாமல் போய்விடுகிறது. அதுவரை சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவர்கள், பேன் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், குரங்குகள் போல உக்கிரப்பட்டார்கள். கண் சிவக்க சண்டையிட்டார்கள். வாய் கூசாமல் கெட்ட வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

வார்த்தை பெறாதவர்களும் அப்பாவி மக்களும், ஒதுங்கி மிரண்டு போய் நின்றார்கள். தண்ணீர் அவர்கள் முறைவரை வருமா என்று கவலையாய் இருந்தது. சின்ன வாளிகள், குடங்கள் என்று வைத்தவர்கள்கூட, அதைக் காட்டிவிட்டு பெரும் அண்டாக்களை வைத்துத் தண்ணீர் பிடித்துப் போனார்கள்.

"அம்மா ஃபோன் வந்திருக்கு..."

"யாரு?ன்னு கேட்டு, வெச்சிருடி. அப்பறமா வந்து பேசறேன். தண்ணி பிடிச்சிட்டிருக்கேன்ல...!"

"பேசிட்டு வாம்மா, உன் முறை வரும்போது நான் தண்ணி பிடிச்சு வைக்கிறேன்..." என்று சொன்ன சிதம்மாவை முறைக்கிறாள் அம்மா.

தண்ணீர்ச் சண்டை என்று வந்தால் சமாதானப்படுத்த புதிய ஆட்கள் முளைத்தார்கள்... அவர்கள் வீட்டுக்கு அன்றைக்கு மேலதிகம் தண்ணீர் கிடைத்தது...

கஞ்சி போட்டு வெளுத்து விறைத்த போலீஸ்காரக் காக்கிச் சட்டைகள், இப்போது அழுக்கும் வியர்வைப் பிசுக்கு

மாய், பஸ் கண்டக்டரின் சில்லரைப் பை போல ஆகியிருந்தது.

தண்ணீர் பிடிக்க என்று பித்தளைக் குடங்களும் எவர்சில்வர் குடங்களும் மோதிக் கொண்டது, சரித்திர கால வாள் சண்டை சப்தமாய் இருந்தது. பத்திரிகைகள் கவர்ச்சிப் படங்கள் அதிகம் வெளியிட்டு, ஜனங்களைக் குளிரப் பண்ண முயன்றன.

இதற்கெல்லாம் விடிவுகாலமே கிடையாதா? கத்திரிக்கு வராதா கத்திரி - சென்சார் - எனக் காத்துத் தவித்துக் கிடந்த ஜனங்கள், காத்துக் குளிர்ச்சியில் காது மடல் கிளர்ந்தார்கள். தெருவிலும் மொட்டை மாடியிலும் படுத்துக் கொண்டு, காற்றின் மாற்றத்தை அவர்கள் உணர்ந்தார்களே...

'அடியப்பா, என்னவெல்லாம் திருடு போய்க் கொண்டிருந்தது. திறந்திருந்த ஜன்னல் வழியே கைவிட்டு எது கிடைத்தாலும் லவட்டிக்கிட்டு ஓடிய படுபாவிப் பய காலமாய் இருந்ததே..!'

ஆண்கள் திரும்பக் கூச்சப்பட்டு சட்டை அணிய ஆரம்பிக்கிறார்கள். பெண்கள் தலைக்குக் குளிக்க ஆரம்பிக்கிறார்கள். காற்று ஏதோ பேச, செடிகள் தலையாட்டின.

ஊர்ப் பைத்தியம் புதிய காற்றில் யாரோ கிச்ச கிச்சு மூட்டினாப் போல தனக்குத் தானே சிரித்துக் கொண்டு அலைகிறது.

வெயில் குறைய ஆரம்பிக்கிறது. செய்தியறிக்கை குச்சி வாத்திச்சி முகத்தில் புன்னகை அதிகரித்திருந்தது. அவள் நாலு தடவை சொன்னால், ஒருதடவை பலிக்கிறது. மழையில் நனைந்து தமிழ்நாட்டு மனிதமுக மேப்மனிதனுக்கு, ஜலதோஷக் கோளாறு. அடிக்கடி அவன் மேகக் கைக்குட்டை உபயோகிப்பதைக் காட்டினார்கள் தொலைக்காட்சிப் பெட்டியில்...

"நாட்ல திருட்டுத்தனம் இனி குறைஞ்சிரும்லக்கா..!" என்றாள் கோமதி.

"ஆமடி ஆமா..!" என்று புன்னகைத்தாள் சீதம்மா, லார்ட் லபக்தாசின் பெண்டாட்டி.

அவள் வாய் முகூர்த்தம் பலித்தது.

அன்றிரவு நல்ல மழை. பேக்டரி சிருடை நனைய மக்கள் வீடு திரும்பினார்கள். ○

அந்த விழா ஆரம்பிக்க இன்னும் நாற்பத்தைந்து நிமிடங்கள் இருக்கின்றன. விழாவில் கலந்து கொள்ளும் வி.ஐ.பி.களில் இன்னும் ஒருவர் கூட வரவில்லை... ஆனால் அரங்கம் நிரம்பி வழிந்தது.

அரங்கத்தின் வெளியே நிற்கும் பார்வையாளர்களை சிரமப்பட்டு விலகச் சொல்லித்தான் வி.ஐ.பி.கள் மேடைக்கு வர முடிந்தது. அந்த அளவுக்கு பார்வையாளர்கள் கூட்டம் திமுதிமுத்தது அந்த விழாவில்...

அமரர் 'கல்கி' எழுதிய 'சிவகாமியின் சபதம்' நாவலை ஐம்பத்து மூன்று வாரத் தொடர் நாடகமாகத் தயாரித்து ஒலிபரப்பி, சாதனை படைத்துக் கொண்டிருக்கும் மதுரை வானொலி நிலையத்துக்கும், அந்த நாடகத்தில் நடித்த கலைஞர்களுக்கும் பாராட்டு விழா. மதுரை கண்ணதாசன் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் தான் எள்ளுபோட்டால் விழ இடமில்லாத அளவு கூட்டம்.



● கி. ராஜேந்திரன்



● சாலமன் பாப்பையா

''கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் கடந்த பதினைந்து ஆண்டுகளில் எந்த ஒரு திரைப்படக் கலைஞரையும் அழைத்ததில்லை. 'தொண்டு' ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இந்த மன்றம் இந்த விழாவை எடுத்திருக்கிறது என்றால், ஆற்றல் உள்ளவர்களை அடையாளம் காட்ட மட்டுமல்ல, இவர்களைப் போல நீங்களும் உயர வேண்டும் என்று அடுத்த தலைமுறைக்குக் காட்டத்தான்'' என்றார் தலைமையேற்றுப் பேசிய

வில் ஒடித்த வானொலிக்கு விழா

கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர், மனிதத் தேனீ சொக்கலிங்கம்.

விழாவின் ஒட்டு மொத்தப் பாராட்டையும் பெற்றவர் மதுரை வானொலி நிலையத்தின் எஸ். ஞானசம்பந்தன். சிவகாமியின் சபதத்தை வானொலி வடிவமாக்கியவராச்சே!

"யுத்தமற்ற உலகத்தை நோக்கிய பயணத்தில் சேவை செய்யத் தான் மதுரை வானொலி இந்தத் தொடரை எடுத்துக் கொண்டது.



• விழா மேடை



• பத்மா சுப்ரமண்யம்



• இளசை சுந்தரம்



• சொக்கலிங்கம்

விட, சிவகாமியின் சபதத்தில்தான் பாத்திரப்படைப்பும், கட்டுக்கோப்பும் மிக நேர்த்தியாக இருக்கும். சிவகாமியின் சபதத்தை, குறைந்தது ஐந்து ஆறு முறை படித்திருந்தால் மட்டுமே இந்தச் சாதனையை செய்ய முடியும். யார் யாரெல்லாமோ எடுத்து பார்த்துப் பார்த்துப் பிரமித்துப் போய் விட்டு விட்டதை, மதுரை வானொலி நிலையம் எடுத்துச் செய்திருக்கிறது. நன்றி. இந்தப் பாராட்டு விழாவில் அமரர் கல்கி இந்த அரங்கத்திலிருந்து வாழ்த்துகிறார் என்றே எண்ணுகிறேன்" என்றார் அமரர் கல்கியின் புதல்வர் கி. ராஜேந்திரன்.

தேசத்தின் வரலாற்றை நினைவு படுத்த வேண்டும் என்ற எண்ணம்தான் இந்தத் தொடரை வானொலி வடிவமாக்கியது. இந்தியாவிலேயே அகில இந்திய வானொலி முதன் முறையாக 'ஸ்டீரியோ' முறையில் தயாரிக்கப்பட்டு ஒலி பரப்பப் படுவது, சிவகாமியின் சபதம் மட்டுமே." என்றார் ஞானசம்பந்தன்.

"'அமரர் கல்கி'யின் படைப்புகளில் மகத்தான மிகப் பெரிய படைப்பு சிவகாமியின் சபதம்... கல்கியின் எழுத்துகளில் மிகவும் பேசப்பட்ட பொன்னியின் செல்வனை

'பரதக்கலையரசி' பத்மா சுப்பிரமணியத்தின் பேச்சு சலசலத்த நீரோடை போல கவரி வீசியது.

"சிவகாமியின் சபதத்தை நாவல் என்று சொல்லக் கூடாது. இதிகாசம் என்றுதான் சொல்ல வேண்டும். கலியுக வியாசராக, கலியுக வால்மீகியாக அமரர் கல்கியை காண்கிறேன். அமரர் கல்கி எழுத்துகளில் தொடாத அம்சமே கிடையாது. நூறு சரித்திரத்தைப் படித்தால் கூட நம்மால் ஜீரணிக்க முடியாத விஷயங்களை அமரர்

கல்கி சிவகாமியின் சபதத்தில் சொல்லி யிருக்கிறார். பரதக்கலையைப் பற்றி நான் ஆராய்ச்சி செய்தபோது, அமரர் கல்கி இல்லையே என்று வருத்தப்பட்டேன். அந்த பாக்கியத்தை நான் இழந்துவிட்டேன். சிவ காமியின் சபதம் கற்பனையாக இருந் தாலும், அதைப்படித்துப் பார்த்து இன்னும் மகாபலிபுரம் போனால், அந்தக் கதாபாத் திரங்கள் வாழ்ந்த இடங்களை நம்மை அறியாமல் தேடச் சொல்லும்.

''சிவகாமியின் சபதம் என்ற சிவ தனுசை ஒடிக்க நிறையப் பேர் முயன் றிருக்கிறார்கள். அதை ஒடித்த இராம பிரான் மதுரை வானொலிதான். இதைத் தயாரித்த ஞான சம்பந்தனுக்கு தெய்வ அனுக்கிரகம் மட்டுமல்ல. அமரர் கல்கியின் அனுக்கிரகமும் இருப்பதால்தான், அவரால் இதை சாதிக்க முடிந்திருக்கிறது'' என்றார் பத்மா சுப்ரமணியம்.

பார்த்திருக்கிறேன், 'சிவகாமியின் சபதம்' தொடராக வந்தபோது மதுரை ஆரப் பாளையம் பகுதி பஞ்சாலைத் தொழி லாளர்கள், கூட்டமாக நின்று 'கல்கி' இதழை விரும்பிப் படிப்பதைப் பார்த் திருக்கிறேன். இங்கே பாராட்டு பெற்ற கலைஞர்களுக்கு இன்னொரு பெருமை, கல்கியின் பாத்திரப்படைப்புகளில் நீங்கள் வாழ்ந்திருப்பதுதான்'' என்று வாழ்த்தினார் நகைச்சுவையருவி சாலமன் பாப்பையா...

ஏற்புரை நிகழ்த்திய மதுரை வானொலி நிலைய இயக்குநர் இளசை சுந்தரம், ''கலைஞர்களுக்குப் பாராட்டு அவசியம் தேவை. ஒரு மனிதனின் குழந்தைப் பருவத் தில் தாலாட்டும், மரணத்தின்போது நீராட் டும் இருக்கும். வாழும்போது பாராட்டு வேண்டும். தொடர்ந்து செயல்பட உற்சாக மாக இருக்கும்'' என்றார்.

சாலமன் பாப்பையா பொன்னாடை போர்த்த, பத்மா சுப்ர மணியம் நினைவுப் பரிசு வழங்கிய முப்பத் தைந்து கலைஞர்களில், அவையைக் கவந்தவர் குண்டோதரனாக நடித்த சர்வசித்து சந்திரன். உருவமும் பாத்திரப்படைப்பும் ஒற்றுமையானதுதான் அதன் ரகசியம்.



• பார்வையாளர்களில் ஒரு பகுதி



• பாராட்டு பெறும் வானொலிக்கலைஞர்

சலசலத்த நீரோடைக்குப் பிறகு தடதட அருவியும் அரங்கத்தில் பொழிந் தது. அதுவும் நகைச்சுவையாக!

''புலவர்கள் படித்து அவர்களுக்கு மட் டுமே சொந்தமானது என்றிருந்த தமிழை, சாமானியனும் விரும்பிப் படிக்கும் தமிழ் நடையில் தந்தவர் அமரர் கல்கி. கல்கி யின் எழுத்து சமையற்கட்டுக்கும் சென் றது. அந்த அளவுக்கு எளிமையான தமிழ் நடையை எழுத்தில் தந்தவர். நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் காலத்தில்

- குன்றக்குடி சிங்காரவடிவேல்
படங்கள் : ஆர். கணேசன்

கவுத்துட்டாங்க தலைவா!



"என்னது! மாலை நாலு மணிக்கு பெண் பார்க்க வர்றதாச் சொன்ன மாப்பிள்ளை இரவு எட்டு மணிக்கு வந்து நிற்கிறார்?"

"விடுங்க. மாப்பிள்ளை ரயில் எஞ்சின் டிரைவர்ங்கிறது உங்களுக்குத்தான் தெரியுமே?"


- உ. ராஜாஜி

"பையனுக்கு இருபது வயசுதானே ஆகுது. அதுக்குள்ள கல்யாணத்துக்கு அவசரப்படுறானா?"

"ஊஹூம், என்னோட சம்சாரம்தான் உடம்புல தெம்பு இருக்கும்போதே மருமகள் வந்துட்டா நல்லபடியா சண்டை போட்டுப் பார்த்துடலாம்னு நினைக்கிறா...!"

- சீர்காழி வி.ரேவதி





"நம்ம இலாகா எப்படியும் முதலிடம் வகிக்கணும்னு ஆசைப்பட்டது, நிறைவேறிடுச்சு...!"

"பலே! எதில் முதல் இடம்?"

"லஞ்சம் வாங்கும் பட்டியலில் முதலிடம்னு டீவியிலேயே சொல்லிட்டாங்க!"

- லலிதா செல்லப்பா

"தலைவர் ஏன் கடுப்பா இருக்காரு?"

"அவரு கட்சி ஆரம்பிச்சதை விளையாட்டுச் செய்திகள்ல சொல்லிட்டாங்களாம்."

- அஜித்லால்.



தெய்வத் தமிழ் நாட்டினிலே...

14

ஆனந்தி

வீர புருஷன்; சாந்த சிம்ஹம்!

திரு அல்லிக்கேணி எனப்படும் பிருந்தாரண்யத்தில் ஸ்ரீ வேங்கட கிருஷ்ணன் என்ற நாமத்தோடும், ஸ்ரீ பார்த்தசாரதி என்ற நாமத்தோடும் பகவான் கோயில் கொண்டிருக்கிறாரே,. அங்கே வைகுண்ட ஏகாதசியை ஒட்டி ராப்பத்து உற்சவம் நடக்கிறது. ஸ்ரீ நம்மாழ்வாரும், ஸ்ரீ ஆஞ்சனேய சுவாமியும் உடன் வர, உபதேசரத்ன மாலையின் அரிய பாசுரங்களை பாராயணம் பண்ணிக் கொண்டு அத்யாபக கோஷ்டி முன் செல்ல, அதைக் கேட்கும் ஆவலுடன் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமான் ஓடி வருவதைக் கண்டு, உள்ளம் பூரித்தது. வேதம் கூடவே வந்தாலும், பெருமாள் தமிழ் இசையில் அவ்வளவு ஆர்வம் காட்டுகிறார். . தமிழிசை இயக்கத்துக்கு முன்னோடி யாகவே இருந்திருக்கிறார் என்று உணர்ந்து, இதயம் விம்ம தரிசனம் செய்கிறோம்.

சுவாமி வரும் அழகைக் காணக் காத்திருக்கும் முதிய பெண்மணிகள், நடுத் தெருவில், தலை மண்ணில் படும்படி நமஸ்காரம் செய்கிறார்கள். இது அல்லவா பக்தி! தன்னை மறந்த லயம் என்பது இதுதானோ?

சுவாமி வீதி உலா போயிருக்கிறார். நாம் வேங்கட கிருஷ்ண பகவானை சேவிக்கலாம் என்று வரிசையில் நிற்கிறோம்.

சந்நிதியை மறைந்திருக்கும் உண்டியலைத் தாண்டியதும், திரு உண்ணாழியில் கம்பீரமாக நிற்கும் ஸ்ரீ வேங்கட கிருஷ்ண சுவாமியைக் கண்டு பரவசமாகிறோம்.


"இவனாரோ அறியேன் லலி
யாதொன்றும் தெரியேனே!
திகழொளி மணி கௌஸ்துபமும் அணிந்து கொண்டு
தேரில் ஏறியே சிங்கார பவனி வரான்."

என்று அழகர் குறவஞ்சியில் வஸந்த மோகினி மயங்கியது போல நாமும் மயங்குகிறோம்.

ருக்மிணி தேவியும், கலப்பை சார்த்திய தோளுடன் பலதேவரும், சாத்யகியும், மகன் பிரத்யும்னனும், பேரன் அநிருத்தனும் சூழ்ந்திருக்க, ஆஜானுபாகுவாக, வெண்ணிற மீசையுடன், கையில் பாஞ்சஜன்யம் ஏந்திக் காட்சி தருகிறார் ஸ்ரீ வெங்கடகிருஷ்ணன். ஆயுதம் தாங்காத கோலம். நினைத்த மாத்திரத்திலேயே ஆக்கவும் அழிக்கவும் வல்லவருக்கு ஆயுதங்கள் எதற்கு?

வெண்ணெய் உண்ட கண்ணனாக, யசோதை மைந்தனாக, கோவர்த்தனகிரிதாரியாக, காளிங்கநர்த்தனனாக தீர லலிதபுருஷனாக, கோபிகைகளின் உள்ளங் கவர்ந்தவனாகவே பார்த்துப் பழக்கப்பட்ட நமக்கு, திருவல்லிக்கேணியில் வீரபுருஷனாக, குருக்ஷேத்திரப் போரில் பகைவர்களுக்கு எதிரில் போராட நிற்கும் அர்ஜுனனுடைய தோழனாக, தர்மத்தைக் காக்க வந்த தெய்வமாக பகவானைக் காண்பது, ஒரு தனி அனுபவமாக இருக்கிறது. போர்க்கலையில் வல்லவராக, அடியார்கள் பக்கம் நின்று அருள் மழை பொழிபவராகத் தரிசிக்கிறோம்.

"சுவாமி வந்தாச்சு" என்று ஒரு பரபரப்பு. கோபுர வாசலுக்கு விரைகிறோம். நாதஸ்வர இசை கேட்கிறது. திருவீதி உலாப் போயிருந்த பரமபதநாதன் பத்தினிகளுடன் திரும்பி வந்துவிட்டார். பாண்டு வாத்தியம் முழங்குகிறது. அகில புவனங்களையும் தன் திரு உந்தித் தாமரையில் தாங்கும் பெருமானைத் தாங்கிக் கொண்டு வருகிறார்கள், திருமண் தரித்த இளைஞர்கள். துவஜஸ்தம்பத்தைச் சுற்றி வருகிறார்கள்.



எல்லாருடைய முகத்திலும் ஒரு சிரிப்பு. உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருக்க வேண்டும். மூன்று முறை சுற்றி வந்து, கல்யாண மண்டபத்தில் எதிரே நிற்கும் போதுதான், "ஏ பாண்டு!" என்று யாரோ குரல் கொடுக்க, உடனே "பஸா நிஸா பநீதநீ" என்று இங்கிலீஷ் நோட்ஸ் வாசிக்க, தூக்கி வந்த அடியார்கள் அந்தத் திச்ரகதியில் இரண்டு பக்கமும் அடி யெடுத்து வைத்து ஆட, பகவானும் தொட்டிலில் ஆடுவது போல், ஸ்ரீதேவி

பூதேவியுடன் சாய்ந்து சாய்ந்து ஆடுகிறார்.

இன்னும் சற்று நேரம் பெருமானின் நடனத்தைப் பார்க்க மாட்டோமா என்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, படிகளில் லாகவமாக ஏறி, மேடைமீது பெருமானை ஏளைப் பண்ணுகிறார்கள். திரை போடுகிறார் ஒருவர். இதுவரை பகவானின் உலாவைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த நம்மாழ்வாரை, கண்ணாடி அறையில் எழுந்தருளச் செய்கிறார்கள். சின் முத்திரையுடன் அவர் வீற்றிருக்கும் அழகே ஞானத்தின் அழகு!

இந்த இராப்பத்து உற்சவத்தைத் தொடங்கி வைத்தவர், திருமங்கையாழ்வார் என்று சொன்னார்கள். அதைப் பிற்காலத்தில் மணவாள மாமுனிகள் எல்லாக் கோயில்களிலும் நடத்துவதற்கு முயற்சி மேற்கொண்டார். நம்மாழ்வார் என்ற மகாஞானியின் நினைவாக இந்த உற்சவம் நடத்தப்படுகிறது. பெருமாளுடன் கூடவே அவர் நகர்வலம் வருவார். அப்படிக் கௌரவிக்கிறார்கள் நம்மாழ்வாரை.

திருமங்கையாழ்வார் "பார்த்தன் தேர்முன் நின்றானை" பத்துப் பாடல்களால் பாடிப் பரவியிருக்கிறார். "இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானை" என்றும், "ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானை" என்றும் புகழ்கிறார்.

வேதவல்லியாக பகவானைத் தழுவிய கொடியாக அருள்புரியும் தாயாரைத் தரிசித்து விட்டு, திருச்சுற்றில் வரதராஜரையும் தரிசித்துக் கொண்டு அழகிய சிங்கர் சந்நிதிக்கு வருகிறோம். பாலன் பிரஹலாதனுக்காக நரசிம்மாவதாரம் எடுத்த நாராயணன், இங்கே தெள்ளிய சிங்கராக யோகத்தில் அமர்ந்து, யோக நரசிம்மராகக் காட்சி தருகிறார். உற்சவர் அழகிய சிங்கர்.

அழகிய சிங்கரிடம் அளவில்லாத பக்தி வைத்திருப்பவர்கள் பள்ளிக் கூடத்தில் படிக்கும் மாணவர்களும், கல்லூரிகளில் படிக்கும் இளைஞர்களும் என்று அறிந்து மகிழ்கிறோம். பரீட்சைக்குப் போகும் மாணவ மணிகள், அழகிய சிங்கரை சேவித்துக் கொண்டு செல்வார்களாம். பயப்படாமல் பரீட்சை எழுத அருள்வாராம் அழகிய சிங்கர்.

அத்திரி முனிவர் நெடுங்காலம் தவம் செய்து திருமாலை நரசிம்மராகத் தரிசிக்க வேண்டுமென்று வரம் கேட்டாராம். அவருக்காகக் கோபம் தெளிந்து, தெளிசிங்கப் பெருமானாகக் காட்சி தந்தாராம் பகவான்.

திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியில் தாம் கண்ட பகவானை ஆர்வத்தோடு பாடியிருக்கிறார். மயிலையும் அல்லிக்கேணியும் அருகருகே இருப்பதால்,

"தேனமர்சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணி கண்டேனே"

என்று பாடியவர் நரசிம்மாவதாரத்தைப் பாடுகிறார்:

பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன்
வாயில் ஓர் ஆயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போத ஆங்கு அதனுக்கு
ஒன்றும் ஓர் பொறுப்பிலனாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்
புடைப்பப்
பிறை எயிற்று அனல்விழிப் பேழ் வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை
திருவல்லிக் கேணி கண்டேனே

அழகிய சிங்கரைத் தரிசித்த அமைதியான மனத்துடன், திருச்சுற்றில் உள்ள சூடிக் கொடுத்த சுடர்க் கொடியையும் கண்டு மகிழ்கிறோம்.

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல்
நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை
போல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ
ரெம்பாவாய்.

கைவரணி புஷ்கரிணியில் தண்ணீர் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

(தொடரும்)

"படம் ஆரம்பிச்சதிலேயிருந்து முடியற வரைக்கும் நேரம் போனதே தெரியலை..."

"அட... அவ்வளவு விறுவிறுப்பா...?"

"அதில்லீங்க... தூங்கித் தொலைச்சிட்டேன்."

- வேணிப்பிரியன்



வட்ட மேஜை

கொண்டாட்ட 2 மார்க்!





✉ உற்சாக டெக்னிக்குக்காக இவ்வளவு மெனக்கெட்டு இருக்கணுமா? சிவகாமியின் சபதத்துக்கு வரையப்பட்டுள்ள அந்தப் பச்சைப் பசேல் தாமரைத் தடாகத்தை ஒரு நிமிஷம் - ஒரே ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தால் போதுமே! ஓர் ஆண்டுக்கான உற்சாகமும், மொத்தமாய் வந்து ஒட்டிக் கொள்ளுமே!
ஆதமங்கலம் புதூர், கே. சண்முகம்.

✉ நிஜமான குட்டிக்கதை நல்ல உற்சாக மூட்டியது. அந்த இளைஞரை ஊக்குவித்த இயக்குநர் கேயாரைத்தான் பாராட்ட வேண்டும்.
சென்னை - 109, எஸ்.ஆர்.ஹரிஹரன்.

✉ 'ஹெல்த் கேர்' தொடர் ஆரம்பமே 'சாக்லெட்'டாக இனிக்கிறதே!
கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்.

✉ 'ஆசை'யாய் 'அணில் அழகியை' தங்கம் என பாராட்ட நினைத்தேன்! ஆனால், 'கிரீடத்தில் மேல்' வைரமாய் ஜொலித்து விட்டான் 'மூத்தவன்'!
மதுரை - 9, பி.எல். பரமசிவம்.

✉ மாணவர்கள் திட்டமிட்டுச் செயல்பட வழிகாட்டுகிறது 'மார்க் வாங்கலாம் வாங்க' புதிய தொடர். வெல்கம்!
கந்திகுப்பம், க.மோ.சிவா.

✉ புதிய வாசகர்களுக்கு இடம் அளிக்கும் 'கல்கி'யே, நீ வாழ்வாய் என்றென்றும் வாசகர்களின் நெஞ்சில்!
வேம்படிதாளம், ஜி.ஹரிபாலாஜி.

✉ ராஜேஷ்குமாரின் நாவல்களைத் தேடித் தேடிப் படிக்கும் எங்களை நாடி... 'கோடி கோடி மின்னல்'களாய் வர இருக்கும் புதிய தொடர்கதை, நிச்சயம் மனத்தை மயக்கும்.
பூனாம்பாளையம், ஆர்.சரஸ்வதிராஜேந்திரன்.

✉ ஜே.எஸ். ராகவனின் 'காப்பி'யாயனம் உற்சாகச் சிறப்பிதழின் சிகரம்.
நெய்வேலி, சு. ஸ்ரீகாந்த்.

✉ சில நேரங்களில் சில வார்த்தைகளின் சக்தி மகத்தானதாக இருக்கும் என்ற தொகுப்பு சூப்பர். மற்றொரு சக்தி வாய்ந்த சொல் 'ஸாரி'.
ஆதம்பாக்கம், எஸ். விஜயலக்ஷ்மி.

✉ நட்புக்கு 47 மதிப்பெண்கள், அறிவுக்கு 51 மதிப்பெண்கள், ஆக மொத்தம் 98, அப்ப மீதி 2 மதிப்பெண்கள் எதுக்கு, காதலுக்கா? கலாட்டாவுக்கா?
அருகந்தம் பூண்டி, மலை அரசன்.

✉ 'பொலிடிகல் புற்றுநோய்' சிறந்த தலையங்கம். தேர்தல் கமிஷன் செய்ய வேண்டியவற்றைப் பட்டியலிட்டது பாராட்டுக்குரியது. விங்டோ மருந்து கண்டுபிடித்து, சிகிச்சையளித்து ஜனநாயகத்தை வெற்றி பெறச் செய்தால், கோடி புண்ணியம் தான்!
தூத்துக்குடி - 2, எஸ்.ராமசுப்பிரமணியன்.

✉ 'நீங்கள் வீட்ல எப்படி?' படித்தேன். என் உயிருக்கு உயிரான அவள் கான்சரில் இறந்து விட்டாள். இருந்தாலும், பழைய நினைவுகள் கிளற, உண்மையான விடைகளுடன் பக்கம் 126க்குப் போனால், அசடு வழிய நேர்ந்தது. போகட்டும். இனிய நினைவுகளைக் கிளறி விட்ட 'கல்கி'க்கு நன்றி.
சென்னை - 92, கி.சௌந்தரராஜன்.

✉ பொங்கல் சிறப்பிதழ் இலவச இணைப்புடன் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.
கோவில்பட்டி, பி. ஜெகன்.



சவால் மேம்!

'அர்ஜுன்' என்ற தமது பால்யப் பருவத் தோழரை, லவ் கம் அரேஞ்சுடு மேரேஜ் செய்து கொண்டு அமெரிக்காவுக்குப் போன சொர்ணமால்யா, அதிரடியாகத் திரும்பி வந்து சினிமாவில் குதித்திருக்கிறார்.

"கடவுளே! காதல் கணவரோடு தகராறா?" என்று பத்த வைக்க... "முதல்லே வாயைக் கழுவுங்க சார்'' என்று கடிந்து கொண்டார்.

''அர்ஜுன் என்னோட பெஸ்ட் ஃபிரெண்ட்! நான் சினிமாவில் நடிக்க விரும்பறேன்னு சொன்னதும், உடனே உடம்பைக் குறைச்கட்டு முயற்சி செய்னு ஊக்கப்படுத்தினார். அதான் அதிரடியாய் பத்துக் கிலோ குறைத்துவிட்டு வந்திருக்கிறேன்'' என்றார்.

"அக்கா, அண்ணி கேரக்டர்ஸ் கொடுத்தால் செய்வீர்களா?" என்று வம்புக்கு இழுத்தோம். "சான்ஸே இல்ல. திருமணத்துக்கு முன்னாடி 'அலைபாயுதே' படத்துலே ஷாலினிக்கு அக்காவாக நடிச்சேன். ஏன்னா, அது மணிசார் படம். இப்போ 'எங்கள் அண்ணா'வில் விஜயகாந்த் சாருக்குத் தங்கை. இதோடு தங்கை கேரக்டர்ஸ் அவ்வளவுதான். இனி ஹீரோயின்தான் ஒரே சாய்ஸ்" என்று பிடிவாதமாகச் சிரித்தார்.

அமெரிக்காவில் இருந்து திரும்பியதும், சன் டீ.வியில் நின்று போன 'இளமை, திறமை, புதுமை' நிகழ்ச்சியை மீண்டும் தொடங்க அழைப்பு வந்ததாம். ஆனால் அதை மறுத்து விட்டு, சினிமாவில் மட்டுமே இப்போதைக்கு கவனம் செலுத்தப் போகிறாராம்.

"இயக்குனர்களுக்கு அரிய வாய்ப்பு! கௌதம், ஹரி, பாலா போன்ற இயக்குனர்களிடமிருந்து அழைப்பு வந்தால், கால்ஷீட்டை அள்ளிக் கொடுக்கத் தயார்'' என்று சவாலே விடுகிறார் 'தம்ஸ் அப்' சின்னம் காட்டி.

— ஸ்ரீ சக்கரம்



தேவை ஒரு புரட்சி!

மனிதனின் முதல் தேவை உணவு. மனித சமுதாயம் உணவைத் தேடியதால் அது ஈடுபட்ட முதல் தொழில் வேட்டையாடுதல். வேட்டையாடுதலில் உள்ள ஆபத்துகளும், நிச்சயமற்ற தன்மையும் மனிதனைச் சிந்திக்க வைத்தன. அந்தச் சிந்தனையில் பிறந்ததே வேளாண்மை.

ஒரு சமுதாயம் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவிக்கிறது; விளை பொருள்களிலிருந்து வேறு உணவுப் பொருள்களைத் தயாரிக்கிறது. பல சமுதாயங்கள் உணவைப் பொறுத்தவரை தன்னிறைவு பெற்ற சமுதாயங்களாக விளங்குகின்றன. இந்தியாவும் ஏறத்தாழ தன்னிறைவு நிலையை அடைந்திருக்கிறது. நூற்றியிரண்டு கோடி மக்கள் வாழ்கின்ற நாட்டில் உணவுத் தன்னிறைவு என்பது ஒரு மகத்தான சாதனை என்றால், அது மிகையல்ல.


ஆனால் உணவுத் தன்னிறைவை மட்டுமே பெற்ற சமுதாயங்கள் வலிமையான பொருளாதார சமுதாயமாக உருவாகியதாக உதாரணம் கிடையாது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், அந்த நாடு வளர்ச்சி ஏணியில் முதல் படியில்தான் இருக்கிறது என்று கொள்ள வேண்டும். வேளாண்மை பசியைப் போக்கும்; ஆனால் பொருளாதார வலிமையை வேளாண்மை மட்டுமே தந்துவிடாது. வேளாண்மையில் பல இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும்; ஆனால் காலப் போக்கில் இன்னும் பல இலட்சம் பேர் வேலைக்கு வரும்போது, அவர்கள் பெரும் சுமையாக மாறி விடுவார்கள். வேலையின்மை அதிகரிக்கும்.

ஆகவேதான், வேளாண்மையிலிருந்து விலகி தொழில்களைத் தொடங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. குறிப்பாக, உற்பத்தித் தொழில்கள் (manufacturing) பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றின. தொழில் துறையில் முன்னேறிய நாடுகளே வலிமையான பொருளாதார நிலைகளைக் கொண்ட நாடுகளாக உயர்ந்தன. தொழில் துறை பல இலட்சம் வேலை வாய்ப்புகளையும்



நமக்கே உரிமையாம் 14

ப.சிதம்பரம்



உருவாக்கியது. தொழில் துறை வேகமாக வளர்ந்த காலம் தொழிற்புரட்சிக் காலம் (industrial revolution) என்று அழைக்கப்பட்டது.

வேளாண்மையில் சிறந்த நாடுகளையும், தொழில் துறையில் முன்னேறிய நாடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நான் சொல்வது தெளிவாகப் புரியும். வேளாண்மையில் தன்னிறைவு பெற்ற இந்தியாவையும், தொழில் துறையில் உயர்ந்த ஜப்பானையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மக்கள் தொகைச் செறிவு (density) என்று எடுத்துக் கொண்டால், இந்தியாவைவிட ஜப்பானில்தான் அந்தச் செறிவு அதிகம். ஜப்பான் நாட்டின் நிலப்பரப்பு, மக்கள் தொகை என்பவற்றைக் கணக்கிட்டால், இந்தியாவைவிட ஜப்பானில்தான் பிரச்னைகள்தான் அதிகம். ஜப்பான் வேளாண்மையை மட்டுமே நம்பியிருந்தால், அல்லது ஜப்பான் மக்களின் பெரும்பான்மையானவர்கள் வேளாண்மையிலேயே தொடர்ந்து ஈடுபட்டிருப்பார்களேயானால், இந்தியாவை விட ஜப்பான் ஏழை நாடாகவே இருந்திருக்கும்.

ஜப்பான் நாட்டின் பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்குக் காரணம் தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம்.

தமிழ்நாட்டின் வரைபடத்தையும், தென் கொரியாவின் வரைபடத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இரண்டு வரைபடங்களும் ஏறக்குறைய ஒத்திருக்கும். தென்கொரியாவைவிட தமிழ்நாட்டின் மக்கள் தொகை கொஞ்சம் அதிகம். ஒரு காலத்தில் தமிழ்நாடும் தென் கொரியாவும் விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்தன. தமிழ்நாட்டில் அந்த நிலை இன்னும் தொடர்கிறது. தமிழக மக்களில் சுமார் அறுபது சதவிகிதம் விவசாயம் அல்லது விவசாயம் சார்ந்த வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் தென் கொரியா வேளாண்மையை மட்டுமே நம்பியிராமல், அந்தப் பாதையிலிருந்து விலகி தொழில் துறையில் முன்னேறியது. தென்கொரிய மக்களில் மிகப் பெரும்பாலோர் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கவில்லை. ஆகவேதான், தென் கொரியா வளர்ந்த நாடாக, உயர்ந்த தனி நபர் வருமானம் உள்ள நாடாக உருவாகியிருக்கிறது.

தொழில் புரட்சியுகத்தை இந்தியா தவற விட்டுவிட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இதற்குக் காரணம் இந்தியர்கள் அல்ல. உலகெங்கும் தொழிற் புரட்சி பரவிய காலத்தில் இந்தியா அடிமை நாடாக இருந்தது. இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி விரும்பவில்லை. இந்தியாவின் பருத்தி, மான்செஸ்டரில் இருந்த பஞ்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்தியாவின் கனிமங்கள் இங்கிலாந்தின் எஃகு ஆலைகளை வளர்க்கப் பயன்பட்டன.

இந்தச் சூழ்நிலையிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக இந்தியத் தொழில் முனைவோர் தோன்றினார்கள். இவர்களில் முதன்மையானவர் ஜாம்ஷெட் ஜி. டாட்டா. இந்தியாவின் முதல் எஃகு ஆலையை நிறுவினார். பலர் பஞ்சாலைகளைத் தொடங்கினார்கள். தொழில்கள் என்று பார்த்தால், பஞ்சாலைத் தொழில், ஜவுளித் தொழில் என்பவற்றைத் தவிர, வேறு குறிப்பிடும்படியான தொழில்கள் இந்தியாவில் தொடங்கப்படவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்தபோது வறுமை மிஞ்சியிருந்ததற்கு, தொழில் துறையில் பின்தங்கியிருந்ததே முக்கியக் காரணம்.

தொழில் துறை வளர்ச்சியின் முக்கியத்தை ஜவஹர்லால் நேரு உணர்ந்தார். தொழில் துறையில் தனியார் ஈடுபடுவதற்குத் தாராளமாக அனுமதி அளித்தார். அதே நேரத்தில், பெரிய தொழில்களையும், கேந்திரமான தொழில்களையும் விரைவில் தொடங்க வேண்டுமென்றால், அதற்குப் பொதுத் துறையும் அவசியம் என்று அவர் கருதினார். ஜவஹர்லால் நேரு எடுத்த முயற்சிகளின் விளைவாக, இந்தியாவின் தொழிற்புரட்சிக் காலம் தொடங்கியது.

இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தொழில் துறையின் பங்கு என்ன? ஒரு காலத்

தில் முப்பது சதவிகிதமாக இருந்தது. ஆனால் இன்று இருபத்தைந்து சதவிகிதமாகக் குறைந்து விட்டது. இதற்குப் பொருள் தொழில் துறை நசிந்துவிட்டது என்பதல்ல. சேவைத் துறை (services) என்று இன்னொரு திசையில் இந்தியப் பொருளாதாரம் திரும்பி விட்டதால், தொழில் துறையின் பங்களிப்பு குறைந்து விட்டது. இது ஒரு அசாதாரணமான நிகழ்வு. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரம் இயல்பாக வளர்கிறதென்றால், முதல் கட்டத்தில் அந்த நாட்டில் வேளாண்மையின் பங்களிப்பு முதலிடத்தில் இருக்கும். அடுத்து, தொழில் துறை வேளாண்மையை மிஞ்சி முதலிடத்தைப் பிடித்துவிடும். தொழில் துறையில் வலிமையான நாடாக உயர்ந்த பிறகு, சேவைத் துறையில் வளர்ச்சி தொடங்கும். மூன்றாவது கட்டத்தில் சேவைத் துறையின் பங்களிப்பு முதலிடத்தை வகிக்கும். இந்த இயல்பான வளர்ச்சி இந்தியாவில் ஏற்படவில்லை. இதற்கு முக்கியக் காரணம் அரசினுடைய கொள்கைகள் - தொழில் துறையில் பொதுத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து தனியாரைப் பின்னுக்குத் தள்ளியது; லைசென்ஸ், பெர்மிட் முறையைப் பிடிவாதமாகச் செயல்படுத்தியது; ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது; இருநூறு சதவிகிதம், முந்நூறு சதவிகிதம் என்று சுங்க வரிகளை விதித்தது, என்று பல காரணங்களைக் குறிப்பிட முடியும். இந்தக் கொள்கைகளால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த பிறகும், இந்தக் கொள்கைகளை நம்முடைய அரசுகள் மாற்றிக் கொள்ளவில்லை. 1991-ஆம் ஆண்டில்தான் முதன்முறையாக இக் கொள்கைகளை மாற்றிக் கொண்டு, புதிய பொருளாதாரக் கொள்கைகளை அரசு ஏற்றுக் கொண்டது.

1991-ஆம் ஆண்டில் இந்தியா தன்னுடைய கொள்கைகளை மாற்றிக் கொண்டபோது, உலகிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. உலக மக்களின் தேவைகளிலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. உற்பத்திப் பொருட்களின் தேவையை விட, சேவைகளின் தேவை அதிகரித்துவிட்டது. உலகப் பொருளாதாரமே சேவைத் துறையை நோக்கித் திரும்பிவிட்டது. உதாரணமாக, சோப்பு உற்பத்திப் பொருள். சோப்பைத் தயாரிப்பது 'தொழில் துறை'. ஸ்டாக்கிஸ்ட், டிஸ்டிரிபியூட்டர், மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி என்று ஒரு நீண்ட சங்கிலி தேவைப்படுகிறது. சோப்பை விளம்பரம் செய்ய வேண்டும்; அதுவும் 'சேவைத் துறை' சோப்புக்குப் பெயரிட வேண்டும், அந்தப் பெயர் சோப்புக்கு ஓர் அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுத் தருகிறது. அந்தப் பெயரை 'டிரேட் மார்க்' என்று சட்டம் அங்கீகரிக்கிறது. இவையெல்லாம் 'சேவைத் துறை'யைச் சார்ந்த பணிகள்.

நீங்கள் வாங்கும் சோப்பின் விலை இருபது ரூபாய் என்றால், அதிலுள்ள சோப் என்ற உற்பத்திப் பொருளின் அடக்கவிலை ஒரு ரூபாய்க்கு மேல் இருக்காது. அந்தச் சோப்பைச் சார்ந்த 'சேவை'கள் அந்தச் சோப்பின் விலையை இருபது ரூபாய்களாக அதிகரித்து விடுகின்றன. சோப்பை உற்பத்தி செய்வதில் ஒருவருக்கு வேலை கிடைக்கிறது என்றால், அதைச் சார்ந்த 'சேவை'கள், பத்து வேலை வாய்ப்புகளை உருவாக்கி விடுகின்றன. தொழில் துறையை சேவைத் துறை மிஞ்சி விடுகிறது.

நாம் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டபோது, மாறி விட்ட உலகப் பொருளாதாரத்தை அனுசரித்தே நம்முடைய கொள்கைகளையும் வகுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தப் புதிய சூழ்நிலைக்கு ஏற்பவே, இந்தியத் தொழில் முனைவோரும், முதலீட்டாளர்களும், தங்கள் முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆகவேதான், 1991-ஆம் ஆண்டிற்குப் பிறகு தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விட, சேவைத் துறையில் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டது.

1991-ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தொழில் துறையின் பங்கு முப்பது சதவிகிதம், சேவைத் துறையின் பங்கு நாற்பது சதவிகிதம், 2003-ஆம் ஆண்டில் தொழில் துறையின் பங்கு இருபத்தைந்து சதவிகிதம், சேவைத் துறையின் பங்கு ஐம்பது சதவிகிதம். இந்த மாற்றத்தினுடைய சாதகங்களையும் பாதகங்களையும் ஆராய வேண்டும்.

(தொடரும்)



''எதுக்குய்யா இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டே...?''

''ஒண்ணு சம்பளத்துக்கு; இன்னொன்று மாமூலுக்கு சார்!''

- வி. கிருஷ்ணகுமார்

"தமிழ்ப்பற்று"

—சுந்தர ராமசாமியுடன் சந்திப்பு


சு.ரா. என்று வாஞ்சையுடன் அழைக்கப்படும் சுந்தர ராமசாமி, தற்காலத் தமிழ் இலக்கியத்தின் தனித்துவம் மிக்க எழுத்தாளர். நாகர்கோவிலை வசிப்பிடமாகவும், புதுமைப்பித்தனை ஆதர்சமாகவும் கொண்டு கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வரும் எழுபத்து மூன்று வயதுக்காரர்.


நாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம், மொழி பெயர்ப்பு என்று பன்முகப் படைப்பாளியாகத் திகழும் இவரது எழுத்து, தமிழ்ச் சிந்தனையின் மீது தொடர்ந்து சலனங்களை ஏற்படுத்தி வருகிறது.

வாழ்நாள் இலக்கியப் பணிக்கான உயரிய கதா விருது பெற்றுத் திரும்பியிருக்கும் இவரை அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

தில்லி கதா நிறுவனம் வாழ்நாள் இலக்கியப் பணிக்கான விருது உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதை அறிந்தோம். அதைப் பற்றிக் கூற முடியுமா?

தில்லி கதாவின் கலை விழாவில் முதல் நிகழ்ச்சியாக எனக்கு விருது வழங்கப்படும் கூட்டம் 2.1.04 அன்று காலை நடைபெற்றது. விருது அளித்து கௌரவித்தவர் டாக்டர் கபிலா வாத்ஸாயன் அவர்கள். கதா உத்ஸவ் ஜனவரி 2ம் தேதியிலிருந்து 7ம் தேதி வரை, தில்லி இந்தியன் இன்டர்நேஷனல் சென்டரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக் கலை விழாவில் இலக்கியம், படைப்பாக்கம், சமூகச் சிந்தனையாக்கங்கள், திரைப்பட மதிப்பீடுகள், கவிதை வாசிப்பு, கலைப் பட்டறைகள், நூல் வெளியீட்டுக் கூட்டங்கள் போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன. ஒரே நேரத்தில் பல கூடங்களில் கருத்தரங்குகள் நடைபெற்றன. கலைவிழாவின் பொதுக் குறிக்கோளை, Linking Diversities, forging identities என வகுத்துக் கொண்டிருந்தார்கள். பிரபல ஐரோப்பிய எழுத்தாளர்களான பீட்டர் ஸிலாகி, ராபர்ட்டோ கொலோஸோ, இந்திய எழுத்தாளர்களான சந்திரசேகரக் கம்பர், இந்திரா கோஸ்வாமி, இந்திய திரைப்பட வல்லுநர்களான அமோல் பலேகர், திலீப் சித்ரே, ஆர்.வி. ரமணி, அயல் திரைப்பட இயக்குநரான க்ரிஸிஸ்டோஃப் ஸானுஸி போன்ற பல முக்கியமான ஆளுமைகள் வந்திருந்தன. தனஞ்ஜயன் குழுவினரின் நடனம் வெகுவாகப் பார்வையாளர்களைக் கவர்ந்தது. அனிதா ரத்தினமும் அவரது குழுவினரும், பிரசன்னா ராமசாமி தயாரித்து இயக்கிய சமூக விமர்சன நாடகத்தை மேடையேற்றினார்கள். ருக்மணி தேவியின் நினைவு நாளை முன்னிட்டுப் பேசிய டாக்டர் கபிலா வாத்ஸாயன், ஆராய்ச்சி ஆழம் கொண்ட தம் கருத்துக்களை வெளிப்படுத்தினார். மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது பாகிஸ்தானைச் சேர்ந்த மாணவ மாணவிகளின் வருகை. இந்தியர்களும் அவர்களும் எவ்வித வேற்றுமையுமின்றி, வெகு இணக்கமாகப் பழகிக்







இல்லையா?"

கொண்டார்கள். மக்கள் ஒருவரையொருவர் நேசிக்கும் குணமே கொண்டிருக்கிறார்கள் என்பது மீண்டும் ஒருமுறை உறுதியாயிற்று. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து பல்வேறு மொழி பேசும் மாணவர்களும் ஆசிரியர்களும், கதா உத்ஸவில் முழுமையாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள். மாநிலங்களில் ஆண்டுக்கொருமுறை நடைபெறும் கதாவின் சிறுகதைப் போட்டியில் விருது பெற்ற எழுத்தாளர்கள் அனைவருமே அழைக்கப்பட்டிருந்தார்கள். பலர் வந்திருந்தார்கள். இந்தியர்களால் பொதுவாக ஒதுக்கப்பட்டு வந்திருக்கும் வடகிழக்கைச் சேர்ந்த - மிசோராம், அருணாச்சலப் பிரதேஷ், மணிப்பூரி முதலியன - எழுத்தாளர்கள் திரளாக வந்திருந்தனர். தங்கள் இலக்கியங்களையும் கலைகளையும் இந்தியப் பொது நீரோட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் முனைப்பாக இருக்கிறார்கள். நாம் முன்னரே அவர்களுடன் உறவு கொண்டிருக்க வேண்டியவர்கள். இப்போது மிகுந்த மனக்குறையுடன் அவர்கள் நம்முடன் உறவு கொள்ள வரும்போது, அந்த உறவு வலுப்படுவதற்கான பணிகளை தமிழ் எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் மேற்கொள்ள வேண்டும். என் சக எழுத்தாளர்களுடனும் வாசகர்களுடனும் நான் பகிர்ந்து கொள்ளும் மிக முக்கியமான செய்தி இதுதான்.

தமிழ் எழுத்தாளர்கள் யார் யார் வந்திருந்தார்கள்?

இந்தக் கேள்விக்கு பதில் சொல்லவே எனக்குத் தயக்கமாக இருக்கிறது. காரணம் ஏதாவது பெயர் விட்டுப் போய்விடுமோ என்ற கவலைதான். மூத்த எழுத்தாளர்களான அசோகமித்திரனும், சா. கந்தசாமியும் வந்திருந்தது ஒரு சிறப்பம்சம். இவர்களைத் தவிர, என் நினைவில் பிரேம், சல்மா, சுப்ரபாரதி மணியன், இமையம், சோ. தர்மன், செழியன், சாணக்கியா, ஆதவன் தீட்சண்யா, புகழேந்தி ஆகியோர் வந்திருந்தனர். தமிழகத்திலிருந்து கலந்து கொண்ட ஒரே பெண் எழுத்தாளர் சல்மா. இன்னும் அதிகப் பெண்கள் கலந்து கொண்டிருந்திருக்க வேண்டும். பிற மாநிலங்களிலிருந்து

பலர் வந்திருந்தார்கள். மலையாள எழுத்தாளர்களில் முக்கியமானவர்களைக் காணக் கிடைக்கவில்லை. உள்ளூரில் வசிக்கும் பிரபல மலையாள எழுத்தாளர்கள்கூட திரும்பிப் பார்க்கவில்லை. இளம் எழுத்தாளர்கள் ஓரிருவரைச் சந்திக்க முடிந்தது.

இந்த விருது கிடைத்ததில் உங்களுக்கு மகிழ்ச்சிதானா?

அநேகமாக எல்லாப் போட்டோக்களிலும் சிரித்திருக்கிறேன்.

முக்கியமாக உங்கள் மாவட்டத்தைப் பற்றிப் பேச வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூருடன் இருந்ததற்கும், இப்போது தமிழகத்துடன் இருப்பதற்கும் உள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், பற்றி...?

கலாசாரம் சார்ந்து நிறைய மாற்றங்கள் இருக்கின்றன. பழைய எச்சங்கள் அபூர்வமாக இன்றும் காணக் கிடைக்கின்றன. இப்போது எங்கள் மாவட்டம் தமிழகத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்டது என்றே சொல்லலாம். மலையாளப் பேச்சு காதில் விழுவது அபூர்வம். நாகர்கோவிலைச் சுற்றி பல பகுதிகளிலும், மலையாளிகளும் வீட்டுக்கு வெளியே தமிழ்தான் பேசுகிறார்கள். அவர்கள் குழந்தைகள் பெரும்பாலும் தமிழ்தான் படிக்கிறார்கள். மலையாளம் படிப்பதைக் காட்டிலும் தமிழ்ப் படிப்பது வேலை வாய்ப்பைச் சிறிய அளவிலேனும் கூட்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது.

தமிழகத்துடன் இணையும்போது எங்கள் மக்கள் அதிகம் எதிர்பார்த்த பொருளாதார வளர்ச்சியோ, தொழில் வளர்ச்சியோ பெரியளவில் ஏற்பட்டுவிடவில்லை. தலைநகர் சென்னையாக இருப்பதால், அரசியல் தலைமைகளின் கவனத்தை ஈர்ப்பது கடினமானதாகவே இருக்கிறது. தொன்றுதொட்டு காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது இம்மாவட்டம். காமராஜுக்குப் பின்னால் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேயில்லை. எங்கள் மாவட்டத்தைப் பற்றி தி.மு.க. தலைமை சொன்னதாக தொடர்ந்து மேற்கோள் காட்டப்படும் புகழ்பெற்ற வாசகத்தை திரும்பவும் ஒப்பிக்க எனக்கு அலுப்பாக இருக்கிறது. போராடத் தெரியாத மக்கள், இப்படி எதையாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஒரு நகரம் என்று பார்க்கிறபோது, மிகுந்த வைத்திய வசதியைக் கொண்டது எங்கள் ஊர். இப்போது ஒரு மருத்துவக் கல்லூரி வந்திருப்பது எங்கள் மாவட்டத்தினருக்குச் சிறு ஆறுதலைத் தந்திருக்கும் என்றே நினைக்கிறேன்.

உங்கள் மாவட்டத்தில் சமய இணக்கம் குலைந்துவிட்டது என்று கருதப்படுகிறதே. அது உண்மைதானா?

குலைந்துவிட்டது என்று நான் கருதவில்லை. ஒரு சில முரண்பாடுகளும் கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டுவிட்டன. இம்முரண்பாடுகளைத் திட்டமிட்டு உருவாக்கிய அரசியல் தலைமைதான் மீண்டும் இணக்கத்தை உருவாக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். வெவ்வேறு மதத்தைச் சேர்ந்த மக்கள் பொதுவாக நேசத்துடன்தான் இப்போதும் இருக்கிறார்கள்.

உங்கள் மாவட்டத்தினருக்கு தமிழ் சார்ந்த பற்று போதிய அளவு இல்லை என்று ஒரு விமர்சனம் இருக்கிறதே?

இந்த விமர்சனம் யாருக்காவது இருந்தால் அவர்களுக்கு இந்த மாவட்டத்தின் சமீபகால வரலாறு கூடத் தெரியாது என்பதுதான் பொருள். தொல்காப்பியர் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என பேரறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை கருதுகிறார். வரலாற்றறிஞரான டாக்டர் எஸ். பத்மநாபனுக்கு, திருவள்ளுவர் எங்கள் மாவட்டத்தில் தோன்றியவர் என்ற முடிவிருக்கிறது. செய்குத்தம்பிப் பாவலர், ப. சிதம்பரம் பிள்ளை, கே.என். சிவராஜ பிள்ளை, தசாவதானி ஆறுமுகம் பிள்ளை, கவிமணி, தொண்டர்குழாம் ஆறுமுகம் பிள்ளை, ராமசுப்பிரமணிய நாவலர், ப. ஜீவானந்தம், பேராசிரியர் ஜேசுதாசன், ஆர். வீரபத்திரன் செட்டியார், தினமலர் நாளிதழை உருவாக்கிய டிவி. ராமசுப்பையர் போன்ற பலர் எங்கள் மாவட்டத்தில் தோன்றியவர்கள்தான். என்.எஸ். கிருஷ்ணன், டி.கே.எஸ். சகோதரர்கள் ஆகியோர் கலை வரலாற்றில் இடம் பெற்று விட்டவர்கள். டாக்டர் ஜவியும், டாக்டர் டி. பீட்டரும் இணைந்து கன்னியாகுமரி வளர்ச்சி ஆய்வு மன்றம் வழியாக, ஆழமான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு வருகிறார்கள். டாக்டர் வி.ஜ.

"இந்த அறை ரொம்பச் சின்னதா இருக்கே, இங்க தங்க முடியாது, கொஞ்சம் பெரிசா பாருங்க..."

"யோவ்! இது 'லிஃப்ட்'டுய்யா, அறை மேல் மாடியில் இருக்குது!"

– எம். சங்கர்

சுப்ரமணியம், மொழிகளுக்குச் செய்து வரும் தொண்டால், இம்மாவட்டத்தினருக்கும் பெரும்பெருமை சேர்த்துத் தந்து கொண்டிருப்பவர்.

இன்றைய இலக்கியத்தின் வளர்ச்சி உங்கள் மாவட்டத்தில் எப்படி இருக்கிறது?

குமரி மாவட்ட எழுத்தாளர்கள் எல்லோருமே பொதுவாகச் சமூகச் சிந்தனை கொண்டவர்கள். பழைமைவாதிகளைப் பார்க்கக் கிடைப்பதில்லை. கிருஷ்ணன் நம்பியின் மறைவு நிகழ்ந்திராத வரையிலும் அவர் மேலும் பல சிறப்பான படைப்புக்களைத் தந்திருக்கக் கூடியவர்தான். இலக்கிய உலகில் உறுதியான இடம் பெற்றிருக்கும் பொன்னீலன், தோப்பில் முகமது மீரான்



ஆகிய இருவரும் சாகித்திய அகாதமி விருது பெற்றவர்கள். ஹெப்சிபா ஜேசுதாசன் 'விளக்கு' விருது பெற்றிருக்கிறார். எல்லோராலும் மதிக்கப்படுகிறவர். ஐசக் அருமைராஜன் முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட நாவல்களைப் படைத்திருப்பவர். கிறிஸ்துவ சமுதாயம் இவரது படைப்புக்களில்தான் அதிகப் பிரதிபலிப்புக் கொண்டிருக்கிறது. பிரபல எழுத்தாளர்களான நீல. பத்மநாபனும், அ. மாதவனும், எங்கள் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்தான். தமிழவன் பல புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்தி சூழலில் ஒரு பாதிப்பை நிகழ்த்தியவர். டாக்டர் ச. வேதசகாயகுமார் நவீன இலக்கியத்தில் மிகுந்த கவனம் கொண்ட விமர்சகர். அ. ராஜமார்த்தாண்டன் தன் நம்பிக்கைகளில் ஊன்றி நின்று, நேர்மையான விமர்சனங்களைப் படைத்து வருகிறார். நாஞ்சில் நாடன் சுய அனுபவம் சார்ந்து, தனது படைப்புத் திறனையும் ருசியையும் நம்பி, எழுதி வருகிறவர். டாக்டர் அ. கா. பெருமாள், நாட்டார் வழக்காற்றியலின் புலமைமிக்க விற்பன்னர் ஆவார். டாக்டர் ஸ்ரீகுமார் தன் பேச்சாலும் எழுத்தாலும் நவீனத் தமிழை மாணவர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் பெரும் ஊக்கத்துடன் பரப்பி வருகிறவர். பா. விசாலத்தின் நாவல்கள் தமிழகமெங்கும் முற்போக்கு வாசகர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்திருக்கின்றன. எம்.எஸ். மிகச் சிறப்பான படைப்புக்களின் தமிழாக்கத்தை தொடர்ந்து தந்து வாசகர்களின் பாராட்டைப் பெற்றிருப்பவர். கவிஞர் எஸ்ஜி. ரசூல் தான் சார்ந்து நிற்கும் மதத்தின் மதிப்பீடுகளை, மறுபரிசீலனை செய்வதில் முனைப்புக் கொண்டவர். ஜெயமோகன் இளம் வயதிலேயே முன்னுதாரணங்களற்ற பல அரிய சாதனைகள் புரிந்திருக்கிறார். மா. அரங்கநாதன் தன் புதுமையான படைப்புக்கள் மூலம் நவீன விமர்சகர்களையும் வாசகர்களையும் கவர்ந்திருக்கிறார். குமாரசெல்வா தான் வாழும் மண்ணையும் கலாசாரத்தையும் தன் படைப்பில் இணைத்து வருகிறவர். லக்ஷ்மி மணிவண்ணன் படைப்பூக்கம் கொண்ட கவிதைகள், சிறுகதைகள் எழுதியிருக்கிறார். ஜே.ஆர்.வி. எட்வர்ட் தெளிவாகவும் சமநிலை குலையாமலும் எழுதி வருபவர். என்.டி. ராஜ்குமார் தனித்தன்மை கொண்ட தன் கவிதை வழியாக, குறுகிய காலத்திலேயே தமிழகம் முழுக்கத் தெரிய வந்துவிட்டவர். சி. சொக்கலிங்கம் மார்க்சியப் பார்வை கொண்டு அரசியல் கலாசார விஷயங்களை முன்னிறுத்தி வருகிறார். டாக்டர் சே. வேலப்பன், ஆராய்ச்சி வலுக்கொண்ட பல புத்தகங்களை உருவாக்கித் தந்திருக்கிறார். இன்னும் பல படைப்பாளிகள் இருக்கிறார்கள். நினைவாற்றல் சற்று மட்டாக இருப்பதால், பல பெயர்களை உடனடியாகச் சொல்ல முடியவில்லை.

இவரது எழுத்தை சொந்த மாவட்டத்தினர் மதிக்கிறார்களா? சாகித்ய அகாதமியுடன் தொடர்ந்து முரண்படுவது ஏன்? தமிழ் இலக்கியம், தமிழ் சினிமா, தமிழக அரசியல் பற்றி அதிர்வுகள் ஏற்படுத்தும் இவரது பேட்டி அடுத்த இதழில் முடியும்!

சந்திப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள் : **புதுவை இளவேனில்**

அ.தி.மு.க.வின்



* புத்தம் புதியவர்!

● டி.சுப்ரமணியன், மேலையூர்.

? நதிகள் இணைப்புத் திட்டம் என்னவாயிற்று...?

! தேர்தலுக்குத் தேர்தல் பேசு வதற்குப் பொருளாகிப் போனது.

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

? 'பீட்ஸா ருசிக்கும் சென்னைவாழ் தமிழனுக் கெல்லாம் பொங்கல் தேவையா...?' எனத் தங்கர்பச்சான் கேட்பது சரியா...?

! வருணன் வஞ்சிப்பதுண்டு. ஆனால், சூரியன் கிராமம் - நகரம் என்று பார்ப்பதில்லை. கஞ்சி குடிப்பவன் காப்பி குடிப்பவன் என்று வேறு படுத்துவதில்லை. அவன் அருள் கோரும் பொங்கல் திருவிழா, அனைவருக்கும்



* பிரிதொரு நியாயம்!

பொது - பீட்ஸா ருசிக்கும் சென்னைவாழ் தமிழன் உள்பட. இதில் தங்கர்பச்சானும் சேர்த்தி.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.

? குழந்தைகளிடம் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த ஒரு நல்ல யோசனை...?

! பெரியவங்க சதா சர்வகாலமும் டீவி முன் னாலே உட்காராம, புத்தகமும் கையுமா இருந்

நீங்கள் கேட்டவை

நேர்காணலா? தேர்தலா?



• தவறாத வழக்கம்!

தாலே போதும்.

● உமரி பொ. கணேசன், மும்பை - 37.

? போதைப் பொருள் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்ட முன்னாள் - அ.தி.மு.க எம்.எல்.ஏ, செரீனா அளவுக்குப் பரபரப்பு ஏற்படுத்தவில்லையே...?

! செரீனா இளம் பெண் ஆயிற்றே! பெண் என்பதாலேயே சில பத்திரிகைகள் ஏதாவது தோண்டித் துருவிச் செய்திகளை வெளியிட்டுப் பரபரப்பாக்குகின்றன.



• பொங்கல் கோபம்



• தலைமை இலக்கணம்

● கோ. இராதாகிருட்டிணன், தியாகதுருகம்.

? அ.தி.மு.கவின் நேர்காணலா? கட்சித் தேர்தலா...?

! பேரம்!

● ஆர். அப்துல் கலாம், திருச்சி - 21.

? ஓர் அணிக்கு 'கேப்டன்' என்றால் எப்படி சார் இருக்க வேண்டும்...?

! ஆஸ்திரேலிய கிரிக்கெட் கேப்டன் ஸ்டீவ் வாஹுக்கு ரசிகர்களால் வழங்கப்பட்ட மகத்தான பிரிவுபசாரம் பற்றி நாளிதழ்களில் படித்திருப்பீர்களே...? அதிலேயே உங்களுக்குப் பதில் கிடைத்திருக்குமே!

● வசீகரன், சென்னை - 18.

? நேர்மை தவறாமல் வாழும் ஒருவன் இறைவனைத் தொழவில்லை என்றால், அவன் ஆன்மிகவாதி இல்லையா...?

! இல்லை. நேர்மை என்பது தனி மனிதக் கட்

—தராசு

❐ ரூ. 100 பரிசு பெறுபவர்:

கே.வி. ராமன்,
52, தனலட்சுமி நகர் பிரதான சாலை,
ஸ்ரீ ராஜேஸ்வரி நகர் மேற்கு விரிவு,
சேலையூர், சென்னை - 73.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்

ம. செயபாரதி,
8/4, சுப்பிரமணியபுரம்,
மயிலாடுதுறை,
609 001.

டுப்பாடு. அந்தக் கட்டுப்பாடே பல சமயம் மனத்துயர் தரும். அதை நீக்கி, ஆன்மாவுக்கு இதமும் பதமும் தருவது ஆன்மிகம். இரண்டும் இணைந்தாலே முழுமையான வாழ்க்கை.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? "கட்சிப் பொறுப்பிலிருந்தும் சரி, அமைச்சர் பதவியிலிருந்தும் சரி... நான் யாரையும் திடீரென்று நீக்குவதில்லை. பலமுறை எச்சரித்தும் தொடர்ந்து தவறு செய்தவர்களை மட்டுமே நீக்குகிறேன்..." என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளாரே...?

! இதுவரை 15 முறை அமைச்சர்களை நீக்கியும் சேர்த்துமிருக்கிறார். ஆக, அ.இ.அ.தி.மு.க அமைச்சர்கள் தொடர்ந்து தவறு செய்பவர்களாகவே இருக்கிறார்கள் என்று ஒப்புதல் வாக்குமூலமாகக் கொள்ளலாம்.

● துரைமுருகன், திருப்பாச்சேத்தி.

? ஜெயலலிதா ஜனாதிபதி ஆக வாய்ப்பு உண்டு என்று ஒரு செய்தி படித்தேன். அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமா?

! குறைவான அதிகாரமும், கூடுதலான அலங்காரமும் படைத்த அப் பதவியை ஜெ. விரும்ப மாட்டார். செய்தி வடிகட்டிய கற்பனை. அவர் போடுகிற கணக்கே வேறு.



● ம. செயபாரதி, மயிலாடுதுறை ★

? 'காக்க காக்க' படத்தின் மூலம் ஒளிப்பதிவாளர் ஆர்.டி. ராஜசேகர் "பரபரப்பாகப் பேசப்படுகிறார்" என்று கல்கி 31.8.03 இதழில் விமர்சித்தீர்கள். இக்கருத்து, அவர் சிறந்த ஒளிப்பதிவாளராகத் தேர்வு செய்யப்பட்டதன் மூலம் உறுதியாகியிருக்கிறதே?

! ராஜசேகரின் வெற்றியில் இரட்டிப்பு மகிழ்ச்சி!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? தமிழகத்தில் மனிதக் கழிவைச் சுகாதார சிப்பந்தி சுத்தம் செய்யும் முறை இன்னமும் இருக்கிறதா?

! இருக்கிறது. மதுரையில் நிகழ்ந்ததை படம் பிடித்துச் செய்தித்தாளில் வெளியிட்டிருந்தனர். கல்வியைக் காட்டிலும் கழிப்பறை வசதியும் சுகாதார அறிவும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் நிலவுவதற்கு ஒரு சோகமான உதாரணம்.

● வி. முத்தையா, திருநெல்வேலி

? கிருஷ்ணா, நெய்வேலி, வீராணம், எல்லாம் பார்த்தாச்சு... இனி மதுராந்தகமா...?

! அதுவும் புஸ்புஸ்தான். "வாரியில் தண்ணீர் கடத்தாதீர்கள்" என மதுராந்தகம் விவசாயிகள் கோபப்பட்டுப் போராட்டம் நடத்துகிறார்களே!

● கா.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

? புதுப்படங்களில் நடிக்க நடிகர் தனுஷுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது பற்றி...?

! கால்ஷீட் தகராறு அவரை நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கிறது. வளர்ச்சியால் வீழ்ச்சியா என்ற கேள்விக்குப் பிறிதொரு நியாயம் பிறந்துள்ளது.

● கே.வி. ராமன், சென்னை - 23 ❐

? சத்ரபதி சிவாஜியைப் பற்றி இழிவாக ஜேம்ஸ் டபிள்யூ லெயின் என்பவர் எழுதியதால், அந்த நூலை அழிப்பதற்காகச் சிவசேனா தொண்டர்கள், பூனேவில் பண்டர்கர் ஓரியண்டல் ஆராய்ச்சி மையத்தைத் தாக்கியிருக்கிறார்களே...?

! அந்த மூர்க்கத் தாக்குதலில், சிவாஜி தொடர்பான பல பொக்கிஷமான ஆவணங்களும், ஆதிசங்கரரின் அரிய படைப்பும் அல்லவா அழிந்து போய்விட்டன! சிவாஜிக்கு இருந்த சகிப்புத் தன்மை, அவரைப் போற்றும் சிவசேனாவுக்கு இல்லையே!

● ஆர். சாலமன், ஆலங்குளம்.

? புதிய கதாநாயகிகளில் தராசுவை (மிகவும்) கவர்ந்தது யாரோ...?

! சாயாசிங். நம்ம வீட்டுப் பொண்ணு மாதிரி ஒரு பாசம் வந்துடுது. அவங்களைப் பார்த்தா. 'மன்மதராசா'வுக்கு அவங்க போட்ட ஆட்டம்தான் ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சு.

▪ காத்த காமெரா!

நெட்பிட்ஸ்



இசைப் புயலுக்கு 5!

வால்ட் டிஸ்னியின் ஒரு சித்திரக் கதையைத் தழுவி எடுக்கப்பட்ட படம் 'த லயன் கிங்'. ஆப்பிரிக்க சமவெளிகளில் ஒரு ராஜாவாகத் திரியும் சிம்பா-வின் சாகசங்கள், சண்டைகள், நட்புகள், கனவுகள் மற்றும் பயணங்கள் என்று விரிகிற இந்த ஆங்கிலப்படம், பேசப்படுவது கதைக்காக அல்ல. ரசிக நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டுவிட்ட எல்டன் ஜானும், டிம்ரைசும் சேர்ந்து அமைத்துக் கொடுத்துள்ள இசைக்காக. லண்டன் மீடியாக்களின் டாப்டென் மியூசிக்கல்ஸ் வரிசையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது இப்படம். ஏ.ஆர். ரஹ்மானின் பாம்பே ட்ரீம்ஸின் இடம் ஐந்து என்றாலும், நம்ம ஊர்க் கலைஞனின் பாம்பே ட்ரீம்ஸ், அப்பல்லோ விக்டோரியா தியேட்டரில் இன்னமும் வசூலைக் குவிக்கிறது என்பது ஆறுதலல்ல, பெருமை!

கடல் மட்டத்திலிருந்து மிக உயரம் உள்ள அமாங்கேல்டி சிகரத்தை படுவேகத்தில் ஏறித் தொட்டிருக்கிறார் கஸகஸ்தானைச் சேர்ந்த டெனிஸ் யூருப்கோ. செங்குத்தான பாறைகளும் ஆபத்தான பிளவுகளும் கொண்ட இம்மலையில் கவண்கற்களைப்போல கயிற்று நங்கூரங்களை பலங்கொண்ட மட்டும் வீசி எறிந்து, நம்பிக்கையுள்ள ஆதாரத்தில் சிக்கவைத்து உறுதியானதுதான் என்று தெரிந்து கொண்ட பிறகு, சரசரவென ஏறி, இப்படிப் பல உயரங்களைத் தொட்டுத் தொட்டு குறுகிய நேர அளவில் சிகரத்தை அடைந்தது இவரின் சாதனை. கிளைம்பிங் டாட் காம் மலை ஏறுதலின் பல்வேறு முயற்சிகளைப் படம் பிடித்து வெளியிட்டுள்ளது.

தன் சாதனையை முறியடித்த இன்னொருவருக்கு மனமார வாழ்த்துத் தெரிவிப்பதில், வெளிநாட்டுக்காரர்கள் உடனே முன்பு வருகிறார்கள். அண்மையில் தெற்கு கலிபோர்னியாவில் நடைபெற்ற கிளைடர்விமான சாகசத்தில் வென்ற கெய்ல் பால்சனுக்கு ஏகப்பட்ட கடிதங்கள். முன்னாள் வீரரின் விமர்சனக் கடிதத்திலிருந்து நான்கு வரிகள் : 'சான்டா அனா பள்ளத்தாக்குகளிலிருந்து எழுந்த பால்சனின் கிளைடர் விமானம், ஒரு அலையைப் போல அடங்காமல் எழுந்தது. குறிக்கோளைத் தேடாமல் இறக்கைகளைப் படபடவென்று அசைத்து வெளிப் பரப்பெங்கும் பறந்து, கெட்டியான மலைப் பாறைத் திருப்பங்களில், மறைந்து வேறு திசைகளில் தோன்றியது, அதிசயமாக இருந்தது. கிளைடர் விமானங்கள் மலிவாகக் கிடைத்தால் தேவலாம். சென்னை நகர டிராபிக் ஜாம்களைப் பொருட்படுத்தாமல் நேரத்தோடு செல்ல தோதாக இருக்கும்.

- பால் நிலவன்

குறையொன்றுமில்லை

உடலாகிற கிருஹத்தைக் கட்டிக் கொடுத்துவிட்டு, அதிலே ஜீவாத்மாவைக் குடியேற்றிவிட்டு, தானும் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறான் பகவான். ஆனால், நாமோ கட்டிக் கொடுத்தவனையே மறந்து விடுகிறோம்.

கிருதக்ஞனாக யார் இதை நமக்குக் கொடுத்திருக்கிறானோ, அவனிடம் அடியோடு பற்றே இல்லாமல், இந்த வீட்டிலே மமகாரமும் அகங்காரமும் ஜாஸ்தியாகப் போய் விடுகின்றன. இந்த உடலாகிற வீட்டைப் பேணி வளர்ப்பதிலேயும், அலங்காரம் பண்ணிக் கொள்வதிலேயும் பொழுது கழிகிறது. வெறுமே தினி போட்டு இந்த 'வீட்டை' வளர்ப்பதிலேயும் எப்போதும் பொழுது செல்கிறது.

ஒரு நாள் என்ன ஆகிறது...? பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தமது பாசுரத்திலே விவரிக்கிற மாதிரி சொல், செயல், இயக்கம் எல்லாம் நின்று போகிறது. 'அரங்கா, இரங்காயோ இனி!' என்று வேண்டித் துதிக்கிறார் அவர்.

ரங்கநாதரைப் பார்த்துக் கேட்கிறார்: ''உனக்கு என்னிடத்திலே இன்னும் காருண்யம் இல்லையா? ஏன் இப்படி என்னை இன்னும் இந்த உலகத்திலே வைத்திருக்கிறாய்...? ஒரு காலத்தில் நான் தடதடவென்று தடையின்றிப் பேசினேன். இப்போது அந்த சொல் போய் விட்டது. எழுந்தால் என்னால் திரும்பவும் உட்கார முடியவில்லை. அதற்கு இவ்வளவு சிரமப்பட வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில் எழுந்து ஓடுவேன்.... அனாயாசமாகக் காரியம் பண்ணுவேன். இப்போது உட்கார்ந்திருக்கவே முடியவில்லை. எதிரே வருபவர் யார் என்பதை தூரத்திலிருந்தபடியே சொல்லியிருக்கிறேன் ஒரு காலத்திலே...

ஒருத்தருக்குப் பார்வை திட்சண்யமாய் இருந்தால், சம்பாதியின் திருஷ்டியைப் போலிருக்கிறது என்று சொல்வார்கள். ''அடடா! சம்பாதியா அவர்!'' என்று பாராட்டுவார்கள்.

இலங்கையிலே, அசோக வனிகையிலே நூறு யோசனை தூரத்தில் சீதை உட்கார்ந்திருக்கிறதை இங்கேயிருந்தே சொல்கிறார் சம்பாதி. அப்படியானால் எவ்வளவு தூர திருஷ்டி பாருங்கள்!

பக்ஷிகளின் தூர திருஷ்டியை வேதமே கொண்டாடுகிறது. தூரப் பார்வை, மேலே பறந்து கொண்டேயிருக்கும் கருடன்; கீழே அசையும் ஜந்து மீது தடாரென்று பாய்ந்து ஒரு கொத்துக் கொத்தி எடுத்துக்கொண்டு போய்விடும். அந்தப் பார்வை இருக்கிறது பாருங்கள்... பக்ஷிகள் பார்வை - அதி தீக்ஷண்யமாக, தூரத்திலே இருக்கிற விஷயத்தையும் கிரஹிக்கக் கூடிய சக்தி அதற்கு உண்டு.

அவ்வளவு கூர்மையான பார்வையுடையவனாக இருந்தவன், இன்று 'கண்ணும் பஞ்சாச்சே...!' என்று படுத்திருக்கிறான். பக்கத்தில் ஒருத்தர் வந்து நின்றால்கூடத் தெரிய மாட்டேனென்கிறது! 'நான் வந்திருக்கேன்... தெரியறதா?' என்று ஒருத்தர்கிட்டே வந்து கேட்கிறார். அப்போதும் தெரியவில்லை; போய்விட்டது கண்!

இவ்வாறு இந்த்ரியங்கள் எல்லாம் அடங்கி, சுவாஸமும் அடங்கி, எழவே முடியாத நிலை. 'இன்னமும் உனக்கு என்னிடத்திலே காருண்யம் இல்லையா?' என்று கேட்கிறார், பிள்ளைப் பெருமாள் அய்யங்கார். ''இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் நான் இந்த உலகத்திலே இருப்பேன்...' சரீரத்தில் பலம் குன்றிப் போய், எல்லாம் போய்விட்டது. இத்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

தனை நாளாக, இதுதான் சாஸ்வதம்; இந்த பலம் சாஸ்வதம் என்று நினைத்துக் கொண்டிருந்தேனல்லவா... அப்போது இதை ரக்ஷிக்கிறபோது, இந்த சரீரம் பிரயோஜனமில்லை என்பது தெரியவில்லையே! இப்போது இதை யார் ரக்ஷிப்பார்கள்? யாரும் என்னை ரக்ஷிக்க மாட்டார்கள். யாராலும் பிரயோஜனமில்லை!

வயதாகிவிட்டது எனக்கு. எழுந்திருக்கவே முடியவில்லை. இந்தச் சமயத்தில்தான் மனைவியினுடைய ஒத்துழைப்பு ரொம்ப வேண்டும். அவள் குணமாக இருக்க வேண்டும். குணவதியாக இருந்து பர்த்தாவுக்குச் சிகிச்சை பண்ண வேண்டும்.

பாணிக்கிரஹணம் பண்ணுகிறபோது அந்த மந்திரத்திலே வருகிறது... 'நீயும் நானும் கிழமாகப் போனாலும் உன் கையை விட மாட்டேன்' என்று பொருள்பட மந்திரம் வருகிறது.

ஆகையினாலே, மனையாள் கூட இருந்து, பர்த்தாவுக்கு அனுகுணவதியாக இருந்து, அவர் சொல்வதையெல்லாம் செய்யக் கூடிய புஷ்டி அவளுக்கு





அருள்வாக்கு

சித்தம் ஓடிக்கொண்டே இருப்பதால்தான் இன்ப துன்ப அநுபவங்கள் ஏற்படுகின்றன. சித்தம் சஞ்சலிக்காமல் நிறுத்தி விட்டால் இவை இல்லை. ஒரே முனையை விட்டு அகலாமல் - ஏகாக்ரம் என்று சொல்வார்கள் - இருக்கச் சித்தத்தைப் பழக்குவதே சித்தசுத்தி. யோக ஸித்திக்கு இதுவே உபாயம். பொதுவாகவே நாம் 'யோகிகள்' என்று சொல்கிறவர்களைப்போல் எல்லோரும் ஆரம்பத்திலேயே சுவாச பந்தம் செய்து கொண்டு உட்காருவதற்கில்லை. ஏதாவது ஒரு நல்ல விஷயத்திலே நாம்

இருக்க வேண்டும். மனைவிக்கு உடல் ஆரோக்கியம் கடைசி பர்யந்தம் நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறது அந்த மந்திரம். கடைசி வரைக்கும் குறையக்கூடாது. ஏனென்றால், அந்திமக் காலத்தில் மனைவி போய்விட்டு, பர்த்தா மட்டும் வயசானவராக இருந்தால், ரொம்பக் கஷ்டம்!

வயதும் ஆகிவிடுகிறது; பத்னியையும் இழந்து விடுகிறார்... அப்புறம் என்ன ஆகிறது... இவருக்கென்று சொந்தமாக எதுவும் இல்லை. ஒரு வாழைப்பழம் வாங்கிக் கொள்ள வேண்டுமானால்கூட பிள்ளையைக் கேட்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு நாள் கேட்கிறார்; இன்னொரு நாள் சங்கோஜப்படுகிறார். பிள்ளையாக இருந்தாலும், தன் வயிற்றில் பிறந்தவனாக இருந்தாலும், அவனைப் பார்த்துக் கேட்கக் கஷ்டமாக இருக்கிறது. 'ஐயோ! இப்படிக் கேட்க வேண்டியிருக்கிறதே, நாம் இப்படி இருக்கிறோமே!' என்று மனத்திலே ரொம்ப கஷ்டம் ஏற்படுகிறது.

இதற்கும் மேலே ஒன்று... அந்தப் பிள்ளையுடைய மனைவி இருக்கிறாள் பாருங்கள் - இவருடைய நாட்டுப் பெண்... அவள் தன்னுடைய வசவு மொழிகளாலே, சுடு மொழிகளாலே, அப்படியே வந்து சுடுகிறாளாம்! - *ஸ்னுஷா வசன தத்தஸ்ய* - நாட்டுப்பெண் வந்து பல வார்த்தைகளைச் சுருக்கு சுருக்கென்று படும்படியாகச் சொல்கிறாள்... - இப்படி ஒருத்தர் ஒரு கிருஹத்திலே இருந்து கொண்டிருக்கிறார். இவர் என்ன பண்ணலாம்...? இந்த நிலைமையை விவரிக்கும் சுலோகத்தின் நான்காவது வரி சொல்கிறது:

ஜீவிதாது மரணம் வரம்!

இருக்கிறதைவிடப் போவதே நல்லது! போவது என்பது சுலபமாகப் போய்விட்டது; கடைசிக்காலத்தில் இருக்கக் கூடிய ஒரு நிலையைப் பார்த்தால் இப்படித் தோன்றுகிறது.

இதற்குப் பிறகாவது நமக்கு விவேகம் வர வேண்டாமா...? புருஷன் என்று பெயர் அவனுக்கு. *புரி சயனாத்* - இந்த சரீரத்துக்குள்ளே நமக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து, இதற்குள்ளே உட்கார்ந்திருக்கிறான் அவன். நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்த எம்பெருமானைப் பிரிந்து நாம் வாழலாமா? அவனையல்லவா நாம் பற்ற வேண்டும்! எல்லாம் நன்றாக இருக்க வேண்டுமானால் அவனை அணுகினால்தானே நடக்கும்?

ஆகையால் நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதைத்தான் ஆழ்வாரும் எச்சரிக்கிறார்: *'பிரியும்போது உத்தன் சரணமோ...'* என்று கேட்கிறார். ''நன்றாக இருக்கிறபோது உன் திருவடியை வந்து சரணடைந்ததில்லை. இப்போது, இந்த சரீரத்தைவிட்டு ஆத்மா வெளிக்கிளம்புகிறபோது, 'நாராயணா' என்று சொல்கிறேன்... *பிரபோ, நைமிசாரண்யத்து எந்தாய், என்னைக் காப்பாற்று!'* என்கிறார். பகவானும், இவ்வாறு சொல்கிறானே என்று சந்தோஷப்பட்டு ரக்ஷிக்கிறான். ஆகையினாலே *'புரிசயனாது புருஷ:'* என்றால், ஒவ்வொருத்தர் சரீரத்திலேயும் பாரபக்ஷமில்லாமல் இருப்பவன் - சர்வ சராசரங்களிலேயும்

பூரணமாக ஈடுபடப் பழகினால், அப்போது சித்தம் கூடிய மட்டும் அழுக்குப் படாமல் இருக்கும். சித்தத்தை நேராக அடக்க முயன்றால், அது திமிறிக் கொண்டு நாலா திசையும் பாயத்தான் செய்யும். எனவே சித்தத்தில் கவனம் வைக்காமல் ஏதாவது ஒரு நல்ல காரியத்தில் ஈடுபட்டு விட்டால், அப்போது சித்தத்துக்குச் சஞ்சலிக்க இடம் குறைந்து போகும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

இருப்பவன் பகவான் என்று பொருள். இந்த சரீரம் பகவானுக்கான சரீரம். நமது ஆத்மாவுக்கு மட்டும் இந்த சரீரம் இல்லை; உள்ளே அவன் உட்கார்ந்திருப்பதனாலே அந்தப் பரமாத்மாவுக்கும் இந்த சரீரம் சரீரமாகிறது. ஆகவே, 'மனத்தினால் நான் தூய்மையாக இருக்கிறேன், உடம்பு எப்படி இருந்தால் என்ன...?' என்று இருக்கலாகாது.

ஒருத்தர் அழுக்கு வேஷ்டி உடுத்திக் கொண்டிருக்கிறார். தலை வாரிக் கொள்வதே கிடையாது. ஸ்நானம் பண்ணுவதில்லை... நல்ல காரியங்கள் எதுவும் பண்ணுவதில்லை. ஜபம் பண்ணுவதில்லை; தபஸ் பண்ணுவதில்லை.... "சரீர சுத்தி எதற்கு? மனஸ் சுத்தியாயிருந்தால் போதாதா?" என்று அவர் கேட்கிறார்.

போதாது! ஏனென்றால் உள்ளுக்குள் பகவான் உட்கார்ந்திருக்கிறான். அவன் வாழும் ஆலயம் இது. கோயிலில் சுண்ணாம்பு தடவி, காவி தடவி, அதை ரொம்பச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். நம்பாடுவான் சரித்திரத்திலே இதெல்லாம் ரொம்ப விசேஷமாகச் சொல்லப்படுகிறது. கோயிலொழுக்கு என்றே பெயர் இதற்கு. கைசிக மகாத்மியத்திலே, ஏகாதசி மகாத்மியத்திலே சொல்லப்படுகிறது. கோயிலில் பகவானுக்குப் பூஜை பண்ணுவதைக் காட்டிலும், அவனிருக்கிற இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதுதான் முதல் பூஜை. அந்த இடத்தை ஒரே சேறும் சகதியுமாக வைத்திருந்தால், நீ என்ன பூஜை பண்ணினாலும் பகவான் ஏற்க மாட்டான். சுத்தமாக வைத்து, அந்த இடத்திலே கோலமிட்டு, பகவான் இருக்கிற இடம் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

'இந்த சரீரத்துக்குள்ளே எம்பெருமான் இருக்கிறான். அவன் வாழ்கிற ஆலயம் இது' என்ற எண்ணத்தோடு, நல்ல முறையிலே ஸ்நான ஸந்தியை முதலியவைகளால் இதைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

புரி என்றால் பட்டணம். இந்த உடலாகிற பட்டணத்திலே பகவான் இருக்கிறான் என்று இதை அபிமானிக்க வேண்டும். அதனால்தான் 'சரீரமே நமக்கு மித்ரன்; சரீரமே நமக்குச் சத்ரு' என்று சொல்லியிருக்கிறது.

அஹோபில மடத்திலே நாற்பத்து நான்காவது மூர்த்தாவிந்தராக எழுந்தருளிய அழகிய சிங்கர் இதைப் போல் நூறு விஷயம் எழுதியிருக்கிறார்.

கண்ணே சத்ரு என்றார். கண், கெட்டதிலே ஈடுபட்டால் அது சத்ரு; அதுவே பகவத் விஷயத்தில் ஈடுபட்டால் அது மித்ரன். இந்த மாதிரி இந்தச் சரீரத்துக்கு எத்தனையோ கெட்ட குணங்கள் இருந்தாலும், ஒரு நல்ல குணமும் இருக்கிறது...

அது என்ன குணம் என்றால்... பிராதஹ் காலம், அந்த பிரும்ம முஹூர்த்தத்தில் எழுந்திருப்பது என்பதை இந்த சரீரத்துக்கு நாம் ஏற்பாடு பண்ணி விட்டோமானால், அது எங்கே போனாலும் எழுந்துவிடும். அப்போது பாருங்கள்... எவ்வழிப்படுத்துகிறோமோ, அவ்வழியிலேயே இது போகும். அதனால்தான் சரீரத்துக்கு க்ஷேத்திரம் என்றும் ஒரு பெயர். க்ஷேத்திரம் என்றால் திவ்ய தேசம் என்று அர்த்தம். அது மாத்திரமில்லை. தானியம் விளையும் பூமிக்கு - நஞ்சை - புஞ்சைக்குக்கூட க்ஷேத்திரம் என்று பெயர். சரீரமாகிற க்ஷேத்திரத்தில் புண்ணியமாகிற வித்தை நட்டோமானால், புண்ணியத்தைச் சாகுபடி செய்யலாம். பாபமாகிற வித்தினை நட்டால், பாபத்தைச் சாகுபடி பண்ணலாம்! எந்த விதையை இடுகிறோமோ, அந்த விதைதானே முளைக்கும்...! ஆகவே நல்ல, உயர்ந்த விதையை இதனுள்ளே இட்டு, சிறந்ததைச் சாகுபடி பண்ணலாம். ஏனென்றால் இதற்குள்ளே எம்பெருமான் இருந்துகொண்டு நம்மை ரக்ஷிக்கிறான்.

(வளரும்)



என் இஷ்டத்துக்குத்தான் பெய்வேன் என்று அடம்பிடிக்கிற கருமேகம் மாதிரி, தனது மதம்தான் சிறந்தது என்று அடம்பிடிக்கும் ஆசாமி சூசை. திடீரென்று திறந்து கொண்ட வான்மழைக்கு, அந்த சூசை ஒதுங்கி நிற்பது, பிள்ளையார் கோவில் மண்டபத்தில்.

தர்காவின் மீதிருந்து கூட்டமாய்ப் பறந்து போகும் புறாக்கள் அமர்வது, ராஜகோபுரமொன்றில். இப்படி வசனங்களோடும், காட்சி வழியாகவும் நெத்தியடியாக பல காட்சிகள்.

காதலை மதம் மறித்துக் கொண்டு நிற்கும் காயலான் கடை காதல் கதை. ஆனால் இமேஜ் புழுதி படிந்து விடாத புதிய முகங்களை முன்னிறுத்தி, சர்ச்சைக்குரிய கதைக் களத்தில், விறுவிறுப்பான காட்சிகளின் வழியே திரைக்கதை பயணிப்பதால், படம் பனிச்சென்று புதிதாய்த் தெரிகிறது. மதம் சார்ந்த மரபுகள், குறியீடுகள் சிலவற்றை துணிச்சலோடு கேள்விக்குட்படுத்தும் இயக்குனர், கொஞ்சம் பிசகினாலும் குப்புற விழுந்து மூக்குடைத்துக் கொள்ளும் ஆபத்திலிருந்து லாகவமாகத் தப்பி, நடுநிலை வகித்து விடுகிறார்.

லிட்டில் சூப்பர் ஸ்டார் என்று சூட்டிக் கொண்ட கௌரவ டைட்டிலைக் கழற்றித் தூர வைத்து விட்டு, சைக்கிளில் கல்லூரிக்குப் போகும் கிராமத்துப் பையனாக, சக்திவேல் பாத்திரத்தில் முதல் முறையாக சிம்பு அடக்கி வாசித்திருப்பதால், தியேட்டரில் விசில் சத்தம் இல்லாமல் சீரியஸாக ரசிக்கிறார்கள்.

'ஆத்துத் தண்ணியும், குளத்துத் தண்ணியும் ஒண்ணான்னு கேக்குறியே? எல்லாம் வானத்து மழைதானப்பா' என்று சன்மார்க்கத்தைப் பிரதிபலிக்கும் பெரிய சாமியாக ராஜ்கிரண் நிறைவு. அவரிலிருந்து முற்றிலும் தம்மை வேறுபடுத்திக் காட்டியிருக்கும் சூசையாக நாசர், பண்பட்ட நடிப்பை நல்கியிருக்கிறார். விவேக் வழியில் ஆபாச நகைச்சுவைக் காட்சிகளைப் புகுத்தியிருக்கும் வடிவேலு, 'கடி'வேலு ஆகிவிட்டிருக்கிறார்.

நாகர்கோவிலின் பசுமையை மாற்றுக் குறையாத குளிர்ச்சியோடு நமக்குப் படையல் வைக்கும் ப்ரியனின் ஒளிப்பதிவும், ஒவ்வொரு காட்சிக்கும் உயிரூட்டியிருக்கும் ஹாரிஸ் ஜெயராஜின் பின்னணி இசையும் பிரமாதம்.

— விஷுவல் தாசன்

● ஆவரெஜ்

முக்கிய உறுப்புகள் மூன்று



முழுமையான பராமரிப்பின் முகவரி ஒன்று

விக்ரம் மருத்துவமனை, இந்தியாவில் மட்டுமின்றி அமெரிக்கா, ஐரோப்பா, வளைகுடா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளிலும் உள்ள எண்ணற்ற மருத்துவமனைகளால் பரிந்துரை செய்யப்படும் ஓர் **ENT** மருத்துவமனை. மேலும், இரத்தக்கசிவு மற்றும் காயத் தழும்புகள் இல்லாத அதிநவீன லேசர் சிகிச்சைக்காக, **KTP / 532 AURA** மற்றும் **CARL ZEISS SENSERA** மைக்ரோஸ்கோப் கருவிகளை, தென் ஆசியாவிலேயே முதன்முறையாக கோவையில் அறிமுகப்படுத்திய பெருமையையும் பெற்றுள்ளது.



சென்சரா மைக்ரோஸ்கோப்

விக்ரம் மருத்துவமனையைச் சேர்ந்த உலகப்புகழ் பெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்கள், அறுவை சிகிச்சை, செயல் விளக்கங்கள் மற்றும் சிறப்புரைகளுக்காக உலகெங்கும் அழைக்கப்படுகிறார்கள்.

சிகிச்சைகளில் 32 ஆண்டுகால நிபுணத்துவம் ... அதிநவீன தொழில்நுட்பம் ...
பூரண குணமடைந்த பல தலைமுறைகள்...

காக்லியர் இம்பிளாண்ட் திட்டம் : கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு **PGV** ரோட்டரி இண்டக்ரல் காது இன்ஸ்டிடியூட்டில் தீவிர பேச்சு பயிற்சி அளிக்கப்படுகிறது. காக்லியர் இம்பிளாண்ட் என்பது கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட **பயானிக்** காது ஆகும். இதன்மூலம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களும் கேட்கும் திறனை மீண்டும் பெறலாம்.

சிறப்பு சிகிச்சை முறைகள்

காது : ● காது கேளாமை, தலைசுற்றல், சீழ் வடிதல் மற்றும் முகவாதம் போன்றவற்றிற்கு நுண்ணறுவை சிகிச்சை ● கம்ப்யூட்டர் ஆடியோமெட்ரி (காது பரிசோதனை) மற்றும் டிம்பனோமெட்ரி ● காது கேளாமையை ஆரம்பத்திலேயே கண்டறிய, குழந்தைகளுக்குப் பரிசோதனை ● B.E.R.A. /O.A.E / S.S.E.P ● டிஜிட்டல் ஹியரிங் எய்ட் மையம் ● காக்லியர் இம்பிளாண்ட் மையம் ● நீரிழிவு நோயினால் காது கேட்காமல் போவதை தடுக்கும் பரிசோதனை.

மூக்கு : ● சைனஸ் / மூக்கு சதை வளர்ச்சி சிகிச்சை ● எண்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி ● முகம் / மூக்கிற்கான பிளாஸ்டிக் சர்ஜரி ● குறட்டை நீக்கலுக்கு லேசர் சிகிச்சை ● ஸ்லீப் லேப் ● தலைவலி/ அலர்ஜி சிறப்பு சிகிச்சை மருத்துவ மையம்.

தொண்டை : ● வீடியோ எண்டோஸ்கோப்பி ● குரல்வளை நுண்ணறுவை சிகிச்சை ● குரல் மாற்று சிகிச்சை/வழக்கமான குரலை தக்க வைக்கும் சிகிச்சை ● தைராய்டு மற்றும் கழுத்து கட்டி சிகிச்சை ● பேச்சு-மொழி சிகிச்சை ● மாஸ்டர் ENT சிறப்பு பரிசோதனை ● முழுமையான புற்று நோய் தடுப்பு பரிசோதனை

மருத்துவ ஆலோசனை பெற விரும்புவோர்முன்பதிவு செய்ய வேண்டியது அவசியம்

விக்ரம் மருத்துவமனை & ENT ஆராய்ச்சி மையம்

69, மேற்கு வெங்கடசாமி ரோடு, ஆர். எஸ். புரம், கோயமுத்தூர் – 641 002. தமிழ்நாடு. இந்தியா. போன் : +91-422- 2550633, 2546387, 2550133 மொபைல் : +91-98431-50063 ஃபேக்ஸ் : +91-422 - 2545384 E-mail : vikram_hospital@yahoo.com

• டாக்டர் P. G. விஸ்வநாதன் M. S., F.R.A.C.S., F.I.C.S. D.L.O. • டாக்டர் S. பழனிநாதன் M.B., M.S.(E.N.T)
•டாக்டர் அருணா விஸ்வநாதன் M.B., M.S.(E.N.T), F.A.G.E. •டாக்டர் அஞ்சனா விஸ்வநாதன் M.B., M.S.(E.N.T), F.A.G.E.
வருகை மருத்துவர்கள் • டாக்டர் W.J. கார்லே M.D. (அமெரிக்கா) • டாக்டர் கார்ல் ஹூராஸ் M.D. (அமெரிக்கா) • டாக்டர் கலோசெரோ சார்டோ M.B., M.S(இத்தாலி)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

